ஆதிதிராவிட -

அருளடியார் சேந்தனார்...

கவிஞர் நாரண.மணிவண்ணன் M.A.,



தேசிய விஞ்ஞான பப்ளிகேஷன்ஸ்

ஆதிதிராவிட -
அருளடியார் சேந்தனார் .....

கவிஞர் நாரண.மணிவண்ணன் M.A.,



தேசிய விஞ்ஞான பப்பளிகேஷன்ஸ்

தேசிய விஞ்ஞானப் பதிப்பகத்தின் நூல்கள் கிடைக்குமிடங்கள்

1. **தமிழ்வேந்தன் பதிப்பகம்**
   9(81-சி) முனுசாமி நகர்
   கிழக்கு கந்தசாமிபுரம்
   உளுந்தூர்பேட்டை - 606 107
   செல் - 9361611513

2. **புத்தர் அறிவுலகம்**
   6, 3வது நிழற்சாலை
   அசோக் நகர்
   சென்னை - 600 083
   போன் - (044) 24910865

ஆதிதிராவிட –
அருளடியார் சேந்தனார் .....

ஆன்மீக வரலாற்றின் வரலாறு



தில்லை



திருவிடைக்கழி

கவிஞர் நாரண.மணிவண்ணன் M.A.,
தேசிய விஞ்ஞான பப்பளிகேஷன்ஸ்
No.31, இசைத்தமிழ் நிலையம், சிங்காரகுப்பம்,
கிள்ளை - 608 102. சிதம்பரம் வட்டம் கடலூர் மாவட்டம்

நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர்	...	ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார்
நூலாசிரியர்	...	கவிஞர் நாரணமணிவண்ணன், M.A.,
நூல் வகை	...	ஆன்மீக வரலாறு
நூல் உரிமை	...	ஆசிரியருக்கு
பதிப்பு ஆண்டு	...	இரண்டாம் பதிப்பு 2009
நூல் அளவு	...	டெம்மி 1x8
நூல்வெளியீடு	...	தேசிய விஞ்ஞான பதிப்பகம் No.31இசைத்தமிழ் நிலையம் சிங்காரகுப்பம், கிள்ளை-P.O. Pin: 608 102 சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்
ஒளி அச்சு	...	
அச்சிட்டோர்	...	மணிபாரதி அச்சகம் பு.எண் : 47,மேலத்தேர் வீதி சிதம்பரம். ✆ 04144 221603

விலை ரூ 100.00

Book Name	-	Adhi Thivavida Aruladiyar Senthanar
Editor	-	Poet Narana.Manivannan M.A.,
Book Subject	-	Spiritual History
Book Proprietor	-	Narana.Manivannan
Printing Year	-	Second Print 2009
Book Size	-	Demy 1x8
Book Realise	-	National Scientific Publication **No.31, Esai Tamil Nilayam, Singarakuppam,** **Killai (P.O.) Chidambaram Tk, Cuddalore Dt.** **Pin : 608 102**
Light Printing	-	
Printed at	-	ManiBharathi Achagam 47, West Car Street, Chidambaram. Ph : 04144 221603

Rupees 100.00

நூலாசிரியர் குறிப்புகள்

பெயர்	:	கவிஞர் நாரணமணிவண்ணன், M.A.,
பிறப்பு	:	01-06-1942, வரகூர், அண்ணாமலை நகர் - PO
பெற்றோர்	:	திருமதி, பட்டு அம்மாள் சேப்பன் நாராயண்
தொடக்கக்கல்வி	:	1 முதல் 5ஆம் வகுப்பு (1952 - 1957) தொடக்க நலப்பள்ளி, வரகூர்
உயர் தொடக்கக் கல்வி	:	அரசுத் தேர்வு E.S.L.C. (1958-1959 RCT School) சிதம்பரம்
புலவர் புகுமுக வகுப்பு	:	ஆறுமுகநாவலர் தமிழ்க் கல்லூரி (1960), சிதம்பரம்
ஆசிரியர் பயிற்சி	:	2-ஆண்டுகள் அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி
(ஹையர் கிரேடு)		சின்னசேலம், (1960-1962)
புலவர் புகுமுக	:	
வகுப்புத் தேர்வு (Entrance)	:	அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1964)
பள்ளி இறுதி வகுப்பு	:	அரசுத்தேர்வு (S.S.L.C) 1966
தமிழ் வித்வான் (Preliminary)	:	சென்னைப் பல்கலைக் கழகம் (1969-1970)
செக்கண்டரி கிரேட்	:	
தேர்வு (Senior Grade)	:	சிறப்புத் தகுதியுடன் முதல் வகுப்பு (1984)
M.A., வரலாறு (1991)	:	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
தொடக்கப்பள்ளி ஆசிரியர் பணி	:	38 ஆண்டுகள் (2000ல் ஓய்வு)
எழுதிய நூல்கள்	:	பிஞ்சுக் குறும்புகள், மழலைத் தும்பிகள், இனிப்பும் சிரிப்பும், தேன்வெள்ளம்(குழந்தைக்கவிதைகள்) முதிர்ச் சுவைக்கனிகள் (புதுக்கவிதை) வருங்காலம், அனல்காற்று மனப்போராட்டங்கள் (சமூக நாடகங்கள்) பக்த சேந்தனார் (வரலாற்று நாடகம்) அதிதிராவிட அருளடியார் சேந்தனார் (வரலாறு)
பத்திரிகைத் தொடர்புகள்	:	வேட்கோவன், கோகுலம், கல்கி, தினமணி தினமணிகதிர், மற்றும் பல வாரமாத இதழ்கள் பதிப்பக வெளியீடுகள்.

கவிஞர்கள் தொடர்பு	:	1966 முதல் சென்னை குழந்தை எழுத்தாளர் சங்க நிரந்தர உறுப்பினர். குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா, பெருங்கவிஞர் வாணிதாசன், விஞ்ஞான எழுத்தர் பெ.நா. அப்புஸ்வாமி, பேராசிரியர் ஆர்.கே.விஸ்வநாதன், சங்கீத . பூஷணம் சிற்பி ஆ.க. முத்துக்குமாரசவாமி, டாக்டர் மு. தம்பிராசா, மற்றும் பல எழுத்தாள நண்பர்கள்.
பெற்ற விருதுகள	:	பெரியார் நூற்றாண்டு விழாவின் கட்டுரைப் போட்டியில் முதன்முதலில் குழந்தைத் தொழிலாளர் பற்றிய பிரச்சினைகளை விரிவாக எழுதியதால் சென்னை பெற்றோர் ஆசிரியர் சங்கம், தந்த சிறப்பு பாராட்டு இதழ், தலித் சாகித்ய அக்கடாமியின் அம்பேத்கர் விருது (2000) விளையாட்டு, இசை, நடிப்பில் முதலிடம் பெற்ற பரிசுகள். உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கம் தந்த (2004) மழலைக் கவிஞர் விருதும் பாராட்டும்.
வெளிநாட்டு பயணம்	:	மலேசியா, சிங்கப்பூர் (கவிதைகள் வெளியிடப்பட்டன)
நூல் வெளியீட்டு நிறுவனர்		தேசிய விஞ்ஞானப் பதிப்பகம், சிங்காரகுப்பம்

31, இசைத்தமிழ் நிலையம்,
கிள்ளை - 608 102
கடலூர் மாவட்டம்,
போன் 249218 செல் 9360597690

பொருளடக்கம்

சமர்ப்பணம்

I. வாழ்த்துரைகள் -

1. S.கிருஷ்ணமூர்த்தி, B.A.,L.T. தலைமை ஆசிரியர்

2. டாக்டர் திரு.ஏ. பத்மநாபன், I.A.S.,
முன்னாள் தலைமைச் செயலர், ஆளுநர்

3. அணிந்துரை - கலைமாமணி வரகூர்
திரு.ஆ.க.முத்துக்குமாரசாமி

4. வாழ்த்துரை -
பேராசிரியர் டாக்டர் ப.சீனிவாசன்

5. ஆய்வுரை - டாக்டர் உ. சுப்பிரமணியன்
(நன்னீர் குளம் ஆசிரியர்)

6. என்னுரை- நூலாசிரியர்

II. அருளடியார் சேந்தனார் பற்றிய பழங்கால -
தற்கால இலக்கியச் சான்றுகள்.

1. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் -
நம்பியாண்டார் நம்பிகள்.

2. சித்தாந்த சாத்திரம் திருக்களிற்றுப்படியார் -
உய்யவந்த தேவநாயனார்.

3. சிவஞானபோதச் சிற்றுரை -
மாதவச் சிவஞான சுவாமிகள்.

4. தமிழலங்காரம் - சிற்றிதழ்.

5. சேந்தனளித்த திருவமுது -
அறிஞர் கே.எம்.வேங்கட ராமய்யா
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6. திருவிசைப்பா ஆசிரியர்கள் -
பேராசிரியர் க.வெள்ளை வாரணனார்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

III. ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார்

1. நூல் அறிமுகம்
2. சேந்தனாரின் பிறப்பும், இளமையும்
3. சேந்தனாரின் இல்லறப்பெருமைகள்
4. சேந்தனார் சிறைபடுதல்
5. சேந்தனார் விடுதலை அடைதல்
6. சேந்தனாரின் சிதம்பர வாசம்
7. சேந்தனாரின் அன்பின் திறம்
8. சேந்தனாரின் அற்புதச் செயல்கள்
9. தில்லைத் திருப்பல்லாண்டு அருளல்
10. திருவீழிமிழலை திருவிசைப்பா அருளல்
11. திருவாவடுதுறை திருவிசைப்பா அருளல்
12. திருவிடைக்கழி திருவிசைப்பா அருளல்
13. மடம் அமைத்தலும் சமூகத் தொண்டும்
14. இயற்கை எய்துதல்

IV. ஆதிதிராவிட அருளடியார் சேந்தனாரின்
அருட் பாடல்கள் - கருத்துரைகள்.

1. அருளடியார் சேந்தனார் வாழ்த்து-ஆ.க.முத்துக்குமாரசாமி
2. சேந்தனார் யார் - நூலாசிரியர்
3. சேந்தனாரின் தில்லைத் திருப்பல்லாண்டு.

4. சேந்தனாரின் திருவீழிமிழலை திருவிசைப்பா
5. சேந்தனாரின் திருவாவடுதுறை திருவிசைப்பா
6. சேந்தனாரின் திருவிடைக்கழி திருவிசைப்பா.

V. தினமணியில் நூலாசிரியர் எழுதிய ஆசிரியர் கடிதங்களின் சமூகக் கண்ணோட்டம்.

VI. பிற்சேர்க்கை :

- ❖ எனது கருத்துரைகட்கு அறிஞர்பெரு மக்களின் ஆணித்தரமான, ஆதாரமான கருத்துக் குவியல்கள்.
- ❖ தில்லையின் ஆடல்வல்லானும் திருப்பல்லாண்டு பாடல் வல்லானும்.
- ❖ இன்றைய தமிழ்க் குழந்தைகளின் பெயர் மாற்றங்களின் மூலம், இந்தியப் பண்பாட்டையும் இந்துமதக் கலாச்சாரத்தையும், ஆன்மீகத்தையும் கூட மேன்மைப் படுத்தலாம்; மெருகேற்றலாம்; புதுமைப் படுத்தலாம்; பொற்காலம் ஆக்கலாம்.
- ❖ திருமுறை வாணர்களுக்கும், அரசுக்கும் பொதுமக்ககளுக்கும் வேண்டுகோள்
- ❖ சேந்தனார் குருபூசை விழா
- ❖ நன்றி உரைகள்.

சமர்ப்பணம்

தீண்டாமையின் துயரங்கள் அதிகரித்த கால கட்டங்களில், தாழ்த்தப்பட்ட மக்களிடையில் பிறந்து, வேறு எவரைக் காட்டிலும் உழைப்புடன் கூடிய கடமை உணர்ச்சியுடன் வேதங்களைப் போதிக்கும் விற்பன்னர் ஆகவும், பகுத்தறிவின் அறிஞர் ஆகவும், வழி நடத்தும் ஆசான் ஆகவும், தூய்மையான சமூகத் தொண்டுகள் செய்து முன்னேற்றத்தை ஓரளவு மீட்டெடுத்த கல்வியின் ஆழ்சமுத்திரங்கள் ஆன பஞ்சமச் செல்வர்களாம்,

தெய்வத்திருமகன்	°	காசி. விஸ்வநாதன்
மகா பண்டிதர்	°	க.அயோத்தி தாசர்
தவத்திரு ஸ்வாமி	°	A.S. சகஜாநந்தர்

ஆகியோரின்
முழுநினைவாக இச்சிறு நூல் துலங்குக.
கவிஞர் **நாரண.மணிவண்ணன்,** M.A.,

DEDICATION

When the era of atrocities, cruelty and severity of the stigma of untouchability was in its peak, condemning its vigour and adverse impact in Hindu Society, vehemence, three renowned liberators and saviours of untouchables of Panchamaselvers namely.

1. Deiva Thirumagan Kasi. Viswanathan,
2. Maha Pandithar K.Ayothidasar, and
3. Thavath Thiru Swami A.S.Sahajanandha Adigalar

emerged with their note worthy literary contributions in the area of Tamil and Sanskrit literature.

They were shining and illuminating as esteemed and reverential dalit scholars and revolutionaries, since they were ceaselessly rendering yeomen, commendable, and exemplary service for redeeming and reclaiming the untouchables from the thavaldom of untouchability, and other inhuman ill-treatments.

With a view to pay my homage and respect to the Dalit services of the above three enlightened scholar-statesman, I take immense pleasure, enthusiasm and zeal to dedicate this book-let to their services and sacrificed.

Poet Naranamanivannan, M.A.,

WHO IS SENTHANAR?

SENTHANAR WAS A DALITH ADIGALAR WHO LIVED IN THE TENTH CENTURY A.D. HE IS WELL SPOKEN OF IN THE 'PANNIRU THIRUMURAI'. SENTHANAR WAS PRAISED AS 'PANDAI PARAI SENTHAN' BY NAMBIYANDAAR NAMBI. SENTHANARHASCOMPOSED'THILLAITHIRUPPALLANDU' AND THREE 'THIRUVISAIPPAA PATHIGAI'. WITH THE POWER OF HIS SONGS, HE MADE TO RUN THE THAER (CHARIOT OF GOD).

THILLAIKOOTHAN (LORD NATARAJA) WENT TO HIS HUT AND TASTED THE RAGHIGRUEL OFFERED BY SENTHANAR. EVERDAY HE ATE HIS FOOD ONLY AFTER OFFERING FOOD TO ADIYARS, THE DEVOTEES OF LORD NATARAJA. HE FORMED A MUTT AND GAVE EDUCATION TO DALITS. RAJARAJACHOLA OF CHOLA DYNASTY HONOURED SENTHANAR BY ADDING SENTHANAR'S 47 SONGS IN THE NINETH THIRUMURAI AND GIFTED HIM LANDS. LORD VINAYAGA RELEASED SENTHANAR FROM THE PRISON. SO VINAYAGA HAS BECOME SIRAIMEETA VINAYAGA.

HE WORKED AS AN ACCOUNT OF PATTINATHAAR ALLIES THIRUVENKADSR. AT LAST HE HAD MINGLED IN THE JOTHI (FLAME) IN LORD MURUGA'S TEMPLE IN THIRUVIDAIKAZHI. EVEN NOW WE CAN BEHOD HIS STATUE AND TOMB INSIDE THE SAME TEMPLE.

Translation : **PROF.S.JAGAGEEVANRAM,** M.A., B.Ed.,

பகுதி - I

வாழ்த்துரைகள்

---

1) S.KRISHNAMOORHTY, IYAR B.A.,L.T.,
GOVERNMENT TEACHER TRAINING SCHOOL
CHINNA SALEM (1960 - 1962)
SRI N.MANIVANNAN HAS JUST PASSED HIS
B.T.S.L.C. EXAMINATION, MARCH 1962.
HE HAS A TASTE IN TAIL LITERATURE AND COMPOSITION.
HE HAS ALSO HISTRIONIC TALENTS AND MUSICAL VOICE.
HE HAS RAISED HIMSELF BY HIS OWN EFFORTS.
I WISH HIM SUCCESS IN LIFE AND ENDEAVOUR.

(Late)**S.Krishnamoorhty**, B.A.,L.T
Headmaster, Chinnaselam

2- **டாக்டர் ஏ.பத்மநாபன்** I.A.S.,
தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர்,
மிஸோராம் ஆளுநர்.

சேந்தனாரைப் பற்றி கவிஞர் நாரண மணிவண்ணன் அவர்கள் ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார். என்ற நல்ல நூலைப் படைத்துள்ளார். பேராசிரியர் க.வெள்ளைவாரணனார், கலைமாமணி சங்கீத பூஷணம் ஆ.க.முத்துகுமாரசாமி, திரு.கே.எம் வேங்கடராமையா, முனைவர் ராஜா போன்ற அறிஞர்களும், சேந்தனாரைப்பற்றி குறிப்புகள் எழுதியுள்ளார்கள். நான் இக்கட்டுரையை அமுத சுரபி தீபாவளிமலரில் 2002-ல் எழுதுதற்கு இவையெல்லாம் மிகவும் உதவியாக இருந்தன.

டாக்டர் ஏ.பத்மநாபன்,
தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர்,
மிஸோராம் ஆளுநர்.

3- கலை மாமணி சங்கீத பூஷணம் சாகித்தியகர்த்தா,
சிற்பக்கலைஞர்

ஆ.க. முத்துக்குமாரசாமி உடையார், வரகூர்
அண்ணாமலை நகர், சிதம்பரம்.

திருத்தொண்டர் புராணத்தில் பேசப்படும் சிவனடியார் அறுபத்து மூவர், இவர்களில் பதினெட்டாம் அடியாரான பெருமைக்குரியவர் நந்தனார் என்னும் திருநாளைப் போவார். இவர் ஆதிதிராவிட சமூகத்தில் தோன்றியவர் என்பதை யாவரும் அறிவர்,

தில்லை நடராசப் பெருமானை வழிபட்டுத் தில்லையிலேயே இறைவன் திருவடியடைந்த ஆதிதிராவிட அடியார்கள் மூவர். நந்தனார், பெற்றான்சாம்பான், தில்லைவெட்டியான் என்னும் இவர்களைப் பற்றி நந்தனார் சரித்திரக்கீர்த்தனை இயற்றிய புகழ்பெற்ற தமிழிசை நால்வர்களுள் ஒருவரான போபாலகிருஷ்ண பாரதியார். "அரிய புலையர் மூவர் எனச் சிறப்பித்துப்பாடியுள்ளர். "சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா எனத்தொடங்கும் இப்பாடலைச் சங்கீதப் பிரம்மம்மான தியாகராச சுவாமிகளிடம் பாரதியார் பாடிக்காண்பித்து அவரால் பாராட்டப் பெற்றார் என்பதை இசையுலகம் நன்கு அறியும்.

திருஞானசம்பந்தரின் பக்திக் குழுவில் சேர்ந்து தலங்கள் தோறும் சென்று அவருடன் அமர்ந்து யாழ் வாசித்துத் தொண்டு செய்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெற்ற இவரும் "பாணர்" என்னும் இசைக் கலையில் வல்ல ஆதிதிராவிட வகுப்பைச்சேர்ந்தவரே எனக் கூறுவர். திருப்பாணாழ்வார் என்னும் வைணவ அடியாரும் இங்குக் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

ஆதிதிராவிட இனத்தில் தோன்றிய மற்றொரு புகழ்பெற்ற சிவனடி போற்றிய அருட்கவியடியார் சேந்தனார். இவர் பார்புகழ் பட்டினத்தடிகளின் கணக்கராக இருந்து அடிகள் கட்டளையிட்டவாறு நிதியறையைத் திறந்துவிட்டு அங்கிருந்த செல்வமனைத்தையும் ஊரார் கொள்ளை கொள்ளச் செய்தார் என்பது வரலாற்றுச் செய்தி, அதனால் அரசனால் சிறையிடப்பட்ட சேந்தனார் விநாயகப்பெருமான் திருவருளால் சிறைமீட்கப்பட்டார்.

இதனால் விநாயகருக்குச் "சிறை மீட்ட விநாயகர்" விலங்கு தெறித்த விநாயகர் என்னும் பெயர்கள் வழங்கலாயின.

பின்னர் பட்டினத்தடிகள் பணித்தவண்ணம் குடும்பத்துடன் தில்லைப்பதிக்கு வந்த சேந்தனார் விறகு விற்பதால் வரும் ஊதியத்தைக் கொண்டு நாள் தோறும் சிவனடியார் ஒருவருக்கு உணவளிக்குங் கடமையை மேற்கொண்டு வாழ்ந்தார். இந்நிலையில் ஒருநாள் அடியராக வந்த இறைவனுக்குக் களியமுது படைத்துண்ணச் செய்தும் மழை பெய்ததால் சேற்றிலழுந்திய திருவாதிரைத் தேரை திருப்பல்லாண்டு பாடி வடம் பிடிக்காமலேயே தேர்நிலைக்கு வரச்செய்தும் இவர் அருளாளராக விளங்கினார்.

தில்லையில் நடைபெறும் திருவாதிரைத் திருவிழாவில் எழுந்தருளும் இறைவன் பின்னால் நின்று யான் பல ஆண்டுகள் திருமறை இசை வாணர்களுடன் திருப்பல்லாண்டு பாடித் திருவீதி வலம் வந்துள்ளேன்.

சேந்தன் என்பது முருகக்கடவுளின் நாமங்களுள் ஒன்று இப்பெயரை இவருக்குச் சூட்டியுள்ளதால் இவரது பெற்றோர்கள் முருகவழிபாட்டில் திளைத்தவர்கள் என்பது தெரிகிறது.

அருட்கவியடியார் சேந்தனார் இறைவன் திருவடிடைந்த தலம் திருவிடைக்கழி. இத்தலக் கோயிலில் சேந்தனார் திருவுருவை அமைக்க இந்து அறநிலையத்துறை ஆணையராக இருந்த திரு ஆறுமுகம்பிள்ளை யவர்கள் முயன்றார்கள். அவர் மைத்துனர் "திருவிடைக்கழி அடியார்" திரு மங்கலமுடையாரவர்களின் வேண்டுகோளின் படி யான் சேந்தனார் உருவவைச் சான்றுடன் கருங்கல்லில் அமைத்து வழங்கினேன். ஆன்றோர்களால் அது அங்கு நிறுவப்பட்டது.

பெருமை வாய்ந்த சேந்தனாரின் வரலாற்றை விளக்கமாக வரைந்து ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார்" என்னும் பெயரில் வரகூர் கவிஞர் நாரணமணிவண்ணன் தேசிய விஞ்ஞானப் பதிப்பகம் எனும் தன் சொந்தப் பதிப்பகத்தின் மூலம் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். நூல் அறிமுகம், பிறப்பும் இளமையும், இல்லறப் பெருமைகள், சிறைபடுதல், விடுதலை அடைதல் சிதம்பரவாசம். அன்பின்திறம். அற்புதச் செயல்கள், தில்லைத் திருப்பல்லாண்டு அருளல், திருவீழிமிழிலை திருவிசைப்பா அருளல் திருவாவடுதுறை திருவிசைப்பா அருளல், திருவிடைக்கழித் திருவிசைப்பா அருளல், மடம் அமைத்து

சமூகத் தொண்டு செய்தல், இயற்கை எய்துதல் ஆகிய பதினான்கு தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது. பாம்பன் ஸ்வாமிகள் பல்லாண்டுகள் தங்கியிருந்து பல அருள் நூல்களைப் பாடி அருளிய சிதம்பரதலத்தைச் சார்ந்த வரகூர் என்னும் எங்கள் சிற்றூரைச் சேர்ந்தவர் திரு நாரண.மணிவண்ணன். ஆர்வமுடன் பணிசெய்து ஓய்வு பெற்ற பள்ளிக்கூட ஆசிரியர், தமிழ் மொழி மீது அளவற்ற பற்று கொண்டவர், இசைக் கலையில் நாட்டம் உள்ளவா; நாடகக்கலை விற்பன்னர்; நூல்வெளியீட்டாளர்; கவிதை புனையும் திறமையுடையவர். 1958 ஆம் ஆண்டு வாக்கில் சிதம்பரத்தில் யான் "வேட்கோவன்" மாத இதழ் நடத்திய போது இவர் எனக்குத் துணையாக இருந்து அவ்விதழில் பல கவிதைகளும் கட்டுரைகளும் எழுதிவெளியீட்டுள்ளார். கோகுலம் கல்கி, தினமணி, தினமணிகதிர் போன்ற பல இதழ்களிலும் இவர் படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

வருங்காலம், அனல்காற்று மனப்போராட்டங்கள், பக்த சேந்தனார் முதலிய வரலாற்று - சமூக சீர்திருத்த நாடகங்களை வரைந்து இவர் அரங்கேற்றம் செய்துள்ளார்.

இப்போது இவர் இயற்றி வெளியிடும் அருளடியார் சேந்தனார் நூல் நல்ல உரைநடையில் உள்ளது. பன்னிருதிருமுறையில் ஒன்பதாம் திருமுறையில் சேர்ந்த திருவிசைப்பா. திருப்பல்லாண்டு பாடல்கள் இயற்றிப்பாடித் தொண்டு செய்தருள் பெற்ற சேந்தனாரின் வரலாறு திருமுறை வாணர்களுக்கு மட்டும் தெரிந்திருந்தது. இன்று பொதுமக்களும் கண்டின்புறும் வகையில் இந்நூலை இயற்றிய நாரணமணிவண்ணன் அவர்களைப் பாராட்டுகின்றேன். இந்நூலைத் தமிழக மக்கள் படித்துப்பயன் பெறுவார்களாக.

வாழ்க நாரண.மணிவண்ணன், தமிழ்த்தொண்டு.

வளர்க இவரது எழுத்துப்பணி.

அன்புடன்,

ஆ.க.முத்துக்குமாரசுவாமி (லேட்)

4- பேராசிரியர் டாக்டர் **திரு. ப.சீனிவாசன்**
எஸ்.ஆர்.நகர் மு.கா. தோட்டம்,
சிதம்பரம்.

சிதம்பரம் வட்டம் தென்கீழ்த்திக்கில் வங்கக் கடற்கரை வளம் சூழ்ந்த - கிள்ளை நகரம் சார்ந்த பக்கிங்காம் கால்வாய்க்கரையில் அமைந்துள்ள சிங்காரகுப்பம் எனும் சிற்றூரில் வாழும், கவிஞர் நாரணமணிவண்ணன் படைத்தளித்த ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார் என்னும் இந்த அரிய வரலாற்று நூலைப் படித்துக் களித்து, இவ்வாழ்த்துரையை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

தில்லையம்பதியில் நடராசப் பெருமான் சந்நிதியில் அருளடியார் சேந்தனாரின் தில்லைத் திருப்பல்லாண்டு பதிகத்தைத் தினமும் பாடி மகிழ்ந்து பூசையை முடிக்கும் பக்தர்கட்கு அதனைப்பாடி அருளிய சேந்தனார், தஞ்சை திருவெண்காட்டை அடுத்த திருப்பிடவூர் என்பதும். அவ்வடியார் பழங்குடியின் முதன்மையான ஆதிதிராவிடர் குடியைச் சார்ந்தவர் என்பதும் தற்போது தமிழகம் மட்டுமல்ல இந்தியா முழுவதும் தெரிந்துவிட்ட ஓர் உண்மையாகும்.

இந்நூலாசிரியர் ஆன்மீக உலகம் அறியாதிருந்த சேந்தனார் வரலாற்றை விரிவாக எழுதி (16-09-2001ல்) சிதம்பரம் அரசினர் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பாரதிய தலித் சாகித்ய அக்கடாமியின் மூன்றாவது மாநில எழுத்தாளர் மாநாட்டில் பலர் முன்னிலையில் கலைமாமணி வரகூர் ஆ.க.முத்துக்குமாரசாமி அவர்களால் முதல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

தில்லைக் கூத்தன் அடியார் சேந்தனார் குடிசைக்குச் சென்று களி உணவு உண்ட நிகழ்ச்சியும் தில்லைத் திருவாதிரைத் தேர் ஓடாமல் சேற்றில் அழுந்தி நின்றுவிட சேந்தனார், திருப்பல்லாண்டு பாட தேர் ஓடிய நிகழ்ச்சியும் நூல் ஆசிரியரின், ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார் என்னும் நூல் ஒன்று வெளிவந்த பின்னரே பாமரர்க்கும் சேந்தனார் பறையர் என்பது தெரியவந்தது, சேந்தனார் தீண்டத்தகாதவர் என்ற

ஒரு காரணத்திற்காகவே, சிதம்பர ரகசியமாக வெளிவராமல் செய்துவிட்டனர் போலும். எனினும் பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் இரண்டாம் இடத்தில் அவரின் பாடல்களைச் சேர்த்துப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். இதற்காக வேனும் திருக்குலத்துப் பறையர்கள் மகிழ்ச்சியடையலாம்.

அருளடியார் சேந்தனார் என்ற இந்நூல் அனைவரையும் பக்தியில் ஈர்க்கும் வண்ணம் உள்ளது. இவ்வரலாற்றை எழுதிய நூலாசிரியர் பாமர மக்களின் மனத்தில் தான் எண்ணிய கருத்தைப் பதிய வைக்கும் உண்மையை இந்நூலின் மூலம் அறியலாம்.

சேந்தனாரின் சொந்த ஊரான திருப்பிடவூர் முதல் திருவெண்காடு, தில்லையம்பதி, திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி வரையிலான அனைத்து சிவத்தலங்களிலும் சேந்தனாருடன் தொடர்புடைய ஏனைய சிவத் தொண்டர்களையும் தலச் சிறப்புகளையும் எழுதிக்காட்டி உள்ளார்.

சேந்தனார் ஓர் ஆதிதிராவிடர் என்ற செய்தி நூலாசிரியருக்குக் கிடைத்ததும். இது பற்றிய விவரங்களை கலைமாமணி வரகூர் ஆ.க. முத்துக்குமாரசாமி அவர்களிடம் வாய்மொழியாகக் கேட்டுத் தெளிவு பெற்றார் உடனடியாகச் செயலில் இறங்கிய நூல் ஆசிரியர் சேந்தன் பிறந்த திருப்பிடவூர், வாழ்ந்த நாங்கூர், தில்லை, திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய தலங்கள் அமைந்துள்ள ஊர்களுக்கு நேரில் சென்று தலவரலாறுகளைத் தேடிக் கொணர்ந்து துருவித்துருவி ஆராய்ந்துள்ளார். தில்லைத் திருப்பல்லாண்டு பதிகம் ஒன்றும் திருவிசைப்பா திருப்பாடல்கள் அனைத்தும் தொகுத்து கருத்துரைகள் எழுதி ஒரு முழு நூலாகச் செய்து வெளியிட்டுள்ள ஆசிரியரின் வரலாற்று அறிவைப் பாராட்ட வேண்டும்.

எந்த திருக்குலமான பறையர்குல மக்கள் மீது படிந்திருந்த இழிவையும், அவமானத்தையும் தனது சிவத் தொண்டால் - சிவநெறியால் நீக்க வேண்டுமென்றெண்ணி பக்தனாக ஆனாரோ, அந்த நோக்கம் நிறைவேறும் வண்ணம் பறையர்கட்கு அவரே மடத்தின் மூலம் கல்வித் தொண்டுகள் ஆற்றிய நிகழ்ச்சிகள் எல்லாம் இந்நூலில் பாராட்டும் வண்ணம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தீண்டாமைக் கொடுமையால் தொடமுடியாத ஆதிதிராவிட அருளடியார், சேந்தனாரைப் புனிதமாகத் தொட்டு வரலாறு படைத்ததால் ஆசிரியரால் பறையர்குலத்துச் சேந்தனாரின் இறைஞானத்தை உலகறியச் செய்ததுடன் தன்னையும் உயர்த்திக் கொண்டுள்ளார். சேந்தனார் தன் குடிமக்கள் கடைத்தேற வழிகாணத் துடித்தது போல நூல் ஆசிரியரும், இதன் மூலம் ஆதிதிராவிடர் குலத்துக்குப் பெருமை தேடியதில் வெற்றி பெற்றுள்ளார்.

சென்ற ஆண்டு (2000 டிசம்பர் 6) தனது எழுத்துப் பணிக்காக டெல்லியில் அம்பேத்கர் விருதினைப் பெற்றுள்ள கவிஞர், தொடக்கப்பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இன்றும் இவரது இலக்கியப் பணி தொய்வு இல்லாமல் தொடர்வது வரவேற்கத் தக்கது.

இந்நூல் நூலாசிரியருக்குப் புகழ் ஈட்டித் தருவது உண்மை, இது புதைந்து கிடந்த வரலாற்று உண்மை, ஒன்றை வெளிக்கொண்டுவந்த ஆய்வு நூல் எனலாம். இந்நூலை நாடகமாக்கியனால் திரை உலகின் கதவைக்கூட தட்டும் என்பதில் ஐயம் இல்லை. இதை எழுதிய நூலாசிரியரையும் வெளியீட்டாளரையும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன்.

அன்புடன்

பேரா.டாக்டர் ப.சீனிவாசன்

5) அணிந்துரை

டாக்டர் உ.சுப்பிரமணியன், எம்.ஏ, (வர) எம்.ஏ., (ஆங்) பி.ஜி.சி, (தமிழ்) எம்.எட்., எம்.எஸ்.டபிள்யூ. பி.எச்.டி.
நன்னீர்க்குளம் மாத இதழ் சிறப்பாசிரியர். உளுந்தூர்பேட்டை

ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார் என்ற நூலை ஆசிரியர் திரு நாரணமணிவண்ணன் அவர்கள் எழுதியுள்ளார்கள். சேந்தனார் பத்தாம் நூற்றாண்டில் பிறந்தவர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. சேந்தனாரைப் பற்றிய இலக்கியச் சான்றுகள் பல இருக்கிறன. நம்பியாண்டார் நம்பி "பறைச் சேந்தன்" என்று குறிப்பிடுகின்றார். சிதம்பரத்தில் நடனம் புரியும் தில்லையின் கூத்தன் விரும்பி உண்ட உணவு பக்த சேந்தன் படைத்த களியாகும். அதுவும் விரித்த பழைய கந்தைத் துணியில் வைத்துக் கொண்டு வந்ததாகும்.

தில்லை நடராசன் அருள் புரியும் அருளாளன். பக்தருக்கு வேண்டியது வேண்டியாங்கு வழங்கும் வள்ளல். ஆனால் அவனும் சாதிய வரம்பை மீறாமல்தான் அருள் புரிந்துள்ளான்.

புனித நந்தனாரை, திருக்கோவிலுக்கு எழுந்தருளும்படி சொன்ன ஈசன், தில்லை மூவாயிரத்தார் கனவிலும் சொன்னான், எமது பக்தன் ஓமக்குளக்கரையில் உள்ளே நுழைய முடியாமல் தவித்து, சாதிய தடுப்பு உணர்வால் கிடக்கிறான் அவனை கோவிலுக்கு அழைத்து வாருங்கள் என்றான். அவனை தீமூட்டி தீக்குண்டத்தில் ஏற்றிய அந்தணர்கள் செயலையும் அல்லவா அந்த முக்கண்ணன் பார்த்துக்கெண்டிருந்தான். சிவனே என்ன கொடுமை இது. எம்மின நந்தனும் கொற்றவன்குடி பெற்றான்

சாம்பனும். சேந்தனும், ஜோதியெனும் எரிநெருப்பில் மாள நேர்ந்தும் பாராமல் இருந்தனையே ஏனோ என கேட்கத் தோன்றுகிறதே. இந்த கேள்வி அன்று எழத்தானே செய்தது, அடங்க மறுத்திருந்தால் நெஞ்சிலேயே நின்ற கேள்வி விந்தையாக வந்திருக்கும். அடங்க மறுக்கவில்லை, அத்து மீறவில்லை, திமிறி எழுவில்லை, திருப்பி அடிக்கவில்லை, ஆனது ஆகிவிட்டது. எம்மின நந்தனும் பெற்றான் சாம்பனும் சேந்தனும் இன்னுயிர் ஈந்தனர். எண்ணிட எண்ணிட இதயம் வெடிக்கிறது. கண்ணீர் பெருக்கெடுக்கிறது. தென்னாடுடைய சிவனே என்னாட்டவர்க்கும் இறைவனே நின்னருளால் பக்த சேந்தன் புனிதம் அடைந்தான். அவனது பெருமையையும் அந்தணர் கனவில் சொன்னீர்கள். ஆனால், சிவனே பக்த சேந்தனை உனது திருக்கோயிலில் உள்ளே வரவழைத்தீரா? உனது ஆலய தரிசனத்தைத் தெருவில் நின்றுதானே பெறச்செய்தீர்கள். திருப்பல்லாண்டு பதிகம் பாடி தேர் எழுந்து ஓடியபிரகாவது சேந்தனை கோயிலுக்கு உள்ளே அழைத்தீரா? இதிலிருந்து என்ன தெரிகிறது. ஆற்றலும் திறமையும் ஆதிதிராவிடத்தானிடமும் உள்ளது. அவன் யாரினும் தாழ்ந்தவன் இல்லை என்பதன்றோ. பறைச் சாதியிலே பிறந்த தீண்டத் தகாதவர்கள் தில்லையிலேயே, வழிபட்டு இறைவன் திருவடியடைந்ததாக கோபாலகிருஷ்ண பாரதி குறிப்பிடுகிறார். அவர்கள் நந்தனார், பெற்றான் சாம்பான், தில்லை வெட்டியான் என்பவர்களே அவர்கள். இவர்கள் அன்னியில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பறையர் வகுப்பைச் சோர்ந்தவரே. திருப்பாணாழ்வார் என்னும் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருப்பாணாழ்வார் பறையர் வகுப்பைச் சேர்ந்த பக்தி சிரோன்மணியே ஆவார். பக்தியால் தங்களது திறமையை மக்கள் மத்தியில் காட்டியும் வெளியில் அதிகம் பேசப்படாமல் இருப்பதற்கு அவர்களின் குலமே காரணமாகும்.

அருளடியார் சேந்தனார், சிறந்த கவிஞர் என்பதும் அவரது திருப்பல்லாண்டு தில்லையில் பாடப்பட்டதும் திருவீழிமிழலையில் திருவாவடுதுறை திருவிடைக் கழியில் திருவிசைப்பா பாடல் பாடப்பட்டதும் நாம் அறிவோம். ஆகையால் அவர் ஒரு சிறந்த பொருளாதார நிபுணர் என்பதும் அவரது கணக்குத் திறத்தைப்

பாராட்டியே பட்டினத்தார் தனக்கு கணக்கராக அமர்த்தினார் என்பதும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த அருளடியார் சேந்தனார், இழிதொழில் செய்து வயிறு வளர்க்காமல் கணக்கராக இருந்துள்ளார். அவரது அறிவும் திறமையும் ஆற்றலும் பெருமையும் பாரோர் புகழும் வண்ணம் அமைந்துள்ளது.

பின்னர் தில்லையம்பலத்தான் விருப்பப்படி அங்கு வந்து விறகுவெட்டி பிழைப்பு நடத்தினார். அப்போதும் தன்னால் அன்றாடம் ஒரு சிவனடியார்க்கு அமுது படைத்து வந்தார். அவரது திருத்தொண்டைக் கண்டு மனம் மகிழ்ந்த சிவன், ஒரு நாள் சிவனடியாராக வேடம் கொண்டு அவரது வீட்டிற்கு வந்து களியமுது உண்டு மகிழ்ந்தார்.

சேந்தன் என்ற பெயர் சங்ககாலத்திலிருந்து வழக்கில் இருந்துள்ளது. அது முருகப்பெருமானின் திருப்பெயர்களில் ஒன்று.

அருளடியார் சேந்தனாரின் திருப்பல்லாண்டு ஆறுகால பூசை நடைபெறும் சிவனுறையும் பதிகளில்இன்றைக்கும் பாடப்பட்டு வருகின்றன. அவரது பெருமை உலகம் உள்ளளவும் நின்று நிலவும். அருளடியார் சேந்தனார் மன உறுதியுடன், தியாக உணர்வுடன் தெளிந்த சிந்தனையுடன் இறைவன் மீது அன்றாடம் பக்தியும் கொண்டு விளங்கி வந்ததால் அவரது பக்தி போற்றத்தக்கதாக மாறிவிட்டது. அவரைப் போல திட சிந்தனையும் வைராக்கியமும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட சமுதாய இளைஞறும் பெறவேண்டும். நந்தனாரைப் போல சிந்தை தெளிவான உள்ளமும் பெறவேண்டும்.

பிற சாதியினரால் இழித்துச்சொல்லும் படியான ஈகைச் செயல்களைத் தவிர்த்து கல்வியில் சிறக்க வேண்டும். பேரறிஞர் டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் சொன்ன தாரக மந்திரமான கற்பி, ஒன்று, சேர் போராடு என்பதில் கற்பி, என்பதை முதலில் மனதில் இறுத்துதல்வேண்டும். கற்க வேண்டும், கற்பிக்க வேண்டும்.

திரு நாரண மணிவண்ணன் அவர்கள் இந்த நூலினை சுமார் 10ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார். பக்த சேந்தனார் என்ற நாடகமும் எழுதியுள்ளார். சேந்தனாரை பற்றிய கடிதங்களை தினமணியில் எழுதி முதல் பதிவாகசேந்தனாரை உலகம்

அறிந்திடச் செய்துள்ளார். மேலும் இவர் மறைக்கப்பட்ட சிதம்பரம் ரகசியங்களும் மாற்றி எழுதப்படவேண்டிய இந்திய வரலாறுகளும் என்ற நூலை ஆழமான ஆராய்ச்சியுடன் எழுதியுள்ளார். கி.பி. மூன்றாவது நூற்றாண்டு முதல் ஐந்தாம் நூற்றாண்டு வரை முன்னூறு ஆண்டுகள் சிதம்பரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சி எவ்வாறு இருந்தது. அது எவ்வாறு இருண்ட வரலாறாக மறைக்கப்பட்டது என்பதைத் தெளிவாக எழுதியுள்ளார். இதன் மூலம் இவரது ஆராய்ச்சி சிந்தனையுடன் சமுதாய சிந்தனையும் நம்மால் உணர முடிகிறது. இவர் பிரபஞ்சம் ஒரு தேரோட்டம் என்ற விஞ்ஞானப் புதுக்கவிதைத் தொகுப்பும் வெளியிடஉள்ளார். அந்த விஞ்ஞானப் புதுக்கவிதைகள் நன்னீர்க் குளம் இதழில் சில வெளிவந்தன. அவை பல பொறியாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள் பாராட்டுக்களை பெற்ற சிறந்த விஞ்ஞான கருத்தாக இருந்தன. இவரது மறைக்கப்பட்ட சிதம்பர ரகசியங்கள் என்ற நூல் இளைஞர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. கல்லூரி மாணவர்கள் அவற்றைப் படித்து மகிழ்சியடைந்தனர். இன்றும் சில மாணவர்கள் அந்த நூலை தங்களது எம்.பில் படிப்பின் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டு ஆய்வினை எழுதிப்பட்டம் பெற்றுள்ளனர். சமுதாய உணர்வால் இளைஞர்களைக் கவரும் வல்லமை பெற்றவர் இவர்.

இவர் பள்ளிக்கூட ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தே கவிதைகள், சிறுவர் நூல் மற்றும் அறிவியல் சம்பந்தப்பட்ட கருத்துகள் அடங்கிய நூல்களை எழுதிவெளியிட்டுள்ளர். மேல்நாட்டு அறிஞர்கள் கல்வியின் மேன்மை பற்றிக் குறிப்பிடும்போது, பணிபுரியும் காலத்திலேயே நூல்கள் படைக்கின்ற ஆற்றல் பன்முகச் சிந்தனையுடையவர்களால்தான் முடியும் எனக் கூறியுள்ளனர். பணிபுரியும்போது நூல் எழுதுவது பாராட்டத்தக்கது என்று ஆராய்ச்சியில் கூறியுள்ளனர். திரு நாரணமணிவண்ணன் அத்தகைய ஆற்றல் மிக்க பன்முக சிந்தனையாளர் என்றால் அது மிகையல்ல.

சந்திக்கும்போதும்., தொலைபேசியில் செல்போனில் பேசும்போதும் இவரிடம் நான் கண்ட உயர்ந்த குணம் சமுதாய சிந்தனையோடுதான் பேசுவார். சமுதாய உயர்வுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகளை விளக்குவார்., அதனால் உற்சாகம் பெற்று

புதிய பொலிவுடன் பணியாற்ற எனக்கு ஊக்கம் பிறக்கும். அவரது பணியையும் சமுதாயசிந்தனைகளையும் தலித் சமூகம் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தில்லை நடராசர் ஆலயத்தில் சேந்தனார் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதில் அவரது படமும் வரையப்பட்டுள்ளது. சேந்தனாரைப் பற்றிய செய்திகள் அங்கே உள்ளன.

1. திருவிசைப்பா ஆசிரியருள் ஒருவர் சேந்தனார்.

2. விறகு விற்றுப் பெற்ற பொருளால் தில்லையில் சிவனடியாருக்கு உணவளித்தவர்.

3. நடராசப் பெருமானே அடியார் வேடத்துடன் சென்று, இவரளித்த தவிட்டுக் களியினை ஏற்றருளினார்.

4. திருவாதிரை விழாவில் பலர் கூடியிருக்கவும் நகராதிருந்த திருத்தேர் சேந்தனார் திருப்பல்லாண்டு பாட நிலையைச் சேர்ந்தது. இவை மிகப் பெரிய வரலாற்று ஆவணமாகும். இவற்றை உலகறியச் செய்தவர் திருநாரண மணிவண்ணன் ஆவார். இவர் எமது நன்னீர்க் குளத்தின் வாயிலாக சேந்தனாரைப் பற்றிய கட்டுரைகள் அளித்தும். வரலாறு எழுதியும் சேந்தனார் நாடகத்தினைப் பதிவு செய்தும் சேந்தனாரை பற்றி நூலினை ஆங்கிலம் மற்றும் இந்தியில் மொழி பெயர்த்து, டில்லியில் நடைபெற்றுவரும் பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் உருவாக்கி, டாக்டர் எஸ்.பி சும்னாக்ஷர் தேசியத் தலைவராகவும் நான் தென்னிந்தியத் தலைவராகவும் செயல்பட்டு வரும் பாரதிய தலித் சாகித்ய அகடாமியின் சார்பில் நடந்த மாநாட்டில் 2006ல் வெளியிட்டு சேந்தனாருக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

சேந்தனாரை வெளிக் கொணர்வதில் மிகுந்த ஆர்வம் காட்டி வரும் இவர் சேந்தனாரைப்பற்றிய நூல்கள், நாடகங்கள் எழுதி இருந்தாலும், இந்த நூல் பெரிய அளவில் பேசப்படும் விதத்தில் அமைந்துள்ளது. டாக்டர் அ.பத்மநாபன் அவர்கள் எழுதிய அமுதசுரபி, தீபாவளி மலரில் வெளிவந்த கட்டுரைக்கு இவரது சேந்தனார் வரலாறு முன்னோடியாக இருந்தது. வருங்காலத்தில் சேந்தனார் என்ற நூல் இவரால் அதிகம் வெளிச்சம் பெறும். தலித் சமூகம் சற்றே விபரம் பெற்றதாக மாறும்.

காரணம், இன்று விடுதலைச் சிறுத்தைகளின் எழுச்சி தமிழ் நாடு மட்டுமல்லாது இந்தியதேசத்தின் தலை நகர் டில்லி வரை விரிந்து பரந்துள்ள நிலையில் அவர்களின் குரலை உன்னிப்பாக நாடு கேட்டுவருகிறது,. அதைச் சார்ந்த தாழ்த்தப்பட்டவர்களின் குரலில்தான் இந்த ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார், என்ற நூல் வெளிவருகிறது. ஆதனால் இது அதிக அளவில் மக்களால்பேசப்படும் என்று நம்புகிறேன்.

சிறந்த ஆற்றலும் விஞ்ஞான அறிவும் பெற்றவர் நாரணமணிவண்ணன், அவரது திறமையை வெளிக்கொணரும் மேலும் ஒரு மகுடமாகும், இந்நூல். திரு நாரண மணிவண்ணன் தனது கடின உழைப்பால் உயர்ந்தவர். என்றுமே இதயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதேனும் விபரம் செல்ல வேண்டும் என்று ஆவலாக இருப்பவர். இவரது கருத்தினை அறிந்து நன்னீர்க் குளத்தில் இவரது அரிய சிந்தனைகளைக் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பதிவு செய்து வந்திருக்கின்றேன். தொடர்ந்து பதிவு செய்து வருவேன்.

அவரது இந்த நூல் நன்கு பேசப்படும். அவர் ஏற்கனவே தனது படைப்புகளால் அறியப்பட்டவர் என்றாலும் அவற்றை சந்தைப்படுத்திட எமது தமிழ்வேந்தன் பதிப்பகம் தயாராக உள்ளது. நாங்கள் பப்பாசியில் உறுப்பினராக இருப்பதால் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் புத்தகக் கண்காட்சியில் தொடர்ந்து பங்கேற்று வருகிறோம். இதனால் அவரது நூலை டாக்டர் அம்பேத்கர், பாபு ஜகஜீவன் ராம், பக்த நந்தனார், அயோத்திதாசப் பண்டிதர், ரெட்டைமலை சீனிவாசன், சுவாமி சகஜாநந்தா, ராவ்பகதூர் எம்.சி., ராஜா போன்றவர்களின் வரிசையில் ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார் வரலாற்றையும் இணைத்து நிலைபெற வைக்கமுடியும் என நம்புகின்றேன்.

திரு நாரண.மணிவண்ணன் தனது இன மக்களின் அவலநிலையை சுட்டிக்காட்ட என்றும் அயராது பாடுபட்டு வருவது போற்றத்தக்கதாகும். இந்த சமுதாயத்தின் இழிவை இப்போது 21-ம் நூற்றாண்டில் நம்மால் போக்க முடியவில்லை என்றால், பின் எப்போதும் முடியாது, என்று குரல் கொடுப்பவர். தீண்டாமையும், இரட்டைக்குவளை முறைகளும், அவர் வாழ்கின்ற கிள்ளை கம்யூனிஸ பகுதியில் மறைந்துவிட்டாலும் பிறபகுதிகளில் இன்னமும் இருப்பதை செய்தித்தாள்கள் அன்றாடம் நம்மிடம்

சொல்லிக்கொண்டிருக்கின்றன. அத்தகையசெய்திகளை மூடி மறைக்காமல் வெளியிடுகின்ற தினமணி மற்றும் தி நியூ இன்டியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளேடுகளை பாராட்டுகிறேன். திரு நாரண.மணிவண்ணன் தினமணியில் எழுதிய சமுதாய கருத்துக்களையும் இந்நூலில் சேர்த்துள்ளார். இக்கடிதங்களை துணிவுடன் வெளியிட்டுவந்த தினமணியின் பெருமையை தலித் சமுதாயம் பாராட்டி மகிழவேண்டும்.

தீர்வுகள் தெளிவாகக் கிடைத்திட கடினமாக உழைத்திட வேண்டும். தீர்வு காண கல்வியை ஒரு கருவியாக்கிட வேண்டும் என்ற சிந்தனையில் நூல்களை எழுதி வரும் திரு நாரண.மணிவண்ணனின் இந்நூல் ஒரு நன்னூல். 21ம் நூற்றாண்டின் ஆதிதிராவிட மக்களின் வரலாற்று ஆவணமாகும்., இது போல மறைக்கப்பட்ட சிதம்பர ரகசியம் முதலியவற்றையும் மறைக்கப்பட்டு வரும் பறையர்களின் வரலாற்று நிகழ்வுகளையும் இவர் எழுத வேண்டும். அதன் மூலம் என்றும் மறையா புகழையும் மக்களின் மதிப்பையும் பெறவேண்டும் என்பதே எம் குல மக்களின் பெருவிருப்பாகும்.

அன்புடன்

டாக்டர் உ.சுப்பிரமணியன்

6) என்னுரை

ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார் எனும் பெரியார் பழம்பெருமை வாய்ந்த தமிழகத்தின் பூர்வ தமிழர்களாம் ஆதிராவிட வகுப்பைச் சேர்ந்த ஓர் அருளடியார் என்னும் வரலாற்று உண்மையானது பழங்குடி தலித், மக்களுக்குக் கிடைத்த ஒரு கற்கண்டுச் செய்தியாகும். பழம்பெரும் புதையலும் ஆகும். பகுத்தறிவுப் பாதையில் சற்றே விலகி இப்புதையலை எடுத்துத் தருவதில் தவறில்லை என்றே கருதுகிறேன்.

1987ம் ஆண்டில் வெளிவந்த தில்லைத் திருக்கோயிலின் கும்பாபிஷேக மலரில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அறிஞர். கே.எம். வேங்கடராமையா அவர்கள். "தில்லையுட் கூத்தனும் வான்புகழ் அடியவரும்" என எழுதியிருந்த ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையும், அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப்பேராசிரியர் அறிஞர் க.வெள்ளைவாரணனார் அவர்கள் எழுதியிருந்த "தில்லைப் பெருமானை வழிபட்டு பேறு பெற்றோர்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த "கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம்" என்னும் செய்யுள் நூலில் பண்டைப்பறைச் சேந்தன் என ஒரு தொடர் வாக்கியம் இருப்பதையும், திருவிசைப்பாவில் மூன்று திருப் பதிகங்களும், தில்லைத் திருப்பல்லாண்டும் பாடி அருளிய சேந்தனார் ஓர் ஆதிதிராவிட மரபைச் சேர்ந்தவரே என்று அறிஞர் பெருமக்கள் இருவருமே தக்க ஆதாரங்களுடன் குறிப்புகள் எழுதியிருந்தனர். இவ்வரிய செய்தி எனக்குப் பெரிய வியப்பாக இருந்தது. ஆயிரம் ஆண்டுகள் என்பது தலித்துகளின் இருண்ட கால கட்டங்கள். இருண்டு கிடந்த இப்படிப்பட்ட காலங்களில் தலித் கவிஞரா?

நெஞ்சில் ஓர் இனிய பரபரப்புடன் எனது அருமை நண்பர் வரகூர் ஆ.க.அருணகிரி நாதன் அவர்களிடம் சென்று சேந்தனார் பற்றிய எனது ஐயத்தைக் கேட்டேன்.

அருள்நூல்களைப் பாடியருளிய சேந்தனார் ஆதிதிராவிடர் மரபைச் சேர்ந்தவர் என்பதில் எள்ளவும் ஐயம் இல்லை என்று சொன்னதுடன் வெள்ளைவாரணம் பிள்ளை அவர்கள் எழுதிய "பன்னிரு திருமுறை வரலாற்று ஆராய்ச்சிக் குறிப்புகள், உய்யவந்த தேவ நாயனார் பாடிய திருக்களிற்றுப்படியார்" போன்ற சமய நூல்களில் இருந்த இலக்கியச் சான்றுகளையும் எடுத்துக்காட்டி சில குறிப்புகளையும் தந்தார்கள். இவ்வரலாற்று நூலில் மற்றுமோர் நந்தனார் கிடைத்திருப்பதுடன் பல அறிய செய்திகளும் இருந்தன.

தில்லையில் நடக்கும் மார்கழித் திருவாதிரைத் தேர்விழாவில் அடியார் கூட்டத்தினர் சேந்தனாரின் தில்லைத் திருப்பல்லாண்டுப் பதிகங்களைப் பாடிக்கொண்டு கூத்த பெருமான் வலம்வரும் திருத்தேருக்கு முன்னால் செல்வதை இன்றும் காணலாம். இத்தகு நற்செயல் திருப்பனந்தாள் மடத்தின் ஏற்பாட்டின்படி செய்யப்படுகிறது. சேக்கிழார் பெருமான் வேளாளர் குலம் சார்ந்த ஒளி ஞாயிறு என்றும், திருவிசைப்பாவில் ஏழாவதாகப் பாடிய திருவாலியமுதனார் வைணவ அந்தணர் என்றும் கணக்குப் பிசகாமல் கூறும் இவ்வடியார்கள் சேந்தனாரை மட்டும் தலித் என அடையாளம் காட்டிக் கூறினார் இல்லை. இவர்களின் சிந்தனையில் சேந்தனார் மௌன வரலாராகிப் போனார். சேந்தனாரின் வரலாற்றுக்கு ஆதாரம் பல இலக்கியங்களில் உள்ளன.

சேக்கிழாரின் பெரிய புராணத்தை யானைமின் மேல் வைத்து தில்லைத்திரு வீதியின் வழியாக வலம் வரச் செய்து பெருமை படுத்தியவன் அநபாயன் என்னும் இரண்டாம் ராசராசச்சோழன். அரசனது செயலும், சேக்கிழாரின் புலமையும் தமிழ்ச் சமுதாயம் அனைத்துக்கும் பெருமையே. இன்றும் முழுமுதல் தெய்வமாம் வாதாபி தந்த விநாயகப் பெருமான் சிவபெருமான் கட்டளைப்படி சேந்தனாரைச் சிறையில் இருந்து மீட்டதுடன் தாமே சுமந்துவந்து பட்டினத்தடிகளின் திருவடிகளில் சேர்த்துள்ள பெருமை சேந்தனார் பெருமான் ஒருவருக்கே வாய்க்கப்பெற்ற அரிய நிகழ்ச்சியாகும். தமிழகத்தில் உள்ள சிறைமீட்ட விநாயகர் தலங்களும், விலங்கு தெறித்த விநாயகர் கோயில்களுமே இதற்குச்

சான்றுகளாகும். நம்பிக்கைக்குரிய அருள் அடியார் சேந்தனார் பக்திக் கலாச்சாரத்திற்கு ஆதிதிராவிடர்களின் சார்பில் பத்தாம் நூற்றாண்டு வாக்கில் ஆற்றிய பங்கு அற்புதமான உண்மை என்பதை அடியார்களும், அறிஞர் பெருமக்களும் ஏற்றுக்கொண்டு இன்றைய காலகட்டங்களிலாவது வரலாறாக வெளிப்படுத்தியது பாராட்டுக்குரிய செயலாகும். பொய்மைத் தொலைந்து உண்மை நிலைத்தது போங்கள்.

புரட்சித்துறவி சேந்தனாரின் அற்புத நிகழ்ச்சிகள், தமிழ்ப் பணிகள், கல்வித் தொண்டுகள் பற்றியெல்லாம் வெளிப்படையாகப் பேசப்பட்டதுமில்லை; எழுதப்பட்டதுமில்லை. துண்டுத்துண்டுச் செய்திகளுடன் சரி. திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் பாடியது திருப்பிடவூர் சேந்தனார் என்பதுதான் மறைக்கப்படாத உண்மைகள். சேந்தனாரின் வரலாற்றில் தீண்டாமை நோய் பற்றியிருந்த செய்திகள் உண்மை என்பதைப் பல விவரங்களில் இருந்து அறிய முடிகிறது.

சிவபெருமான் நந்தனாரைப் பல கடுமையான சோதனைகள் செய்த பின்பே தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டதாக செவிவழி புராண கதைகள் உள்ளன. அப்படிப்பட்ட இறைவனானவன் புலைச்சேரியில் உள்ள சேந்தனாரின் குடிசைக்குத்தானே வலியச் சென்றதும், பழங்கூழ் களி உணவை உண்டு களித்ததும் மிகப்பெரிய வரலாற்று நிகழ்ச்சிகள், உண்மை நிகழ்ச்சிகள், உன்னதமான நிகழ்ச்சிகள்.

சமபந்தி போஜனத்தை அன்றே இறைவன் தொடங்கி வைத்துள்ளார் போலும். கி.பி.1500ம் ஆண்டுக்கு முன்னாள் தோன்றிய நந்தனாரின் கடுமையான பக்தித்திறம் ஒருகோணத்தில் அற்புதம் என்று நாம் வைத்துக்கொண்டாலும் சேந்தனாரின் சாந்தமான - சாத்வீகமான பக்தி முதிர்ச்சியும் மகா அற்புதமே என்று நாகரீகம் வேண்டி பகுத்தறிவு வாதிகள் கூட ஏற்றுக்கொள்வதிலும் தவறில்லை.

இவ்வரிய வரலாற்றுச் செய்திகளை நம்பியாண்டார் நம்பிகள் நினைவு கூர்ந்து சிறப்பித்துப் பாடியிராவிடில் சேந்தனின் சரித்திரம் கூட இன்று நமக்குக் கிடைத்திராது. நினைவு கூர்ந்த நம்பி பெருமானின் திருவடிகளையும் சீர்திருத்தத் துணிவுடன் சேந்தனை கணக்கு எழுதும் வேலைக்கு அமர்த்திக்கொண்டு அவரை உலகுக்கு அடையாளம் காட்டிய திருவெண்காடர் என்னும் பட்டினத்தாரின் திருவடிகளையும் ஆதிதிராவிடர்கள் பொன்னடியாய்ப் போற்றுதல் வேண்டும்.

திருக்குறள் மூலத்தையும், திருவள்ளுவமாலை மூலத்தையும் ஓலைச்சுவடிகளில் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வைத்திருந்து தமிழகத்திற்கு தந்த அயோத்திதாசப் பண்டிதரின் தாத்தா கந்தப்பன் அவர்களையும், திருவள்ளுவர் தன் குலத்தில் பிறந்த ஓர் ஆதிதிராவிடரே எனச் சான்றுகள் காட்டிய முதல் பகுத்தறிவு மேதை சென்னை வாழ் அயோத்திதாசப் பண்டிதரையும் திராவிட ஒப்பிலக்கணம் ஆய்ந்தறிந்த அயர்லாந்தின் பேரறிஞர் கால்டுவெல அவர்களையும் கூட நாம் மறந்துவிடாமல் வணங்கிப் போற்றுதல் வேண்டும், பழங்குடி காசி விஸ்வநாதனிடம் சமஸ்கிருதம் பாடம் கற்றுக்கொண்ட ஆதிசங்கரர், பாரதியார் இவர்களின் ஞானத்திலும் கூட ஆதிதிராவிடரே மேலோங்கி நிற்கின்றனர்.

அறுபத்து மூவரையொப்ப சேந்த நாயனாரை பெரிய புராணம் என்னும் அடியார் பற்றிய திருத்தொண்டர் புராணத்தில் இருநூறு ஆண்டுகட்குப் பின்னால் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் சேர்க்காமல் விட்டதற்கு மரபுக்காரணம் ஒன்றே என்கின்றார். தீண்டாமையின் ஆதிக்கக்காரணமே கூட இருக்கலாம் என எமக்குப்படுகிறது.

திருவாரூரில் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயன்மாரும், சமயக்குரவருள் ஒருவருமாகிய சுந்தரமூர்த்தி நாயனார் நந்தனாரையும் உள்ளடக்கி சுமார் அறுபது அடியார்களையும் சேர்த்து திருத்தொண்டத் தொகை என்னும் முதல் நூலைப் பாடினார். பின்னர் வந்த நம்பியாண்டார் நம்பிகள் பத்தாம் நூற்றாண்டின் இறுதியையும் கடந்து வாழ்ந்தவர். திருநாரையூர்ப் பொள்ளாப்பிள்ளையாரிடம் அருள் பெற்றவர். இவர் மேலும் பல அடியார்களையும் சேர்த்து திருத்தொண்டர் திருவந்தாதி எனும் பெயரில் அறுபத்து மூவரையும், இராசராச அபயகுல சேகர சோழ மன்னன் முன்னிலையில் வழிநூலாகச் செய்தார். இவருக்குச் சேந்தனைப் பற்றிய விவரங்கள் தெரிந்தும் இவரும் மரபை மீறினாரில்லை. சுந்தரரும், நம்பியும் செய்துவைத்த குறிப்புகளை வகுத்தும், தொகுத்தும் சேக்கிழார் அநபாயன் முன்னிலையில் திருத்தொண்டர் புராணத்தைச் சார்பு நூலாகப்பாடியதுடன், தொகையடியார்கள் பற்றிய குறிப்புகளையும் எழுதி வைத்தார். தில்லைவாழ் உமாபதி சிவாச்சாரியாரும் திருத்தொண்டர்சாரம் என்னும் நூலில் அறுபத்து மூவரையும் பாடியுள்ளாரே தவிர சேந்தனாரைக் கண்டு கொள்ளவே

இல்லை. ஆயினும். அபயகுல சேகர சோழமன்னன் சேந்தனார் பாடிய திருவிசைப்பா நாற்பத்தேழு பாடல்களையும் ஒன்பதாம் திருமுறையில் சேர்த்துப் பெருமைபடுத்தியுள்ளான். இச்சோழ அரசன் திருமுறைச் செல்வன் என நம்மால் போற்றப்படும் இராசராசச் சோழனே ஆவான். சமுதாய அவலங்களைக் கண்டுகொள்ளாத சோழ அரசர்கள் பக்தியில் மட்டும் முன்னே நிற்பார்கள், செயல்படுவார்கள், ஆயினும் சோழர் ஆட்சியில் வெளிநாடுகளில் அரசவம்ச சடங்குகளில் இன்றும் அருளடியார் சேந்தனாரின் மன்னுக தில்லை என திருப்பல்லாண்டு முதலில் பாடப்படுகிறது.

சங்ககாலச் சோழர்கள் காவிரிப் பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தாலும், பிற்காலச் சோழர்கள் தஞ்சையையும், பின்னர் கங்கைகொண்ட சோழபுரத்தையும் தலை நகராகக் கொண்டிருந்தார்கள். தில்லைக்கூத்தன் இவர்கட்கு குலதெய்வமாக இருந்துள்ளதால் தில்லை ஸ்தலத்திற்குச் சோழர்கள் அடிக்கடி வருவதும் போவதுமாக இருந்ததுடன் கோயில் நிர்மாண திருப்பணிகளிலும் கவனம் செலுத்தினார்கள்.

முதலாம் ஆதித்த சோழனின் மகனும், தில்லைக் கோயிலுக்குப் பொன்ஓடு வேய்ந்தவனுமாகிய முதற்பராந்தகன் காலத்தில் (கி.பி. 907 - 953) ஓரளவுக்கேனும் சேந்தனாரின் புகழ் பரவியிருக்கக் கூடும். பராந்தகனின் இரண்டாவது மகனும், தமிழ்ப் புலமையும், பக்தியும் உடையவனும் பத்தாம் நூற்றாண்டைக் கண்டவனுமாகிய கண்டராதித்த சோழன் காலத்தில் சேந்தனார் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. கண்டர் என்னும் விறகு வெட்டும் கோடாரியின் பெயரும் அவன் பெயரில் இணைந்து வருவதால் சான்றுகள் தெளிவாக உள்ளன. சேந்தனார் தில்லையில் நிகழ்த்திய அற்புதங்கள் அனைத்தும் தில்லைக் கோயிலின் கண், அல்லது பக்கத்தில் உள்ள பிச்சாவரம் அல்லது கோட்டை மேட்டில் அமைந்துள்ள அரண்மனைகளில் தங்கியிருந்த கண்டராதித்தனையே சாரும். இவன் தலயாத்திரையின் பொருட்டு இறுதிக்காலத்தில் கன்னட நாட்டுப்பக்கம் சென்றுவிட்டதாக வரலாறு தெரிவிக்கிறது. கண்டர் என்பது சோழர்களின் குலப்பெயர் என்று கூட சொல்வார்கள்.

சோழ அரசர்களின் குருவாக விளங்கியவரும் திருவிசைப்பாவில் முற்பதிகம் பாடியவரும்; இன்றும்

திருவாவடுதுறை மடத்தில் சிறப்பிக்கப்பட்டு வருபவருமான திருவிடைமருதூர் திருமாளிகைத் தேவர், பட்டினத்தார் நல் ஆசியுடன் சேந்தனாரைத் தில்லைத் தரிசனத்திற்கு அழைத்து வந்ததாகத் தெரிகிறது. தேவர் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சேந்தனாரும் இதே காலத்தில் வாழ்ந்தவர் என திருவாவடுதுறை திருமாளிகைத் தேவர் சன்னிதானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டினத்தார் வாழ்விலும், வரலாற்றிலும் திருப்பிடவூர் சேந்தனார் பின்னிப் பிணைந்து வருவதால் இம்மகான்கள் வாழ்ந்த காலத்திலேயே சேந்தனாரும் வாழ்ந்துள்ளார்.

பத்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய முதலாம் ராச ராசச் சோழன், அவர்தம் மைந்தன் இராசேந்திரச் சோழன், பின்னால் வந்த முதலாம் குலோத்துங்க சோழன் ஆகிய இம்மூவரும் வலிமை மிக்க சோழப்பேரரசர்கள். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் தோன்றிய பெரும் புலவர்களான ஒட்டக்கூத்தர், சேக்கிழார் இருவரும் சேந்தனாருக்கு இருநூறு ஆண்டுகட்குப் பிற்பட்டவர்கள். பன்னிரெண்டாம்நூற்றாண்டின் இறுதியைத் தாண்டிய பிறகு சோழப்பேரரசு வலிமை குன்றி அழிவை நோக்கிச் சென்றுவிடுகிறது.

சேந்தனார் தில்லைத் தரிசனத்தையும், அற்புதங்களையும் நிகழ்த்திய பின் அவரின் புகழ் எங்கும் பரவியது. பலதலங்களையும் தரிசிக்க பேரவா கொண்டார். போக்குவரத்து வசதிகள் அற்ற அக்காலத்தில் பலகாத தூரம் கடந்து திருவீழிமிழலை என்னும் தலத்தை அடைந்தார். கும்பகோணம் செல்லும் வழியில் இன்றைய திருவீழிமிழலை ஓர் உள்ளடங்கிய கிராமம். தேரோடிய வீதிகளும் திருக்குளமும் இன்றும் அடையாளச் சின்னங்களாகக் காட்சிதருகின்றன. அன்றைய, தலவிருட்சம் வீழிச் செடியாக இருப்பினும். இன்று பலாமரமே தல விருட்சமாக போற்றி வணங்கப்படுகிறது. யுகத்திற்கு யுகம் தல விருட்சமும் மாறுதலுக்குள்ளாகும் போல் தெரிகிறது. திருஞான சம்பந்த மூர்த்திக்குப் படிக்காசு அருளிய திருக்கோயிலுக்கு வருகை புரிந்த சேந்தனார் கோயிலின் உள்ளே சென்று வழிபடுவதற்கு மட்டும் அனுமதிக்கப்படவே இல்லை. சாத்வீக நெறி உணர்ந்த சேந்தனார் வெளியில் நின்றவாறே திருவீழி மிழலை திருவிசைப்பா பாடல்களைப்

பாடினார், அவரின் பாடல்கள் மட்டும் கோயிலின் உள்ளே மதிற் சுவர்களில் எழுதப்பட்டு இன்றும் பக்தர்களால் பாடப்படுகிறது. ஆயினும் இறைவன் உலா வரும்போது மட்டுமே தூரத்தில் நின்று சேந்தனார், சுவாமி தரிசனம் செய்ய அனுதிக்கப்பட்டுள்ளார். கோயிலின் உள்ளே செல்ல முடியாத ஆதிதிராவிடர்கள் வணங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சமுதாய நடைமுறையாக இருக்கலாம் என்று எனக்குப்படுகிறது.

அடுத்து திருவாவடுதுறை கோ.முக்தீஸ்வரர் திருக்கோயிலுக்கும் சேந்தனார் நடந்தே சென்றார். புகழ்பெற்ற மடம் உள்ள திருவாவடுதுறை இன்றளவும் புகழ்பெற்று விளங்குகிறது. கலையிழந்த திருக்குளமும் வீதிகளும் பழமையின் சிறப்பைக காட்டிக் கொண்டிருக்கின்றன. சம்பந்தப்பெருமானுக்கு ஆயிரம் பொற்காசுகள் வழங்கிய திருமடம். மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மாதவச் சிவஞான யோகிகள், கச்சியப்பமுனிவர் போன்ற பெருமக்கள் புகழ்பெற்ற இடம். ஆயினும் என்ன? இங்கும் சேந்தனார் வெளியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த உயர்சீர்திருத்த அறிஞரான புத்தர் போதி மரத்தின் கீழ் அமர்ந்து ஞானம் பெற்றது போல் தலித் சேந்தனாரும் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் உள்ள அரசமரத்தின் அடியில் அமர்ந்தவாறே இறைவனைப் போற்றி உள்ளார். தாவரங்கள் ஆன மரங்கள் மனிதர்க்கு வேண்டிய, ஞானத்தையும் கூட வழங்கும் போலும். ஈராயிரம் ஆண்டுகளாக அரசமரம் பாதுகாக்கப்பட்டு பக்தர்களால் வணங்கப்படுகிறது. சேந்தனாரின் திருவாவடுதுறை திருவிசைப்பா பாடல்களை பக்தர்கள் இன்றளவும் போற்றிப்புகழ்கின்றனர்.

இறைவன் தீவிரமான நந்தனைப் போல் சாத்வீகமான சேந்தனையும் தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளும் காலம் வந்துவிட்டது போலும். தீண்டாமையின் கோரப்பிடிக்கு தீவிரமென்ன, சாத்வீகமென்ன எல்லாமே ஒன்றுதான். கடற்கரையை அடுத்துள்ள திருவிடைக்கழி என்னும் தலத்தை வந்தடைந்தார். இங்கு மேற்கு முகம் நோக்கிய திருக்காமேஸ்வரர் லிங்க வடிவில் உள்ளார். மிகப் பழமை வாய்ந்த முருகன் தலமும் ஐநூற்று விநாயகர் தலமும் உள்ளன. அக்காலத்தில் மகிழ மரங்கள் நிறைந்த மகிழாரண்யம் என்னும் பெயர் பெற்ற இடமுமாகும். வெளிப்பிரகாரத்தில் தலவிருட்சமாகிய குராமரத்தின் அடியில் சேந்தனார் சோதியில்

கலந்த இடம் உள்ளது. உள்ளே அனுமதிக்கப்படாத சேந்தனார் தோட்டங்களிலும் காடுகளிலும் உலவியதால் நிழலில் உலவிய பெருமாள் என சேந்தனாரின் கல்லறையின் மேல் எழுதப்பட்டுள்ளது. தருமபுர ஆதின முயற்சியினால் கலைமாமணி வரகூர் ஆ.க.முத்துக்குமாரசாமி அவர்கள் வடித்தெடுத்த சேந்தனாரின் கற்சிலை கோயிலின் உட்பிரகாரத்தில் வைக்கப்பட்டுள்ளன. சேந்தன் சிலையும், அவர் சோதியில் கலந்த இடமும் இன்று மக்கள் தொழும் இடமாக உள்ளது. ஆற்றில் கிடந்து எடுத்துவந்ததாகப் பல்வேறு தெய்வச்சிலைகள் இங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. சேந்தனார் பிறந்த திருப்பிடவூர் காவிரி ஆற்று வெள்ளத்தால் அழிந்தபோது இச்சிலைகள் வெளியேறிய மக்களுடன் கோவிலுக்குள் பாதுகாப்பாக எடுத்துவரப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இக்கிராமத்தில் மடத்துக்குளம் என்ற ஓர் இடம் உள்ளது. இங்கு மடம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. சேந்தனார் இங்குதான் திருமடம் அமைத்து கல்விப்பணியும் சமூகத் தொண்டும் செய்துள்ளார். மடத்தின் இடிபாடுகள் சிதறிக்கிடக்கின்றன. மடத்தின் வளர்ச்சிக்கு அவருக்கு மானியமாகத் தரப்பட்ட சேந்தமங்கலம் அருகில் உள்ள நவீன கிராமமாக இன்று காட்சி தருகிறது. சேந்தமங்கலத்தில் இருந்து திருவிடைக்கழியைத் தாண்டி சேந்தன் வாய்க்கால் ஒன்று உள்ளது. இது சேந்தனார் முயற்சி செய்து சீர்படுத்தியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. எல்லா தலங்களிலும் வெளிப்புறத்தில் நின்றவாறே இறைவழிபாடு செய்துள்ளதை அவருடைய வரலாறு காட்டுகிறது. இன்று அவரின் திருஉருவச் சிலையும் அருட்பாடல்களும் கோயிலுக்குள்ளும், அடியார் மனத்திற்குள்ளும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன.

மேலநல்லூர் நந்தனார், திருப்பிடவூர் சேந்தனார், கொற்றவன்குடி பெற்றான் சாம்பனார் ஆகிய அடியார் மூவரும் இறைவனுடன் சோதியில் கலந்தவர்கள். ஒரு கோணத்தில் இவர்கள் சமூகத் தொண்டாற்றி தீயில் மூழ்கிய தியாகச் செம்மல்கள். நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளைப்பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் புலையர் மூவர் எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளது. இம்மூவரேயாகலாம். படித்து விடுதலை பெறு எனப் புகன்ற கேரள சிர்திருத்தச் செம்மல் ஸ்ரீ நாராயணகுருவின் திருவாக்கிற்கிணங்கவும் கற்பித்துப் புரட்சி செய், எனச் சொன்ன உலகப்பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் தந்த

சட்டத்தின் துணையோடும் ஆதிதிராவிடர்கள் ஓர் ஐந்து சதவித அளவிலாவது முன்னேற்றம் பெற்றிருப்பதற்கு இந்திய சமுதாயத்திற்கு நன்றியைக் கூறுவோம்.

சேந்தனாரின் வரலாற்றை ஆராய்ந்து கூறும் அறிஞர்களில் பலர் குறுநில மன்னன் ஒரு சேந்தனாரும் இலக்கணம் செய்த ஒரு சேந்தனாரும் இருந்ததாக குறிப்பிடப்படுவதும் உண்மை. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிக்கு வருகை தந்த சீன யாத்திரிகர் யுவான் சுவாங், இதைப்பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளார். தேவாரத்தால் பாடப்பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்களில் நின்ற சீர் நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னனுக்கு முன்னால் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் இடைக்கால பாண்டியமன்னர் மூவர். இவர்களில் செழியன் சேந்தன் என்பானும் ஒருவன். இவன் காலத்தில் இயற்றப்பட்டதே சேந்தன் திவாகரம் என்னும் தமிழ் நிகண்டு நூல் ஆகும். இந்நூலைச் செழியன் சேந்தனோ, அவனுடைய ஆதரவு பெற்றவனோ செய்திருக்கலாம். இவர்கட்கு இருநூறு ஆண்டுகட்குப் பிற்பட்டவரே திருப்பிடவூர் சேந்தனார் பெருமான் ஆவார்.

நம் காலத்தில் வாழ்ந்து சிறந்த முறையில் சமூகத் தொண்டாற்றிய சிதம்பரம் நந்தனார் மடத்தின் நிறுவனர் சுவாமி சகஜாந்தா அவர்களும் சேந்தனார் பற்றி எதுவும் கூறினார் இல்லை. தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்க சகஜாநந்தாவுக்கும் சேந்தனார் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை போலும். கிடைத்திருப்பின் சேந்தனார் பெயரில் கல்வி நிறுவனம் அமைத்திருப்பார்கள். நல்லவேளை சகஜாநந்தாவும் ஆண்டவனுடன் சோதியில் இரண்டறக் கலந்துவிடாமல் தப்பித்தவரையில் இன்றைய தலித்துகள் அதிர்ஷ்டசாலிகள்தான்.

தில்லையின் புற எல்லையில் அமைந்திருப்பது ஓமக்குளம் என்னும் சிற்றூர். இதனை அடுத்துள்ள சிற்றூர் வெட்டியாரச்சேரி இன்று தண்டேஸ்வரநல்லூர். தில்லைக்கோயிலின் மேற்குப்புறத்தில் உள்ளது. கோயிலின் மேற்குப்புறவாயிலின் வழியாகச் சென்று மூன்று கட்டு விறகுகளைச் சேந்தனார் கோயிலுக்கு அளித்துவந்ததாகச் செய்திகள் உள்ளதால் அவர் இச்சேரியில் தங்கியிருக்கலாம் அல்லது நாகர் சேரிக்குளக்கரையில் தங்கியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. விறகு வெட்டி விற்றதால், வெட்டியான் என்னும்

இக்காரணப் பெயர் இன்று தாழ்வாக அழைக்கப்படினும், அன்று அடியார்களைக் குறித்த சொல்லாகும். தில்லைவெட்டியான் என்று கூட ஓர் அடியார் இருந்ததாகச் செவி வழிச் செய்தியும் ஒன்று உண்டு. இன்றும் கூட மடங்களில் விறகு வெட்டி என்றே அழைக்கிறார்கள். சேந்தனாரை ஞானவெட்டியான் என்ற சித்தர் என்றே கூறலாம்.

தில்லைத் தேர்விழாவில் தம்குலத்தார்களுடன் ஒதுங்கி நின்று கூத்தனைத் தரிசிக்கும்போது, தேர் ஓடாமல் நின்றதும், இறைவன் கட்டளைப்படி திருப்பல்லாண்டு பாடி தேர் ஓடியதும் வரலாற்றுச் செய்திகள். இவ்வற்புத நிகழ்ச்சிகளைத்தில்லைக் கோயிலின் உட்புறத்தில் கொடி மரத்தின் அருகில் சேந்தனார் உருவத்தையும், அவரின் தில்லைத் திருப்பல்லாண்டு பாடல்களையும் எழுதி வைக்கப்பட்டுள்ளதை இன்றும் பக்தர்கள் காணலாம். இவ்வரலாற்றை அலங்கரிப்பது அட்டைப் படகாட்சியே யாம்.

சிவந்த நிறத்தைக் குறிக்கும் சேந்தன் என்ற பெயர்ச்சொல் பழங்குடி மக்களிடையில் வழக்கில் இல்லையென்றாலும், சேப்பன், செவத்தான், சேப்பாயி போன்ற பெயர்ச் சொற்கள் இன்றும் பூர்வதமிழ் மக்களிடையில் மட்டும்தான் காணப்படுகிறது. இப்பெயர்ச்சொற்கள் சேந்தன் என்ற பெயரின் திரிபாகவோ, அல்லது வேர்ச் சொல்லாகவோ இருக்கலாம். ஜெயந்தன் என்று கூட இவர் பெயரை மடைமாற்றுவாரும் உண்டு.

சேந்தமங்கலம் என்ற ஊர் சேந்தனாருக்கு மானியமாகத் தரப்பட்டிருப்பினும் வடாற்காடு, சேலம், விழுப்புரம், கன்னியாகுமரி போன்ற தமிழ் நாட்டின் பலபகுதிகளிலும் சேந்தமங்கலம் என்ற ஊர்கள் காணப்படுகின்றன. சேந்தங்குடி, சேந்தநாடு, சேந்தனூர், சேந்தன்பட்டி என்றெல்லாம்கூட ஊரின் பெயர்கள் உள்ளன. இப்பெயர்கள் சேந்தனாரின் பெயரால் அமைந்தவையா, அல்லது முருகன் கோயில் உள்ள இடங்களா, அல்லது மன்னர்களின் பெயரால் அழைக்கப்படுகின்ற இடங்களா என்பதை அறிஞர்களின் ஆராய்ச்சிக்கே விட்டுவிடலாம்.

இராமானுஜர் கூறிய திருக்குலத்தார் என்னும் பூர்வகுடி ஆதிதிராவிட மக்களும், பொதுமக்களும் சேந்தனாருக்கு ஒரு நினைவுச் சின்னம் காணுதல் வேண்டும், தஞ்சை சரஸ்வதிமகால்,

4) **தமிழலங்காரம்**

அல்லையொப் பாமிடற் றாதிக்குச் சோழன் அமுது கைத்து
முல்லையிற் கேழ்வர காலட்ட கூழ்ச்சுவை முந்தச் செய்து
தொல்லை மறைநலத் தந்தணர் பற்பலர் சூழ்ந்து வப்பத்
திலலையிற் றேரும் இழுத்தது சேந்தன் செழுந் தமிழே.

- சிற்றிதழ்

கருத்துரை :

நீலகண்டத்தை உடைய சிவபெருமானுக்கு முல்லை மலர் போன்ற வெண்ணிறச் சோற்றை சோழன் நிவேதனம் செய்தான். ஆனால், சேந்தனார் கேழ்வரகுக் களியை நிவேதனம் செய்ய சோழனின் அமுதை விட மிக்க சுவையுடையது என விரும்பி உண்டார் இறைவன். தேர்த்திருவிழா நாளில் தில்லை அந்தணர்கள் பலர் சூழ்ந்திருப்ப புறப்படாதிருந்த தேரினைப் பல்லாண்டு பதிகம் பாடி சேந்தனார் நான்கு திருவீதியை வலம்வரச் செய்தார்.

திருவிடைக்கழி ஆலயம்

2000 ஆண்டுகட்கு முன்பு முசுகுந்தச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டுள்ள திருவிடைக்கழி முருகன்கோயில்தலம்

பகுதி - II

அருளடியார் சேந்தனர் பற்றிய பழங்கால - தற்கால இலக்கியச் சான்றுகள்

1) கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம்

பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொ ன்னம்பலத்து
வேந்தன் றனக்கன்றி யாட்செய்வ தென்னே விரிதுணிமே
லாந்தண் பழைய அவிழையன் பாகிய பண்டைப்பறைச்
சேந்தன் கொடுக்க அதுவுந் திருவமு தாகியதே.
- நம்பியாண்டார் நம்பிகள்.

கருத்துரை :

விரிக்கப்பட்ட துணியில் இருந்த பழங்களி உணவையும் பறையராகிய தாழ்ந்த குலத்தில் பிறந்த சேந்தனார் கொடுக்க இறைவன் திருவமுதாக ஏற்றுக் கொண்டான். எனவே பூக்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட புலியூர், எனப்படும் தில்லை பொன்னம்பலத்தில் நடனம் செய்யும் கூத்தப் பெருமானுக்கு அல்லாமல் பிற தெய்வங்கட்கு ஆளாவதேனோ?

2) சித்தாந்த சாத்திரம் -திருக்களிற்றுப் படியார்

அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்.

- உய்யவந்ததேவநாயனார்.

கருத்துரை :

உண்மை அன்பரான சேந்தனார், விரிக்கப்பட்ட துணியில் பழைய உணவை, இளகிய மனத்துடன் நிவேதனம் செய்ய, தளர்ந்த சடையுடைய சிவபிரானார் விரும்பி உண்ணும் அமுதம் ஆயிற்று.

3) சிவஞான போதச் சிற்றுரை

வரையேல் தவிட்டமுதம் சேந்தனிட வுண்டனை
வல்லின மென்றாலும்
உரையேல் தவிட்டமுத லாகுமோ வெனைச்சித்தென்று
உரைக்கி லென்னாம்
நரையேல் தவிட்டமுத னாளவனாக் கொண்டுநறும்
புலிசை மேவும்
கரையேற விட்டமுதல்வா உன்னையன் றியுமோர்
கதியுண் டாமோ

- மாதவச் சிவஞான சுவாமிகள்

கருத்துரை :

குறையில்லாத தவிட்டுக்களி உணவை சேந்தன் கொடுக்க இறைவனாகிய நீ உண்டது கடினமான செயல் என்றாலும், ஆராய்ந்து பார்க்கும்போது தவிட்டுக்களிக்கு இணையான அமுதம் என்று வேறு உணவைச் சொல்ல முடியுமா? தவிட்டுக் களியை அளவீடாகக் கொண்டு வீடுபேற்றை அருளிய தில்லையில் வாழும் பெருமானே, உன்னையன்றி இவ் உலகில் வேறு கதி எதுவும் இல்லை.

4) **தமிழலங்காரம்**

**அல்லையொப் பாமிடற் றாதிக்குச் சோழன் அமுது கைத்து
முல்லையிற் கேழ்வர காலட்ட கூழ்ச்சுவை முந்தச் செய்து
தொல்லை மறைநலத் தந்தணர் பற்பலர் சூழ்ந்து வப்பத்
திலலையிற் றேரும் இழுத்தது சேந்தன் செழுந் தமிழே.**

- சிற்றிதழ்

கருத்துரை :

நீலகண்டத்தை உடைய சிவபெருமானுக்கு முல்லை மலர் போன்ற வெண்ணிறச் சோற்றை சோழன் நிவேதனம் செய்தான். ஆனால், சேந்தனார் கேழ்வரகுக் களியை நிவேதனம் செய்ய சோழனின் அமுதை விட மிக்க சுவையுடையது என விரும்பி உண்டார் இறைவன். தேர்த்திருவிழா நாளில் தில்லை அந்தணர்கள் பலர் சூழ்ந்திருப்ப புறப்படாதிருந்த தேரினைப் பல்லாண்டு பதிகம் பாடி சேந்தனார் நான்கு திருவீதியை வலம்வரச் செய்தார்.

5. சேந்தனளித்த திருவமுது.

- கே.எம்.வேங்கடராமையா

சேந்தனார் திருவிசைப்பா பாடியவர்களுள் ஒருவர். இவர் பாடியதே "தில்லைத் திருப்பல்லாண்டு" என்ற பதிகம். இவர் தன் மனைவி மக்களுடன் தில்லையில் விறகு விற்பதால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தார். அவ்வூதியத்தைக் கொண்டே சிவனடியார் ஒருவருக்கு உணவளிக்கும் நியமும் பூண்டு ஒழுகலானார். ஒரு நாள் விடாது மழை பெய்தது. அன்று பெற்ற ஊதியமோ மிகச் சிறியது. அதனால் பெற்ற மாவைக்கொண்டு களியாக்கிச் சிவனடியாரை எதிர் நோக்கியிருந்தார். சிவபெருமானே முதிய அடியவராகச் சென்றார். சேந்தனாரும் களியுணவை அளித்தார். அடியவரும் சிறிது உண்டு எஞ்சியதைத் தன் கந்தையில் முடிந்து கொண்டு சென்றார்.

நாடோறும் சிவபூசையில் கூத்த பெருமானின் திருச் சிலம்பொலியைக் கேட்கும் பரம பக்தனாகிய சோழனொருவன், அந்த நாளில் மட்டும் சிலம்பொலி கேட்காதவன் ஆனான், வருந்தினான், அவனுக்கு இறைவன் கனவில் தோன்றிச் சேந்தனளித்த களியமுது பற்றிக் கூறினார். அரசன் சேந்தனைக் காண விருப்பங்கொண்டான். மறுநாட்காலை தில்லைக் கூத்தபெருமானை வணங்குவதற்கு வந்தான், பொன்னம்பலத்தில் களியமுது சிந்தியிருத்தலைக் கண்டான், தான் கனவிற் கண்டதைத் தெரிவித்தான். சேந்தனைக் காண வேண்டுமென்று துடித்தான். தெய்வச் செயலாக மார்கழித் திருவாதிரை நாளில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. தேர் நகரவில்லை. அப்பொழுது சேந்தனே பல்லாண்டு பாடுக, தேர் ஓடும் என்ற வனொலி கேட்டது. தேர் திருவிழாவுக்கு வந்திருந்த பெருங்கூட்டத்திலிருந்து சேந்தனார் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்" என்று தொடங்கும் திருப்பல்லாண்டு எனும் தில்லைத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். வடம்பிடிக்காமலேயே தேர் உலாவந்து நிலையை அடைந்தது.

இச்சேந்தனார் செய்யுறை என்னும் ஊரவர் என்று திருப்பல்லாண்டில் தெரிய வரும். இவர் "பறையர் குலத்தவர்"

என்பதும் இறைவனுக்கு களியமுது படைத்த பேருடையார் என்பதும் "கோயில் திருப்பண்ணியர் விருத்தம்" 26ம் பாடலில் தெரியவரும்.

இதனுள் சேந்தனார் களி (சோறு) அளித்தமையும், இறைவனேற்றமையும், சேந்தனார் பறையர் மரபினர் என்பதும் போதரும், சேந்தனார் களியமுதருந்திய செய்தியை உய்யவந்த தேவர் தாம் அருளிய திருக்களிற்றுப்படியார் எனும் சரித்திர நூலில் குறித்துள்ளார். இதனாலும் சேந்தனாரின் அன்பின் திறம் சாத்திர நூலிலும் போற்றப்பெற்றமை போதகும்.

6. திருவிசைப்பா ஆசிரியர்கள்.

- பேராசிரியர் திரு.க.வெள்ளைவாரணனார்.

திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டிடிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி சேதிராயர் என்னும் ஒன்பதின்மரும் பாடிய திருவிசைப்பா பதிகங்கள் இருபத்தெட்டும் திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் ஆக இருபத்தொன்பது திருப்பதிகங்களின் தொகுதி ஒன்பதாந்திருமுறை யாகும். இவற்றுள் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மட்டும் பதினாறு பதிக்கங்கள் உள்ளன. அவற்றுள் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்" எனத் தில்லைமாநகரையும் அங்கு வந்து இறைவனை வழிபடும் சிவனடியார்களையும் வாழ்த்தித் தொடங்குகின்றது.

தில்லையில் தங்கி விறகு விற்பதனால்வரும் ஊதியத்தை கொண்டு நாள்தோறும் அடியார்களுக்கு உணவளிக்கும் கடமையை மேற்கொண்டு வாழ்ந்தவர் சேந்தனார் ஆவார். பல நாட்கள் தொடர்ந்துமழைபெய்தமையால்பசியால்வருத்தமுற்றசேந்தனார் விறகு விற்றுக்கிடைத்தமாவைத் தம்மனைவிகையிற்கொடுத்து களியாக்கச் செய்து சிவனடியாரை எதிர் பார்த்திருந்தார். சிவபெருமானே முதுமைப் பருவமுடைய அடியாராகச் சேந்தனார் இல்லத்திற்கு எழுந்தருளி, அவர் அன்பினால் அளித்த களியமுதை உண்டு மகிழ்ந்து, அடுத்த வேளைக்கும் வேண்டும் என்பராய் எஞ்சிய களியையும் பழங்கந்தையில் முடிந்து கொண்டு பொன்னம்பலத்தை அடைந்தார். இ∴து இவ்வாறாக, தில்லையில் கூத்தபெருமானுக்குத் தான் நடத்தும் நாள் வழிபாட்டில்பெருமானது திருவடிச் சிலம்பொலி கேட்டு மகிழ்வதை நியதியாகச் கொண்ட சோழமன்னன், அன்றிரவு முழுதும் காத்திருந்தும் அவ்வொலியைக் கேட்கப் பெறாது வருந்தித் துயில்கொண்டான். நடராசப் பெருமான் மன்னன் கனவிலே தோன்றி, "வேந்தனே கவலைப்படாதே, இன்று நாம் சேந்தனளித்த களியமுதை உண்ணச்சென்றமையால் நீ நடத்தும் பூசைக்கு வரத் தாழ்ந்தோம்" என்று கூறி மறைந்தருளினார்.

விழிப்புற்ற சோழமன்னன் சேந்தனாரைக் காண விரும்பி விடியற்காலையில் தில்லைப்பெருமானை வணங்கச் சென்றான். பொன்னம்பலத்தில் களியமுது சிந்திக் கிடப்பதைக் கண்ட வேந்தன், தான் இரவிற்கண்டகனவின் உண்மையத் தில்லை வாழ் அந்தணர் பலருக்கும் தெரிவித்தான். அதனை யுணர்ந்த பலரும் சேந்தனாராகிய அவ்வடியவர்யார் என்பதனை அறிந்து கொள்ளப்பெரிதும் விருப்பினார்கள்.

மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் பெய்த மழையால் தில்லையில் திருத்தேர் சேற்றிலழுந்தி ஓடாது தடை பட்டு நின்றது. அப்பொழுது, சேந்தனே திருத்தேர் ஓடப்பல்லாண்டு பாடுக என்றதொரு வானொலி யாவரும் கேட்கத் தோன்றியது. அங்கு தேரிழுக்கும் அடியார் குழுவில் நின்ற சேந்தனார். "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்" எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப்பாடினார். வடம் பிடிக்காமலேயே தேர் திருவீதியில் ஓடி நிலைக்கு வந்து சேர்ந்தது. இவ்வற்புதத்தைக் கண்டார் அனைவரும் சேந்தனாரது பேரன்பின் திறத்தையும் அவர் பொருட்டுக் கூத்தப்பெருமான் நிகழ்த்திய அருட்செயலையும் எண்ணி யெண்ணி நெஞ்சம் நெக்குருகினார். பறையர் குலத்தவராகிய சேந்தனாருக்கு அருள் செய்த நிகழச்சியை நம்பியாண்டார் நம்பிகளும், திருக்களிற்றுப் படியாரில் உய்யவந்ததேவ நாயனாரும் முறையே பரவிப்போற்றியுள்ளார்கள்.

சேந்தன் உருவச்சிலை

திருவிடைக்கழி முருகன் கோயிலில் உட்பிரகாரத்தில் வைக்கப்பட்டுள்ள அருளடியார் சேந்தனாரின் கற்சிலை

பகுதி III.

ஆதிதிராவிட அருளடியார் சேந்தனார்

1. நூல் அறிமுகம்

சைவத்திருமறைகள் பன்னிரண்டு. அதில் ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருவிசைப்பாவில் மூன்று திருப்பதிகங்களும், திருப்பல்லாண்டும் பாடி அருளிய சேந்தனாரின் எளிய வரலாற்றைக் குறிப்பதே இச்சிறுநூலாகும்.

2. சேந்தனாரின் பிறப்பும் இளமையும்

காவிரியாற்றினால் நீர்வளமும், நிலவளமும், செழித்தது சோழநாடு, அந்நாட்டின் கண் இன்றைய மயிலாடுதுறைக்கருகில் உள்ள திருவிடைக்கழியை அடுத்தது, திருப்பிடவூர் என்னும் சிற்றூராகும். நாகவம்ச நாகநாதர் ஆலயத்தால் பழம்பெருமை வாய்ந்த அச்சிற்றூரில் இன்றைய ஆதிதிராவிடர், என்னும் பறையர் குலத்தில் பிறந்தவர்தான் நம் அருளடியார் சேந்தனார். இச்செய்திகளைப் பதினோராம் திருமறையில் பக்திமானும், அர்ச்சகரும் புலவருமாகிய நம்பியாண்டார் நம்பிகள் பாடி அருளிய கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 26ம் பாடல் தெரிவிக்கின்றது.

"பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொ னம்பலத்து
வேந்தன் றனக்கன்றி யாட்செய்வ தென்னே விரிதுணிமே
லாந்தண் பழைய அவிழையன் பாகிய பண்டைப் பறைச்
சேந்தன் கொடுக்க அதுவுந் திருவமு தாகியதே"

எனவரும் இப்பாடலினால் அன்பாகிய பணடைப் பறைச் சேந்தன் என குறிக்கப்பட்டுள்ளதால் இவரின் குலம் ஆதிதிராவிடர் எனத் தெளிவாய் விளங்குவதைக் காணலாம். தில்லை அம்பலத்து இறைவன் கந்தைத் துணியை உடுத்திக்கொண்டு அடியார் போல சேந்தனாரின் குடிசைக்குச்சென்று பழைய களியமுதை விரும்பி உண்டு வந்த வரலாற்று உண்மை விளங்குவதுங் காணலாம்.

இவரின் இளமைப் பெயர் சேந்தன் என்பதாகும். இப்பெயர் முருகக் கடவுளைக் குறித்த தூய தமிழ்ச் சொல்லாகும். சிவந்த நிறத்தை உடையவன் என்று பொருள் தரும். முருகன் தலமாகிய திருவிடைக்கழியின் அருகில் உள்ள திருப்பிடவூரில் பிறந்தவர் என்பதாலும், இவரின் பெற்றோர்கள் ஓரளவு தெய்வபக்தியும் கல்வி நலமும் உள்ளவராதலின் இவருக்கு முருகப் பெருமானின் பெயராகச் சேந்தன் எனத்திருப்பெயரை வைத்துள்ளனர். தம் தந்தையின் பால் கல்வி கற்று அதனால் இளமைப் பருவத்திலேயே எண்ணும் எழுத்துமாகிய கல்வியறிவு நிரம்பப் பெற்றவரானார். பழந்தமிழ்ப் பாடல்களைப் படிப்பதிலும், செய்யுள் இயற்றுந் திறனும் வாய்க்கப்பெற்று கல்விப்பயனாகிய தெய்வ பக்தி. நல்லொழுக்கம் முதலியவற்றிலும் சிறந்து விளங்கினார். இவர் வாழ்ந்த காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.

3. சேந்தனாரின் இல்லறப் பெருமைகள்

அன்றைய சோழநாட்டு காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகப் பெருஞ்செல்வராக விளங்கியவர் திருவெண்காடர். இவர் தமது பெருஞ்செல்வத்திற்குக் கணக்கராகவும், பாதுகாவலராகவும் சேந்தனாரை நியமித்துக் கொண்டார். இத்திருவெண்காடாரே அருள்மிகு சித்தர் பட்டினத்து அடிகளாவார்.

கணக்கராக அமர்ந்ததும் சேந்தனாருக்கு ஒரு நிலையான வருவாய் கிடைத்தது. தனக்கு வாழ்க்கைத் துணை நலமாக ஒரு நங்கையைத் திருமணம் செய்துகொண்டு இல்லறமாம்

நல்லறம் நடத்திவந்தார். வாழ்க்கையின் நன்கலமாக ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானார். இன்ப-துன்ப காலங்களிலும் இல்லத் துணைவியாருடன் இணைந்து மனமாறுபாடின்றி வாழ்ந்து வந்தார். பக்தியிலும், அறச்செயலிலும் சிறந்து விளங்கியதுடன் இல்வாழ்விலும் சிறப்புற்று விளங்கினார். மனைமாட்சியிற் சிறந்து விளங்கிய காலத்தில் இறைவனின் திருவிளையாடல் ஒன்று நிகழ்ந்தது. இவரை அன்புடன் ஆதரித்து வந்த பட்டினத்துச் சுவாமிகள் துறவு நிலையை மேற்கொண்டார்.

4. சேந்தனார் சிறைபடுதல்

துறவறம் பூண்ட திருவெண்காடர், "சேந்தா சிறைப்பட்டிருக்கின்ற செல்வம் எங்கிருந்தாலும் மனத்தை ஈர்க்கும். எடுத்து அவைகளை இறைத்துவிடு," என்று திருவெண்காடர் தனது பெருஞ்செல்வத்தை யெல்லாம் சேந்தனாரிடம் ஒப்படைத்து தான தருமங்களை விரிவாகச் செய்யும்படி அருளாசி வழங்கினார். பட்டினத்தடிகளின் உத்தரவின்படி சேந்தனார் ஏழை எளியோர்க்கெல்லாம் உதவிகள் செய்து வந்தார். மேட்டுக்குடி மக்களாகிய திருவெண்காடரின் உறவினர்கள் சேந்தனாரின் மேல் பொறாமை கொண்டனர். திருவெண்காடரின் பெருஞ்செல்வத்தையெல்லாம் வீண்விரயம் செய்கிறார் என்று சோழ மன்னன் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவனிடம் சென்று சேந்தனார் மீது குற்றம் சுமத்தினார்கள். முழு உண்மை என்ன, ஏது என்று அறியாத அரசனும் சேந்தனாரை அழைத்து வரும்படி உத்தரவிட்டான். அரசவைக்கு சேந்தனார் வந்ததும் அவரைப்பார்த்து "திருவெண்காடரின் செல்வம் அளவற்றது என கேள்விப்பட்டிருக்கிறேன். அச்செல்வம் எல்லாம் எங்கே உள்ளது, என்ன செய்தீர்? என வினவினான். சேந்தனார் பட்டினத்தடிகளின் உத்தரவின் படி நடந்ததை எல்லாம் கூறினார். சேந்தனார் கூறிய பட்டினத்தாரின் தத்துவ விளக்கங்கள் அவனுக்குப் புரியாததால் அரசன் சேந்தனார் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஓர் உத்தரவின்மூலம் சேந்தனாரை சிறைக்காவலில் வைத்தான். சதா சிவமாய் எப்போதும் சேந்தனார் இருந்து வந்ததனால் சிறைவாசம் பற்றி கவலையற்று இருந்தார். இதனைக் கேள்வியுற்ற சேந்தனாரின் மனைவியும் மகனும் மிகவும் அஞ்சினார்கள். அரசனால் தங்கட்கு ஏதாவது துன்பம் வரலாம் என்றஞ்சி பக்கத்தில் உள்ள நாங்கூர்

என்னும் சிற்றூரையடைந்தார்கள். அங்கே கூலி வேலைகள் செய்து காலங்கழித்து வந்தார்கள், இதனால் பின்னாட்களில் நாங்கூர்ச் சேந்தன் என்று கூட சேந்தனார் அழைக்கப்பெற்றார்.

5. சேந்தனார் விடுதலை அடைதல்

வடதேசம் உட்பட, தென்னாட்டின் பலதலங்களுக்கும் யாத்திரை சென்று ஆங்காங்கே பல அற்புதங்கள் நிகழ்த்திய பட்டினத்தடிகள் சிலகாலம் சென்று திருவெண்காட்டுக்கு, தன் அன்னையின் இறுதி நினைவாக மீண்டும் வருகை புரிந்தார். பக்கத்து ஊரான நாங்கூரில் வாழ்ந்து வந்த சேந்தனாரின் மனைவியும், மகனும் அடிகளாரின் வருகையைக் கேள்வியுற்றனர். உடன் விரைந்து அடிகளாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். தங்களின் கணக்கராக இருந்த சேந்தனாரின் மனைவி தாம் எனவும், இத்தகு துயர் நிலைக்குக் காரணத்தினையும் சேந்தனார் அரசனால் சிறைப்பட்ட செயலையும் கூறி கண்ணீர் சிந்தினார். பட்டினத்தடிகள் உள்ளம் இரங்கப்பெற்றவராய் அக்கணமே திருவெண்காட்டிறைவர் மீது

"மத்தளைத் தயிருண்டானும் மலர்மிசை மன்னினானும்
நித்தமுந் தேடிக்காணா நிமலனே அமல மூர்த்தி
செய்த்தளைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தளிட்ட
கைத்தளை நீக்கியென்முன் காட்டுவெண் காட்டு ளானே"

என்னும் பாடலை வேண்டுகோளாய்ப் பாடியருளினார். அடியவர்களின் செந்தமிழ்ப் பாடல்களை கேட்டு மகிழும் திருச்செவிகளையுடைய சிவபெருமானார் இப்பாடலைக் கேட்டதும் சேந்தனாரின் துன்பத்தை நீக்குதற் பொருட்டு வினாயகப்பெருமானுக்குக் குறிப்பால் உணர்த்தினார். இக்குறிப்பை உணர்ந்த வினாயகர், யானை உருவம் கொண்டு கோபக்குறியுடன் சென்று சிறைக் கூடத்தை உடைத்து சேந்தனாரின் கைவிலங்கைத் தகர்த்தார். பின்தம துதிக்கையினால் அவரைத் தூக்கி வந்து பட்டினத்தடிகளாரின் அருகில் சேர்த்துவிட்டு மறைந்தருளினார். அடிகளாரின் திருவடிகளில் சேந்தனார் வீழ்ந்து வணங்கினார். சேந்தனாரின் பக்தி நலத்தையும், அற்புதங்கள் நிகழ்த்தும் ஆற்றலையும் ஞானக்கண்களால் உணர்ந்து பட்டினத்தடிகளும் சேந்தனாரின்

திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். அடிகளார் சேந்தனாரைத் தில்லையில் சென்று வசிக்குமாறு கட்டளையிட்டருளினார்.

திருவெண்காடரின் பெருஞ் செல்வத்திற்குப் பாதுகாவலராக இருந்தும் தமக்கென எதுவும் எடுத்துக் கொள்ளாமல் எளிய முறையில் வாழ்ந்ததனால் பொருட்பற்று அற்ற நிலையைக் காட்டுவதாகச் சேந்தனாரின் வாழ்க்கைக் குறிப்பு அமைகிறது.

6. சேந்தனாரின் சிதம்பரவாசம்

சேந்தனார் திருமயிலாடித் தலத்தின் வழியாகக் கொள்ளிடம் ஆற்றைக் கடந்து வடதிசையில் உள்ள தில்லையெனும் சிதம்பரத்தை வந்தடைந்தார். முற்காலத்தில் தில்லை, மரங்கள்அடர்ந்த காட்டுப் பகுதியாதலின் தில்லைவனம் என்ற பெயர்பெற்ற தலம் இன்றைய சிதம்பரம் ஆகும்.

சேந்தனார் தில்லைக் கூத்தனைத் தரிசிக்க அளவிலா பேரன்பு மிக்கவரானார். அக்காலங்களில் தம்குலத்தவர்கள் தீண்டாமையின் காரணத்தால் ஒதுக்கப்பட்டு உள்ளே சென்று இறைவனை தரிசிக்க முடியாமல் இருந்தனர். இத்தகு சூழ்நிலையில் இறைவனைத் தரிசிக்க இயலவில்லையே என உள்ளம் வருந்தினார். பிறப்பினால் உயர்வு - தாழ்வு கற்பித்துத் தீண்டாமையை வலியுறுத்திய சிலர் பலரைத் தாழ்த்தி இழிவுபடுத்திய காலமாகும் அது.

சேந்தனார் தில்லையின் எல்லைக்கு வெளியில் ஓர் இடத்தில் சிறு குடிசை அமைத்துக்கொண்டு அங்கே தம் குடும்பத்துடன் தங்கினார். விறகு வெட்டி விற்கும் தொழிலைச் செய்தார். விறகுச் சுமைகளைச் சுமந்து சென்று விற்று வந்த வருவாயைக் கொண்டும் மனைவியும் மகனும் செய்த கூலி வேலையிற் கிடைத்த வருவாயிலும் எளிய முறையில் தம் குடும்பத்தை நடத்தி வந்தார். வறுமையான சூழ்நிலை ஆட்கொண்டாலும் எப்போதும் "சிவ சிவா" என கூத்தனின் திருநாமத்தைச் சொல்லி இறைவனைப் பாடியும் துதித்தும் வந்தார். விறகை வெட்டும்போதும், அதனைச் சுமந்து சென்று விற்கும் போதும் இறைச் சிந்தையுடன், சீவன் முத்தராய்ச் சிறந்து விளங்கினார். இவ்விடத்தில் சேந்தனார் காலத்திற்கும் பிற்பட்டவரான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின்.

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவா எனப்படுமே"
என்னும் திருவாக்கினை நாம் நினைவுகொள்ளத் தக்கதாகும்

7. சேந்தனாரின் அன்பின் திறம்

ஏழை, எளியோர்க்கெல்லாம் இரங்கும் குணமுடைய சேந்தனார், விறகு விற்று சிறு வருவாயில் ஒவ்வொருநாளும் ஒரு சிவனடியார்க்கு உணவு தந்த பிறகே தாம் உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். "வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை" என்னும் முதுமொழிக்கேற்ப வறுமை நிலையிலும் உணவு கொடுத்தலாகிய செயற்கருஞ்செயலை செம்மையாகச் செய்து வந்தார். அடியவர்க்கடியராய், அன்பின் செல்வராய்ச் சேந்தனார் விளங்கினார்.

ஓர் ஆண்டு கடும் மழைக்காலம் தொடங்கியது. சில நாட்கள் தொடர்ந்து மழை பொழிந்தது, வழக்கம்போல் விறகு விற்ற சிறு தொகையில் கேழ்வரகு மாவு வாங்கி வந்தார். இவரின் மனைவியார் அதனை எளிய களியுணவாகச் செய்தார். யாராவது சிவனடியார் வரமாட்டார்களா என சேந்தனாரின் உள்ளம் ஏங்கிக் கொண்டிருந்தது. மழையின் காரணமாக ஓர் அடியவர் கூட வந்து சேந்தனாரின் உணவை ஏற்றுக்கொள்ளவில்லை. மனம் நிம்மதியில்லாமல் தவித்த சேந்தனார், தானும் உணவு அருந்தாமல் சிவச் சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

சேந்தனாரின் அன்பின் திறனை உலகுக்குத் தெரிவிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது என உணர்ந்த தில்லைக் கூத்தன் தாமே ஒரு கிழ அடியார் போல் உருவங்கொண்டு மழையில் நனைந்து வருந்துவராகி சேந்தனாரின் சிறு குடிசையை அடைந்தார். அவரைக் கண்ட சேந்தனார், ஞாயிறு கண்ட தாமரை மலர்போல அகமும் முகமும் மலர்ந்தார். அடியாரைப் பணிந்து திருவடி தொழுது வணங்கி எதிர் கொண்டழைத்து தம் இல்லத்தில் அமரச்செய்தார். வேண்டிய பணிவிடைகளைச் செய்து களி உணவைப் புசிக்குமாறு அன்புடன் வேண்டினார். அடியவர் உருவம் தாங்கிய கூத்தப் பெருமானார் களியைஉவப்புடன் உண்டார். கொஞ்சம் களியுணவைச் சிறிதளவு தம் கந்தைத் துணியில் பெற்றுக்கொண்டு அம்பலம் சென்று மறைந்தார், அதன் பின்னரே சேந்தனாரும் அவர் குடும்பமும் உணவைப் புசித்து மகிழ்வு பெற்றனர். அன்றிரவு முழுவதும் சேந்தனார் சிவ நினைவுடன் பேரின்ப நிலையில் ஆழ்ந்திருந்தார். இவர்

மெய்யன்பிற் செய்த செயலைச் சித்தாந்த சாத்திரம் பதினான்கில் ஒன்றான திருக்களிற்றுப்படியார் நேரிசை வெண்பா 53-ஆம் பாடலில்

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க - அவிழ்ந்த சடை
வேந்தனார்க் கின்னமுதம் ஆயிற்றே மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்"

என்றிருப்பதை மெய்யன்பர்கள் காணலாம்.

"வரையேல் தவிட்டமுதம் சேந்தனிடவுண்டனை" என்னும் மாதவச் சிவஞான சுவாமிகளின் திருவாக்கினாலும் தெளிவுபடும். பூஜை காலங்களில் சேரமான் பெருமாள் நாயனார்க்கு சிற்சபேசர் திருவடிச் செலம்பொலி கேட்குமாம். அது போல அக்காலங்களில் தில்லையில் தங்கியிருந்த சோழமன்னன் ஒருவன் தினமும் கூத்த பெருமானை வணங்குவது வழக்கம். அப்போது இறைவன் ஆடும் திருநடனத்தின் பாதச் சிலம்பொலி கணீர், கணீரென்று அவன் காதுகளில் ஒலிக்கும், இது வழக்கமாக பூசையின்போது நடக்கும் ஓர் அற்புத நிகழ்ச்சி. சேந்தனார் இல்லத்திற்கு இறைவன் களியுணவு உண்ணச் சென்ற அன்று இரவு வழக்கமாகக் கேட்கும் சிலம்பொலி ஒலிக்கவில்லை. சோழமன்னன் மிகவும் கலக்கமுற்றன். அதே சிந்தனையில் அன்றிரவு உறக்கத்தில் ஆழ்ந்தான். கூத்தப்பெருமான் சோழன்னன் கனவில் தோன்றி "வேந்தனே கவலைப்படேல், இன்று நாம் சேந்தன் அளித்த களியமுதை உண்ணச் சென்றுவிட்டோம். அதனால் நீ நடத்தும் வழிபாட்டிற்கு வரமுடியவில்லை. வருந்தற்க எனக்கூறி மறைந்தருளினார்.

அரசன் திடுக்கிட்டு கண்விழித்து எழுந்தான். பக்தியில் சிறந்த அற்புதச் சேந்தனாரைத் தாமும் கண்டு வணங்கிட வேண்டுமென்று அவா கொண்டான். பொழுது புலரும் அன்றைய காலைப் பொழுதில் தில்லையம்பலம் சுற்றிவந்தான் .அவ்வாறு சுற்றி வரும்போது திருக்களிற்றுப்படி முதல் பொற்சபை வரை களியமுது சிந்திக்கிடப்பதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து தெளிவுபெற்றான். இறைவனின் திருவிளையாடலை எண்ணி உள்ளம் நெகிழ்வுற்றான் தன்னுடன் வந்த தில்லைவாழ் அந்தணர்களுக்கும், மற்றுமுள்ளஅடியார்களுக்கும் கூத்தன் திருவிளையாடலின் அற்புதத்தைக் கூறினான். ஆங்காங்கே களியமுது சிந்திக்கிடப்பதையும் அவர்களுக்குக காட்டினான்

இறைவனின் அருளாசியைப் பெற்ற சேந்தனாரை தரிசிக்க வேண்டுமென்று அவர்களிடம் கூறினான். இதனைக் கேட்ட அந்தணர்களும் அடியார்களும் அரசனின் விருப்பமே தங்களின் விருப்பம் என்று கூற அரசனுடன் எல்லோரும் சென்று தில்லையின் கண் ஒருபுறத்தில் சேரியில் வாழ்ந்த சேந்தனாரைக் கண்டு தரிசித்து மனமகிழ்ச்சிக் கொண்டார்கள்.

சேரியில் ஓர் ஒதுக்குப்புறத்தில் வசிப்பதைவிட சேந்தனாரைத் தன் அரண்மனையில் வந்து தங்கிக் கொள்ளும்படி மன்னன் வேண்டினான். சேந்தனார் அகந்தை நீக்கிய எளிய அடியாராதலின் அரசனின் வேண்டுகோளுக்கு உடன்படாதவரானார். தனது வேண்டுகோளை சேந்தனார் மறுத்துவிட்டாரே என மனம் வெதும்பிய அரசன், பக்கத்தில் இருந்த ஒரு விறகு வெட்டுங் கோடாரியால் தன் உயிரைப் போக்கிக் கொள்ள முயற்சித்தான். அந்தணர்களும் அடியார்களும் திடுக்கிட்டனர். பரிவுடன் அதனை சேந்தனார் தடுத்து நிறுத்தினார். எந்த வகையிலாவது தனக்கு உதவி செய்யவேண்டும் என்ற அரசனின் கருத்தை அறிந்தார். சேந்தனார் தினம் கொண்டுவரும் விறகுக்குச் சுங்கவரி விதிக்காமலும், அதிக விலை கொடுத்தும் உடனுக்குடன் வாங்கிக்கொள்ளவும் அரசன் ஏற்பாடு செய்து மனம் நிறைவு கொண்டான். சேந்தனாரும் அதற்கு உட்பட்டு மனம் நெகிழ்ந்து போனார். அடியார்களுக்கு அளித்துவரும் களியுணவின் தொண்டுகளை மேன்மேலும் சிறப்பாகச் செய்து வந்தார்.

8. சேந்தனாரின் அற்புதச் செயல்கள்

அருள்மிகு தில்லைக் கூத்தனின் மார்கழி மாதத் திருவாதிரைத் திருவிழா மிகவும் சிறப்புத் தன்மை வாய்ந்தது. பத்து நாட்கள் நடக்கும் விழாவின் இறுதியில் திருவாதிரை விழாவாக முடிவுபெறும். அன்று தேர்த்திருவிழா, பெருமானார் தேரில் எழுந்தருளி நான்கு வீதியிலும் உலாவருவது வழக்கம். தேர்புறப்பட்டுச் சிறிது தூரம் வந்ததும் மழையின் காரணமாகத் தேர்ச் சக்கரங்கள் மண்ணில் புதைந்து நின்றுவிட்டது. அடியார்கள் தேரின் வடத்தை இழுத்துப் பார்த்து முயற்சித்தும் தேர் நடபெறவில்லை.

சேந்தனாரை உலகுக்கு மீண்டும் தெரிவிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதை அறிந்த இறைவனார் "சேந்தா தேர் நடக்கப் பல்லாண்டு பாடுக" என்று அசரீரி என்னும்

வானொலியின் மூலமாக யாவருங்கேட்க திருவருள் புரிந்தார். திருத்தேரில் இருக்கும் இறைவனைத் தரிசிக்க வந்த அடியார் கூட்டத்தில் ஒருவராக, ஒருபுறம் ஒதுங்கி நின்ற சேந்தனார் இறைவனின் கட்டளையை மறுத்தல் கூடாது என அஞ்சியவராய்,

"மன்னுக தில்லை, வளர்க நம்
பக்தர்கள், வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்ட பத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே"

எனத் தொடங்கும் தில்லைத் திருப்பல்லாண்டு முதல் திருப்பதிகத்தைப் பாடிப்போற்றினார். தேர் உருண்டு நான்கு வீதிகளையும் சுற்றி நிலைக்கு வந்து சேர்ந்தது. இவ்வற்புதத்தை நேரில் கண்ட சோழமன்னனும் மற்றவர்களும் சேந்தனாரை மேலும் புகழுக்குறியவராக்கி வணங்கிப் போற்றினார். ஆயினும் தீண்டாமையின் காரணமாக சேந்தனாரைக் கோயிலின் உள்ளே சென்று வழிபாடு செய்வதற்கு மட்டும் யாவரும் அனுமதிக்கவில்லை. கோயிலின் உள்ளே சென்று வழிபாடு செய்ய இயலவில்லை யென்றாலும் இறைவன் மீது சேந்தனார் கொண்டுள்ள அன்புமட்டும் குறையவே இல்லை; நிறைவு பெற்றவராகவே விளங்கினார்.

தேர்நடத்தக் கூடிய அற்புத ஆற்றலைப் பெற்றிருந்தும், தமக்கென்று எவ்வித அற்புதத்தையும் செய்து கொள்ளாமல் மன அடக்கத்தையே பெற்றிருந்தார். ஆடம்பரம் புகழ் முதலியவற்றை விரும்பாமலும், எவ்வித சமயப் போராட்டங்களிலும் ஈடுபடாமல் பக்திவழியிலும், இறைத் தொண்டிலும் உறுதி உள்ளவராய் சிறந்து விளங்கினார். இறைவன் எழுந்தருளிய திருத்தேரை இழுத்துவந்து நிலையில் நிறுத்தியது சேந்தனாரின் தமிழ்ப் பாடலேயோம் என்பதனைத் தமிழலங்காரம் 56-ம் பாடல் தெரிவிக்கிறது.

"அல்லையொப் பாடமிடற் றாதிக்குச் சோழன் அமுது கைத்து
முல்லையிற் கேழ்வர காலட்ட கூழ்ச்சுவை முந்தச் செய்து
தொல்லை மறைநலத் தந்தணர் பற்பலர் சூழ்ந்தவப்பத்
தில்லையிற் றேரும் இழுத்தது சேந்தன் செழுந்தமிழே"

சோழமன்னனின் நூறுகல அறுசுவை உணவு இறைவனுக்குப் பெரிதாய்ப் படவில்லை. கைப்புச் சுவை மிகுந்து சுவையில்லாமல் போயிற்று. சேந்தனின் களியுணவே இறைவனுக்கு சுவை மிகுந்த உணவாயிற்று. களியுணவை இறைவனுக்கு வழங்கியது, திருத்தேரை வலம் வரச் செய்தது ஆகிய இவ்விரண்டு செயலையும் செய்தது சேந்தனாரின் செழுந்தமிழேயாம் என்பது மேற்கண்ட பாடலின் பொருளாகும். அறுபத்து மூவரையொப்பச் சேந்த நாயனார் என்ற திருப்பெயரும் இவருக்கு வழக்கில் இருந்தது என்பதைக் கரந்தைத்தமிழச் சங்கத்து வெளியீடு மொழியரசி முதல் பாகம் 163-ம் பக்கம் தெரிவிக்கிற செய்தியையும் நோக்கும்பொழுது சேந்தனாரின் இறைநெறியும், அற்புதங்களையும் அன்பர்கள் உணரலாம்.

9. திருவீழிமிழலைத் திருவிசைப்பா அருளல்

தில்லையின் வெளிப்புறத்தில் தங்கி வாழ்ந்த சேந்தனார் பல தலங்களுக்கும் நேரில் சென்று இறைவனைத் தரிசிக்க விருப்பம் கொண்டார். திருவீழிமிழலையென்னும் தலத்தையடைந்தார். அங்குள்ள சமூகச் சூழ்நிலையும் தீண்டாமையின் காரணமாக சரியில்லாமல் இருந்தது. தீண்டாமை நோய் மக்களைத் தீவிரமாகப் பற்றியிருந்தது. கோயிலின் வெளிப்புறத்திலும், தோட்டங்களிலும் நின்றவாறே இறைவனைத் தரிசித்தார்.

"ஏகநா யகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல் வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகு திரு வீழி
மிழலைவெண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே"

எனத் தொடங்கும் திருவீழிமிழலைத் திருவிசைப்பா முதல் பதிகத்தைப் பாடி இறைவனைத் துதித்தார். இத்தலத்தின் கண் வீழியெனுங் கொடிகள் படர்ந்து கிடந்ததாலும், இக்கோமிலுக்குத் தல விருட்சம் இக்கொடியே அமைந்ததாலும் "திரு" எனும் அடைமொழியுடன் திருவீழி மிழலை என்னும் பெயர் பெறுவதாயிற்று. இறைவனின் பெயர் நேத்திரார்ப் பணேசுரர், வீதியழகர், இறைவியின் பெயர் சுந்தர குசாம்பிகை என்பதாகும். இத்தலம் சோழநாட்டில் உள்ள காவிரியாற்றுக்குத் தென்புறத்தில் அமைந்துள்ளது.

சேந்தனார் பாடியருளிய திருவீழிமிழலைத் திருவிசைப்பா பதிகம் பன்னிரெண்டு பாடல்களை உடையது. இத்திருவிசைப்பா இரண்டாம் பாடலில்,

"செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண்குளிர்ந் தனவே"

எனக் கூறியிருத்லால் திருவிழாக் காலங்களில் வீதியுலா புறப்பட்டு வரும் சமயத்தில் மட்டுமே நேரில் தரிசித்துக் கூறியதாகக் தெரிகிறது. இறைவன் இடபாகத்தில் அமர்ந்து வீதியுலா வருவதை

"வளங்கிளர் நதியும் மதியமுஞ் சூடி
மழவிட மேல்வரு வானை"

என 11-ம் பாடல் கூறுகிறது.

சேந்தனார் இத்தலப் பொழிலின் கண் தங்கியிருந்து விழாக்காலங்களில் இறைவனைத் தரிசித்துப் பாடியதே இவ்வூர்த் திருவிசைப்பா பதிகமாகும்.

"வேயிருந்தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந்தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே"

எனப் பாடியதிலிருந்து இத்தலத்தைச் சுற்றிலும் இருந்த பூந்தோட்டங்களில் தங்கியிருந்து இறைவனைப் பாடியுள்ளார். அடியவர்களுடைய திருப்பாதங்களை இந்திரன் முதலான தேவர்கள், போற்றிப் புகழ்வார்கள் என்று 8-ஆம் பாடலால் தெளியலாகும், திருமால் அடியராகிய தொண்டரடிப் பொடியாழ்வார் போன்று சேந்தனாரும் சிவனடியார்களின் திருவடிப் பொடிக்குப் பெருமை அளித்தவராவார்.

"திக்கெல்லாம் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்து அடிமை பூண்டேனே"

என ஆறாம் பாடலிலும் வருகிறது. அடியார்களின் திருவடிப் பெருமையும், சேந்தனாரின் அடக்கத்தையும் காணலாம். இதுவரைக் கூறிய செய்திகளால் சேந்தனார் கோயிலில் உள்ளே சென்று வழிபட முடியாமல் இருந்ததையும், விழாக்காலத்தில் மட்டும் வீதியுலா வரும் இறைவனைத் தூரத்தில் தரிசித்து பாடப் பெற்றதே இவரது பாடல்கள் என்பதும் தெளிவான உண்மையாகும். தீண்டாமையின் காரணமாக மற்றைய தலங்களிலும் இவரது பாடல்கள் கோயிலின் வெளியில் நின்றவாறே பாடப் பெற்றதாகும்.

10. திருவாவடுதுறை திருவிசைப்பா அருளல்

சேந்தனார் திருவாடுதுறை என்னும் தலத்தையடைந்தார். இத்தலமும் சோழ நாட்டின் காவிரியாற்றின் தென் திசையில் உள்ளது. இறைவி ஒப்பிலா முலையம்மை என்னும் பெயர் பெற்றவர். இவர் பசு வடிவத்துடன் இத்தலத்தை அடைந்து இறைவனாகிய மாசிலாமணி ஈசர் அல்லது செம்பொற்றியாகரை வழிபட்ட காரணத்தால் இத்தலம் திருவாவடுதுறை எனப் பெயர் பெறலாயிற்று. செந்தமிழ்த் திருமறையாகிய திருமந்திர நூலை, திருமூலத்தேவர் இத்தலத்தின் கண் இருந்தே அருளிச் செய்தார் என்பர். இங்குள்ள தல விருட்சம் அரசமரம் என்பதால் அரசவனம் என்பது இத்தலமேயாகும். சேந்தனார் இக்கோயிலின் அரசமரத்தடியைப் போதியம் பலமாகக் கொண்டு இறைவன் ஆடியருளிய ஆனந்த தாண்டவ தரிசனத்தைத் தம் மனக் கண்களால் தரிசித்தார். அப்போது அவர்

"பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேல்
ஐயா திருவா வடுதுறை
அமுதே என்றுன்னை யழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக் கொன்று
அருளாது ஒழிவது மாதிமையே"

எனத் திருவாடுதுறைத் திருவிசைப்பா முதற்பாடலைப் பாடினார். இப்பதிகத்தின் பொருள் தலைவன்பால் அன்புகொண்ட தலைவியின் துயரங்கண்டு செவிலித்தாய் இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. பதினோறுபாடல்களையுடைய இத்திருப்பதிகம் அந்தாதித் தொடையாக அமைந்த சிறப்புடையது. அந்தாதி என்றால் ஒரு பாடலின் கடைசி சொல்லை பின்னால் வரும் பாடலின் முதற்சொல்லாய் அமைத்துப் பாடுவதாகும்.

திருவாவடுதுறைத் திருவிசைப்பா பதிகமும் திருவிடைக்கழித் திருவிசைப்பா பதிகமும் நாயகன் - நாயகி பாவமாக அமைத்துப் பாடியிருப்பதால், மாணிக்கவாசகர் போன்றே சேந்தனாரும் ஞான நெறியினர் ஆவர்.

11. திருவிடைக்கழி திருவிசைப்பா அருளல்

சேந்தனாருக்கு மேலும் பலதலங்களைக் கண்டு தரிசிக்கவும், பாடல்கள் செய்யவும் போன்ற எண்ணங்கள் மேலோங்கி நின்றன. என் செய்வது? எங்குச் சென்றாலும் இறைவனை மூலஸ்தானத்தில் கண்டு நெக்குருகிப் பாடமுடியவில்லையே என்ற வருத்தம் இருப்பினும் சிரமங்களைப் பாராது, கோயிலின் வெளிப்புறத்திலும், தூரத்திலும் நின்றவாறே, திருவிடைக்கழி என்னும் தலத்திலும சென்று அருட்பாடல் பாடினார்.

மாலுலா மனம் தந்து என்கையிற் சங்கம்
வவ்வினான், மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே"

இவ்வாறாக திருவிடைக்கழி திருவிசைப்பா முதற்பாடல் பிறந்தது. இத்தலம் கடற்கரையை அடுத்ததாகவும் காவிரி நதிக்கும் தெற்குப் பகுதியில் அமைந்ததாகும். இறைவனின் பெயர் திருக்காமேஸ்வரர். இறைவியின் பெயர் திருக்காமேஸ்வரி, இத்தலத்தில் முருகப் பெருமான் முழுமுதற் தெய்வமாக விளங்குகிறார். குராமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டு அகப்பொருளில் இவ்வூர்த் திருவிசைப்பா திருப்பதிகம் சேந்தனாரால் பாடப்பெற்றதாகவும் முருகப் பெருமான் மீது காதல் கொண்டதலைவியின் துயரத்தைச் செவிலித்தாய் அல்லது நற்றாய் என்பவர் இரங்கிக் கூறுவது போன்ற அமைப்புடையவை இத்திருவிசைப்பாவின் பதிகமாகும் இதுவும் அந்தாதித் தொடையாக அமையப் பெற்ற சிறப்புடைய பாடல்களாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளில் சேந்தனார் சன்மார்க்கம் என்னும் ஞான நெறியைச் சேர்ந்தவராவார். சிவபெருமானையும், முருகப் பெருமானையும் பாடியருளிய இவர் வைதீக சைவத்தைச் சார்ந்தவராவார் எட்டாவது பாடலில்

"திடங்கொள் வைதிகர் வாழ் திருவிடைக் கழியில்" என்றும் ஒன்பதாவது பாடலில், "தெருண்ட வைதிகர் வாழ் திருவிடைக் கழியில்" என்றும் இவரே தமது பாடலில் கூறியிருத்தல் கொண்டு தெளியலாம்.

12. மடம் அமைத்தலும் சமூகத் தொண்டும்

சேந்தனார் தம் குலத்தினர் கல்வியறிவு அற்றவர்களாகவும், சிறு தெய்வ வழிபாடுகளிலும் ஈடுபாடுகொண்டு ஆடிப்பாடுவதையும் கண்டு மனம் நொந்தார். முழுமுதல் தெய்வங்களை முறையாக வழிபாடு செய்ய வேண்டுமென்பதையும் மனத்திற்கொண்டு சைவ நெறியின் நன்மைகளையும், போதனைகளையும் உபதேசித்தார். மேட்டுக்குடி மக்களுக்கு இணையாகக் கல்வியில் அவர்கள் உயரவேண்டுமென்று கல்விப் பணியைத் தொடங்கினார். இப்பணிக்கென வேண்டி மடாலயம் ஒன்றைத் திருவிடைக்கழியில் அமைத்தார்.

"திடம்பெற்ற ஞானிகளின் சேருகை யாற்பசி தீருகையால்
உடம்புற்ற உண்மை யுறுகையி னால்உப தேசிக்கையால்
இடம்பெற்ற மங்கை பங்காளர் அடியார் இருத்தலினால்
மடம் பெற்ற பேறு திருக்கோயிற் கில்லையிம் மானிலத்தே"

என்ற பாடலின்படி இம்மடாலயம் சிறப்புற்று விளங்கியது. சோழமன்னர்களும் பெருங்குணம் கொண்ட செல்வந்தர்களும் கொடுத்த பொருள்களைக் கொண்டு இம்மடத்தை நிர்வகித்து வந்தார். சேந்தனாரின் பக்தி நலத்தையும், சமூகத் தொண்டையும் கண்ணுற்றவர்கள் தாமே முன்வந்து திருமடம் வளர்வதற்கு உதவி செய்தனர். ஆதிதிராவிட மக்களும் அவரின் பேச்சைக் கேட்டு கல்வி கற்று உயர்ந்தனர். தம் குலத்தவர் உயர்வு கருதி கல்வித் தொண்டு புரிந்து செயற்கறிய பெரியோராய் விளங்கினார்.

இம்மடத்தின் சிறப்பை அறிந்த சோழமன்னன் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன் என்பான் இம்மடத்தின் வருவாய்க்கென ஒரு கிராமத்தை நன்கொடையாக அளித்தான். அக்கிராமம் இன்று சேந்தமங்கலம் என்ற பெயருடன் விளங்குகிறது. சேந்தனார் திருவிடைக் கழியில் உள்ள இம்மடத்தையே இறுதிவரை தமக்குறிய இருப்பிடமாகக் கொண்டார். பக்தி நெறி வளரவும் அறநெறி செழிக்கவும் சேந்தனார் நிறைவாழ்வு நடத்தினார். தொண்டு வாழ்க்கையில் பேரும் புகழும் பெற்றார். ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே இவர் புரிந்த கல்வித் தொண்டு வியப்புக்குரியதாகவே விளங்குகிறது.

இக்காலத்தில் சிதம்பரம் நந்தனார் மடாலயத்தில் தவத்திரு சகஜாநந்த சுவாமிகள் செய்துள்ள கல்விப் பணியை நாம் நினைவு கொள்ளத்தக்கதாகும்.

13. இயற்கை எய்துதல்

இறைவன் திருத்தில்லையில் ஞான நடம் புரிந்தருளும் நாள் தைப்பூசமாகும். இறைவன் உலக நன்மையின் பொருட்டு ஆடியருளிய திருநடம் இரண்டு வகைப்படும் ஒன்று ஊனநடம்; இது உயிர்கள் போகம் துய்க்க ஆடிய நடம். இரண்டாவது ஞான நடம்; இது உயிர்கள் வீடுபேறு அடைதற்பொருட்டு ஆடிய நடம். தில்லையில் இறைவன் ஆடிய நடம் உயிர்களுக்கு விடுபேறு அளிக்கவல்ல ஞான நடமாகும்.

தைப்பூச நன்னாளில் சேந்தனார் காலைப்பொழுதில் எழுந்திருந்து சிவத் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். எல்லையில்லாத மகிழ்ச்சி வெள்ளம் அவரது உள்ளத்தில் ததும்பிப் பொங்கியது. இறைவன் தமது சிவசக்தியுடன் திருநடனக்காட்சி நல்கி, சேந்தனாரை தமது திருவடியில் சேர்த்து அருள் பாலித்தார்.சேந்தனார் சுவாமிகள் இறைவன் திருவடி அடைந்த நாள் தைப்பூசத் திருநாளாகும். இச்செய்தி திருவிடை கழித்தலப் புராணத்தில் கூறப்பெற்றதாகும்.

14. சேந்தனாரின் அருட்பாடல்கள்

சைவர்கள் புரியும் சிவவழிபாட்டில் பஞ்ச புராணம் ஓதுதல் வழக்கமான முறையாகும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகியவைகளில் இருந்து ஒவ்வொரு பாடல் பாடப் பெறுவதே பஞ்சபுராணம் ஓதுவதாகும். இவ்வைந்து நூல் வரிசையில் திருவிசைப்பா நூலில் சேந்தனார் சுவாமிகள் அருளிச் செய்த மூன்று திருப்பதிகங்களும் திருப்பல்லாண்டும் சேர்ந்திருப்பவை யாதலின் சேந்தனாரின் பாடல் தனித்தன்மையும் அருட்தன்மையும் வாய்ந்தவையாகக் கருதப்படுகிறது.

இவரது பாடல்கள் தமிழ் மரபின்படி அமைந்துள்ளது இலக்கியச் சுவையும், பக்திச் சுவையும் உடையனவாகத் திகழ்கின்றன. திருவிசைப்பா மூன்று பதிகங்களிலும் திருப்பல்லாண்டு பதிகத்திலும் 47-பாடல்கள் இவரால் செய்யப் பெற்றவையாக உள்ளன. இவையாவும், படிக்கவும் இசையுடன் ஓதவும் தகுந்தவளமான தமிழ்ப் பாடல்களாகும்.அவரின் திருவிசைப்பா பதிகம் மூன்றும், திருப்பல்லாண்டு பதிகம் ஒன்றும் பண்-பஞ்சமம் என்னும் பண்ணிலேயே அமைந்த சிறப்புடைத்தாகும். சேந்தனாரின் புகழ் உலகெலாம் ஓங்கிப் பரவுக.

அருளடியார் சேந்தனார் கல்லறை

திருவிடைக்கழி கோயில் ஞாமரத்தின் அடியில் வெளிப்பிரகாரத்தில் அமைந்துள்ள அருளடியார் சேந்தனாரின் கல்லறை

பகுதி - IV
(செய்யுள் பகுதி)
ஆதிதிராவிட அருளடியார் சேந்தனாரின் அருட்பாடல்கள் - கருத்துரைகள்.
1.சேந்தனார் வாழ்த்து

சீரோடு திருப்பிடவூர் தன்னில் நல்ல
செப்பறையென் குடிதோன்றிச் செஞ்சொல் என்னும்
நீரோடு தமிழ்வழங்கும் நாங்கூர் வாழ்ந்து
நிறைதுறவுப் பட்டினத்தார் கணக்க ராகி
ஏரோடு திருதில்லைப் பதிக்கு வந்து
இறைவனையே களியுண்ணச் செய்து பாவால்
தேரோடச் செய்த அருட் கவிசொல் வல்லார்
சேந்தனார் திருவடியைச் சிந்தை செய்வாம்.

- கலைமாமணி
ஆ.க.முத்துக்குமாரசாமி

2. சேந்தனார் யார்?

ஆதிதிராவிட அருள் அடியார் சேந்தனாரின் பாடல்கள் எல்லாம் பக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இலக்கிய இலக்கண அமைப்புடன் இப்பாடல்கள் அளவுக்கு அதிகமான புராண இதிகாச வரலாற்றுக் கதைகளை உள்ளடக்கியுள்ளன.

இப்பாடல்களை எல்லாம் அறிந்தும். புரிந்தும், இயற்றுவதற்கு ஏராளமான பழந்தமிழ் ஓலைச் சுவடிகளில் அமைந்துள்ள நூல்களைச் சேந்தனார் தெளிவுடன் படித்திருக்க வேண்டும்.

நாகநாதர் நாகர்குல தலைவனாகிய தில்லை நடராசப் பெருமானைப் போற்றிப்பாடிய சேந்தனாரின் பாடல்களில் வரும் புராணக்கதைகளிலும், அற்புதங்களிலும் இயற்பியல் உலகில் வாழும் எனக்குச் சிறிதும் உடன்பாடில்லை என்று சொல்லிவிடமுடியாது. சேந்தனாரின் பாடல்களுக்கு வரிக்கு வரி முழுமையான கருத்துரைகளை என்னால் தர முடியவில்லை என்றே கருதுகின்றேன். பக்தி வளர்ச்சி வேண்டி, ஏதோ கருத்துரை எழுதினோம், என்ற அளவிலேயே உள்ளன. சேந்தனாரையும் அவர்தம் பாடல்களையும் ஒரு கண்ணோட்டம் பார்ப்பது உத்தமம் என்றே படுகிறது.

இப்பாடல்களின் தெளிவுரைகள் திருப்பனந்தாள் மடம் வெளியிட்ட பன்னிரு திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு குறிப்புகள் என்ற நூலின் உதவி கொண்டும் எழுதப்பட்டுள்ளது என்பதையும் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

(நூலாசிரியர்)

3. சேந்தனார் அருளிய தில்லைத் திருப்பல்லாண்டு

சைவ சமய நெறியின்படி கோயில் என்பது சிதம்பரம் என்னும் தில்லையம்பதியைக் குறிப்பது. இத்தலம் சோழநாட்டுக் காவிரிக்கு வடகரையில் உள்ள சிவத்தலங்களுக்குள் முதன்மையானது. பஞ்சபூதத் தலங்களில் ஒன்று திருச்சிற்றம்பலம் என்னும் பெயராலும் இக்கோயில் அழைக்கப்படுகிறது. வடமொழியாளர் சிதம்பரம் என்பர், பொன்னம்பலம், தில்லைவனம், பூலோக கயிலாயம், பெரும்பற்றப் புலியூர், முதலிய திருப்பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இங்கு தில்லைக் கூத்தன் ஆனந்த நடனம் புரிகின்றார். தில்லையை ஆட்சி செய்த முதல் பெண் அரசி தில்லைக்காளி தேவியே ஆவாள். காளி தேவி களப்பிரவம்சத்தில் தோன்றிய பழங்குடி பெண் தெய்வமும் ஆவாள்.

1. மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர்போய் அகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : நம்பக்தர்கள் தில்லைப் பதியை அடைவார்களாக. நம் இனத்தவர்களாகிய பக்தர்கள் மேன்மேலும் பக்தி செய்ய விரைந்து வாருங்கள். வஞ்சக எண்ணம் உடையோர் தில்லையில் நுழைந்துவிட்டார்கள். அவர்கள் தில்லையை விட்டு நீங்கிச் செல்லட்டும். அன்ன நடை பயிலும், உமா தேவியாரின் கணவராகிய சிவபெருமான், பொன்னம்பலமாகிய பொற்சபையில் எழுந்தருளி நமக்கெல்லாம் அருள் பாலிக்கின்றார். மறு பிறவி வராமல் நம்மையெல்லாம் தடுத்துக் காப்பாற்றும் நல்ல வழியைக் காட்டும் பித்தனை நடராசப் பெருமானைப் பல்லாண்டு வாழ்த்திப் பாடுவோம்.

2. மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : ஆணவத்துடன், மாறுபடப் பேசும் குறுகிய மனம் படைத்தவர்கள் இங்கிருந்து போய்விடுங்கள். மென் மனமும் சாத்வீகமும் கொண்ட உண்மெய் அடியார்கள் விரைந்து தில்லைக்கு வாருங்கள். இறைவனிடம் அன்பு செலுத்தி, பரம்பரையான நல்ல அடியார் கூட்டத்துடன் இறைத்தொண்டு செய்யுங்கள். இரண்டறக்கலந்து பிரபஞ்சம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி மாறுதலுக்கு உட்பட்ட முக்காலத்துக்கும் இன்பம் நல்கும் தில்லைக்கூத்தனைப் புகழ்ந்து பாடுவோம். புகழ்ந்து பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோம்.

3. நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தனுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : தியானத்துக்கும், யோகத்திற்கும் என்னைத் தன் வயமாக்கிய ஒப்பற்ற மேலான தலைவன் சிவபெருமான். உண் மெய்யடியார்களை நினைத்து உருகும் பல இயல்புகளை உண்டாக்கச் செய்து, பேரானந்த உணர்ச்சியினைத் தரும் தேவாமிர்தம் போன்றவன் இறைவன். அவன் ஞானத்தைப்பெற நல்லாசிரியன் அடியவனைத் தன்வயமாக்கிக் காத்தருளும் சிவபெருமானை கூத்தனைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோம்.

4. சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்.
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : புகழ்பெற்ற வேதசிவாகமங்களின் பொருளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பரிசுத்தமான சிவத்தொண்டர்களாக இருக்கின்ற பக்தர்களே, சில ஆண்டுகளில் அழிந்து விடுகின்ற மனிதர்கூட்டங்கள் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் இவர்கள் கூறும் குறுகிய மதங்களில் ஈடுபடாமல்நிற்பீர்களாக, பொன்னிறமான மேரு மலையை வில்லாகக் கொண்ட வீரம் உடையவனும், இடபத்தை ஊர்தியாக உடையவனும், பல்லாண்டுகள் கடந்து நின்று வாழ்பவனும். அரசனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்தே பல்லண்டு வாழ்கவெனப் பாடுவோம்.

5. புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந்து அழைப்ப என் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : இந்திரன், பிரமன், திருமால் போன்ற தேவர்கள் ஆன, மனித முன்னோடிகள் உன் சன்னிதியை அடைந்து சிறு சிறு சண்டையிட்டுக் கொண்டு முறையிடுவார்கள், தஞ்சம் என்று உன்னை வேண்டி நின்று தந்திரமாகக் கெஞ்சி அழைப்பார்கள். அவர்கட்கெல்லாம் அருளாமல் என்னைத்தன் வயப்படுத்தி எனக்கருளும் சிவபெருமானுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம். வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரும், கற்பகத் தருவைப் போன்றவன், பெரும் கருணைக் கடலாக இருப்பவன். எங்கும் பரவியும், நிறைந்தும்காணப்படும் சக்தியைப்போல் எல்லையற்ற அன்புடைய சிவபெருமானைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோம்.

6. சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்கு ஆமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : பற்பல அண்டங்களிலும் உள்ள திருமால் பிரமன், இந்திரன் ஆகியோர் உன்னைத் தரிசிக்க திக்குகள் தோறும் நின்று ஓலமிட்டு வேண்டிக் கொள்கிறார்கள். பிரபஞ்சத்தை ஆக்கிரமித்து கூட்டம் கூட்டமாய் வேண்டுதல் செய்கின்றனர். உயிர்க்கு அமிர்தம் போன்ற ஆனந்த தாண்டவனை, பேரன்பாகிய செல்வத்தை உடையவனை தந்தை போன்றவனை; உவமை சொல்லமுடியாத அப்பாற்பட்டவனாகிய சிவபெருமானைப் புகழ்ந்தே பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோம்.

7. சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : சிறந்த மேன்மையும், திருவருட் செல்வமாகிய புண்ணியமும் விளங்க, சிவலோகத்தைத் தன் உலகமாக உடைய இறைவனது சிவந்த திருவடியின் கீழ் இருந்து நான் பெறற்கரிய அறிவினைப் பெற்றேன். யான் பெற்ற பேரை யார் பெற வல்லவர். ஊரில் உள்ளவர்களும், உலகத்தவர்களும் புகழ்ந்து பேசவும், உமாதேவியாரின் கணவனாகிய சிவபெருமானுக்கு ஆட்பட்ட தன்மையினை, மண்ணுலகில் உள்ளவர்களும், விண்ணுலகில் உள்ளவர்களும், பக்தி மேலீட்டால் போற்றிப் புகழ்ந்து நாக்குளறி நிற்கின்றனர். இப்பெருமைக்குறிய சிவபெருமானைப் புகழ்ந்து பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திப்பாடுவோம்.

8. சேலுங் கயலுந் திளைக்குங்
கண்ணார் இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : சேல்மீனும், கயல்மீனும் மகிழ்ந்து திரிவது போன்ற கண்களை உடைய மாதர்களின் தனங்களின் மீது பூசிய செங்குங்குமம் போல சிவபெருமானின் திருவெண்ணீறு அணிந்த திருமார்பு விளங்குகின்றது. புண்ணியச் செயலைப் புரியும் சிவனடியார்கள் அதனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டு இருக்கவும் திருமாலும், பிரமனும் அறிய முடியாத திருவருள் நெறியினை அருள்செய்து, என்மனத்தினுள்ளே வந்து நின்றானை,

பாலையும் அமுதையும் ஒத்தவனான சிவபெருமானைப் புகழ்ந்து பல்லாண்டு வாழ்கவெனப் பாடுவோம்.

9. பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : குழந்தையாகிய உபமன்யு முனிவர் பாலை விரும்பி உண்ண அழுதலும், அவர்க்குப் பாற்கடலையே அழைத்து வந்து உண்ணக் கொடுத்தருளிய பெருமானும் அக்காலத்தில் திருமாலுக்குச் சக்கரப் படையைக் கொடுத்தருளிய இறைவனும், தில்லையுட்புகுந்து நிலைபெற்றுவாழும் தில்லையம்பதியில் வேதங்களை ஓதி செய்யும் பக்தி அந்தணர்கள் வாழ்கின்ற சிற்றம்பலம் என்னும் பொற்சபையை இடமாகக் கொண்டு, அருள்புரிந்து ஆனந்தத் தாண்டவம் புரிய வல்லவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்தே பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திப்பாடுவோம்.

10. தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவு அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : தந்தையின் கால்கள் அற்று விழும்படி வெட்டிய சண்டேசுரர்க்கும், அப்பொழுதே தேவர்களோடு மண்ணுலகத்த வரும் வணங்குமாறு அழகிய கோயிலும் அமுதும் தந்தருளினார், ஒளி பொருந்திய அழகிய வில்வ மாலையும், சண்டேசுரர் என்னும் திருப்பெயரும் தந்து அருளினார் சண்டேசுரரை தொண்டர்க்கு

எல்லாம் தலைவனாகவும், பெரும்பாவச் செயலுக்கு பரிசாகக் கொடுத்தருளிய சிவபெருமானைப் புகழ்ந்து நாமும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோம்.

11. குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : புல்லாங் குழலின் ஒலியும் விணையின் ஒலியும் நடனமாடும் சலங்கையின் ஒலியும் அடியார்கள் கூட்டமாகப் பெருகி நின்று துதிக்கும் பண்ணின் ஒலியும் தேர் திருவிழாவின் ஒலியும், ஆகாயத்தின் அப்பாலும் சென்று மேன்மேலும் அதிகரிக்கின்றன. திருவாரூரில் எழுந்தருளிய இளமை வாய்ந்த காளையை வாகனமாக உடைய சிவபெருமானுக்குத் தலைமுறை தலைமுறையாக அடிமையாக வாழும் ஆடவரும், பெண்டிரும், ஆகிய நாம் நல்ல குடும்பத்தில் பிறந்த பழமையான அடியாரோடு கூடி நின்று, எம் தந்தையாகிய குலத்தின் முதல்வன் முன்னவன் சிவபெருமானைப் புகழ்ந்து பல்லாண்டு வாழ்கவெனப்பாடுவோம்.

12. ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : மார்கழியின் அழகிய திருவாதிரை நாளில் பக்திசெய்வதற்கு தேவர் கூட்டத்துள் இங்கு யார் யார் வந்தனர். திருமாலுடன் பிரமதேவனும் அக்கினி தேவனும், சூரிய தேவனும், இந்திரனும் வந்திருக்கின்றனர். நன்று. தேரோடும் திருவீதியிலும், தேவர்களின் கூட்டங்கள் எல்லா திசைகளிலும் நிறைந்து நிற்கின்றனர். உலகெல்லாம் நிறைந்த இறைவனின் பழமையான புகழைப் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் மகிழ்கின்றனர். பக்தி மான்களுடன் பழங்குடியினராகிய நாமும் சிவபெருமானைப் புகழ்ந்து பல்லாண்டு வாழ்கவெனப் பாடுவோம், ஆடுவோம்.

13. எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கமுதம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்பறை
அந்தமில் ஆனந்தச்சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

கருத்துரை : என் தந்தையும், தாயும் உறவினர் என எல்லாமும் ஆகி, அமிர்தமும் ஆகி நின்ற எம் பெருமானே! பலநேரம் பாடியும் சொல்லித்துதித்தும் சிறப்புற்ற அடியார்களுக்கு அடிமை புரியும் நன்றியுள்ள நாய் போன்றவன் அடியேன். செப்பறை என்ற ஊரினன். முடிவில்லாத பேரானந்தத்தைப் பெற்ற சேந்தனாகிய அடியேனை உன்னுடன் சேர்த்துக்கொள். எனது ஆணவம் முதலிய தீய குணங்களை ஒழியச் செய்த சிவபெருமானைப் புகழ்ந்தே பல்லாண்டு வாழ்க என பாடி வாழ்த்துவோம்.

4. சேந்தனார் அருளிய திருவீழிமிழலை திருவிசைப்பா

திருவீழிமிழலை சோழநாட்டுக்குக் காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவத்தலங்களுள் 61 வது தலம். வீழி என்னும் கொடியின் பெயரால் திருவீழிமிழலை என வழங்கப்பெறுகிறது. இத்தலம் பூந்தோட்டம் இரயில்வே நிலையத்திற்கு மேற்கில் ஒரு கல் தொலைவில் இருக்கும் திலதைப்பதிக்கு மேற்கே நான்கு கல் தூரத்தில் உள்ளது. இங்குத் திருமணக் கோலத்துடன் எப்பொழுதும் எழுந்தருளிய மணவாளப் பெருமான் திருவடியில் திருமால் சக்கரம் பெறும் பொருட்டு நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூக்களினால் வழிபடும்போது ஒரு நாள் ஒரு மலர் குறைய, அதற்குப் பதில் தமது கண்ணைக் கொடுத்து சக்கரம் பெற்றார் என்பது வரலாறு.

1. ஏகநா யகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றென்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

கருத்துரை : ஒப்பற்ற ஒரே தலைவன், தேவர்களின் அரசன் எனது உயிர்க்கு அமிர்தம் போல் இனிமையானவன். இணையில்லாத இன்பத்தை ஊட்டும் தலைவன். மேகம் போன்ற நிறத்தினன். திருமாலுக்குச் சக்கரம் அளித்தவன்.பொன்னால் ஆகிய நீண்ட சிவிகையைச் செலுத்தியவன். மேகம்போல் கைம்மாறு கருதாத தலைவனாகிய சிவபெருமான் மேன்மை மிகுந்த திருவீழிமிழலையில் தேவர் உலகத்தில் இருந்து வந்து செழுமையான கோயில் எழுந்தருளியவன். சிவயோகங்கட்குத் தலைவனாயிருப்பவனை அல்லாமல் வேறொரு பொருள் உலகியலில் உள்ளதென்று யான் அறியவில்லை.

2. கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

கருத்துரை : கற்ற அறிஞர்கள் அனுபவிக்கும் படியான கற்பக மரம்போன்று விரும்பியவற்றைத் தருபவன்.கருணையில் கரையில்லாத கடல் போன்றவன், மாணிக்க மலை போன்றவன். நினைப்பவர் மனத்தில் மாணிக்கச்சுடர் போன்று ஒளர்பவன். பகைவர்களாகிய திரிபுராதிகளின் முப்புரங்களை அழித்த எங்கள் சிவபெருமானை, திருவீழிமிழலையின் கண் அமர்ந்தருளிய இறைவனை என்மனம் இன்பம் அடைய தரிசித்து என் கண்களும் இன்பம் அடைந்தன.

3. மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
மருந்தைஎன் மாலா மணியைப்
பண்டலர் அயன்மாற்கு அரிதுமாய் அடியார்க்கு
எளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
திருவீழி மிழலையூ ராளும்
கொண்டலங் கண்டத்து எம்குரு மணியைக்
குறுகவல் வினைகுறு காவே.

கருத்துரை : இவ்வுலகப் பற்றை நீக்கி நான் அனுபவித்த தேவாமிர்தம் போன்றவன். மாறுபாடு இல்லாத மாணிக்கம் போன்றவன். தாமரை மலரின்மேல் இருக்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் அறியவன். மெய் அடியார்கட்கு எளியவன். ஒப்பற்ற பெரிய பவள மலை போன்றவன். இதழ்விரிந்து தேன் சொரியும் சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளி ஆட்சி புரியும் மேகம் போன்று அழகிய கண்டத்தை உடைய எமது குருமூர்த்தியாகிய வயிரமணியை அடையின். தொல்லைதரும் துன்பங்கள் வந்து சேராது என்பதாம்.

4. தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக்கு அடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே.

கருத்துரை : தன் திருவடி நிழலின் கீழ் என்னையும் தடுத்தாட் கொண்டவன். சந்திரன் விளங்குகின்ற திருமுடியினை உடையவன். என்னிடமுள்ள மூன்று தாமரைகளின் உள்ளும் உதித்தெழும் செழுஞ்சூரியன். ஒளிபொருந்திய அருட்பெருங் கடலின் உள்ளே நீர்ப்பெருக்காயிருப்பவன். திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளிய வெண்மையான படிகம் போன்ற இறைவனது அழகிய திருவடிகளுக்குத் தொண்டாற்றி அத்திருவடிகள் என்னை விட்டு நீங்கும்படி விடுவேனோ? விடமாட்டேன் என்றவாறு கருத்தாம்.

5. இத்தெய்வ நெறிநன் றென்று இருள்மாயப்
பிறப்பறா இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலாது அவமும்
அறிவரோ அறிவுடை யோரே.

கருத்துரை : முழுமுதற்கடவுளான சிவபெருமானை இந்த வழி நல்லவழி என்று எண்ணி, அஞ்ஞானமும் வஞ்சகமும் உள்ள பிறவியை ஒழிக்கும் தகுதி இல்லாத இந்திரசாலம் போன்று அழியும் பொய்யாகிய சிறுதெய்வ வழிபாட்டு நெறியில் செல்லாதபடி அருள் செய்த சிந்தாமணி என்ற தேவமணி போன்றவன் சிவபெருமான். உண்மையான சிவமார்க்கத்தில் செல்லும் வழியில் நின்ற நான்கு வேதங்களில் வல்ல அந்தணர் வாழும் திருவீழிமிழலை என்னும் தலத்தில் விண்ணினின்றும் இறங்கி வந்த செழுமையான கோயிலின் கண் எழுந்தருளிய சிவபெருமானை அல்லாது, அறிவுடையோர் பயனற்ற பொருளை அறிந்து கொள்ள முயல்வரோ?

6. அக்கனா அனைய செல்வமே சந்தித்து
ஐவரோடு அழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனை எண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்து அடிமைபூண் டேனே.

கருத்துரை : கனவு போன்று மறையும் செல்வத்தையே ஆராய்ந்து அவைபோன்று ஐம்புலன்களின் நுகர்ச்சியில் தோய்ந்து பயனற்றுப் போகாதபடி தடுத்தாட் கொண்ட பரிசுத்தமாகிய சிவபெருமான். உமாதேவியாரை இடப்பாகத்தில் பெற்றவன். எட்டுத்திக்குகளிலும் விளங்குகின்ற புகழை உடையவன். திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளிய சிவபெருமானின் திருவடி நிழலின் கீழே புகுந்து நிற்பவர்களாகிய சிவனடியார்களின் அழகிய திருவடித் தாமரையில் பொருந்திய துகளை அணிந்து நான் அடிமைத் தொழிலை மேற்கொண்டேன் என்றவாறாம்.

7. கங்கைநீர் அரிசிற் கரையிரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்டநீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத்து என்னரு மருந்தை
வருந்திநான் மறப்பேனோ ? இனியே.

கருத்துரை : கங்கா நதியின் தீர்த்தம் போலும், புனிதமான நீரினை உடைய அரிசிலாற்றங்கரையின் இரண்டு பக்கங்களிலும் மணம் வீசும் சோலைகளை அடுத்துள்ள வயல்கள் பொருந்தியது திருவீழிமிழலை, இத்தலத்தில் எழுந்தருளிய சிறந்த செல்வத்தை அருளும் இறைவனாகிய சிவபெருமான், தானாகவே தோன்றி நின்று சிறந்தவன், உமாதேவியாரை பேரொளியாகப் பெற்ற தேவாமிர்தம் போன்றவனை இனிமேல் நான் மறந்து வருந்த மாட்டேன்.

8. ஆயிரங் கமலம் ஞாயிறுஆ யிரம்முக்
கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி உமைமண வாளன்
விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தரா திகளே.

கருத்துரை : முக்கண்கள் ஆயிரம் சூரியர்கள் ஒன்று சேர்ந்தாற்போல் ஒளி உள்ளவன். திருமுகம், திருவடி, திருக்கை ஆகியவை ஆயிரம் தாமரை மலர் போன்று அழகாய் உள்ளவன். பாய்ந்து ஓடுகின்ற பெரிய கங்கா நதியையும் குளர்ச்சி பொருந்திய சந்திரனையும் மறைத்து வைத்துள்ளவன். ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற அழகிய திருமுடியினை உடையவன். மூங்கிலைப்போல திரண்ட தோள்களை உடையவன். உமாதேவியின் மணவாளன் ஆகிய சிவபெருமான் விரும்பிய திருவீழிமிழலை என்ற தலத்தைச் சூழ்ந்த சோலையின்கண் சென்று தங்கியிருந்தேனும். இறைவன் திருவடிகளை புகழ்ந்து

துதிக்கின்ற அடியவர்களின் பாதங்களை இந்திரன் முதலிய தேவர்கள் போற்றிப் புகழ்வார்களாக.

9. எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடி திண் டோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி எல்லைக்கு அப்பாலாய்
நின்று ஐஞ்நூற்று அந்தணர் ஏத்தும்
எண்ணில்பல கோடி குணத்தர் ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே.

கருத்துரை : எண்ணிறந்த பல கோடிக்கணக்கான, செம்மையாகிய பாதங்களை உடையவன். பல கோடிக் கணக்கான திருமுடிகளையும் உடையவன். பல கோடிக் கணக்கான வலிய தோள்களையும், எல்லைக்கப்பால் உள்ளபலகோடிக்க கணக்கான பிரபஞ்சத் திரு உருவங்களையும் திருநாமங்களையும் அழகிய முக்கண்கள் பொருந்திய திருமுகங்களையும், தன்மைகளையும் கொண்டு விளங்குபவன் சிவபெருமான். ஐந்நூறு அந்தணர்கள் துதித்து வழிபடுகின்ற எண்ணற்ற பல கோடிக் கணக்கான குணங்களை உடையவனுமாகிய திருவீழிமிழலையில் எழுந்தருளிய சிவபெருமானே நம்மை ஆட்கொள்ளும் கடவுளாகும் என்றவாறு.

10. தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்கநெஞ்சு அரக்கன் புரம்கரி கருடன்
மறலிவேள் இவர் மிகை செகுத்தோன்
திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்து அடிமைபூண் டேனே.

கருத்துரை : தட்சன், வெம்மையான கதிர்களை உடைய சூரியன், சலந்தராசுரன், பிரமன், சந்திரன், இந்திரன், யாகத்தலைவன் எச்சன், வலிமை மிகுந்த மனமுடைய இராவணன், திரிபுரம், யானை, கருடன், யமன், மன்மதன் ஆகிய இவர்களுடைய

வரம்பு கடந்த அகந்தையை அழித்தவன். திசைகள் முழுவதும் நிரம்பிய புகழை உடையவன். திருவீழிமிழலையில் எழுந்தருளியவனுமான சிவபெருமானின் திருவடிநிழலின் கீழ்ப்புகுந்து இருக்கின்ற மெய்யடியார்களுடைய அழகிய பாத தாமரையில் பொருந்தியதுகளை நான் அணிந்து தொண்டு புரியும் பணியை மேற்கொண்டேன் என்றவாறாம்.

11. உளங்கெள மதுரக் கதிர்விரித்து உயிர்மேல்
அருள்சொரி தரும்உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமும் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்று
ஆந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே.

கருத்துரை : இன்பமயமான ஒளியை மனத்தில் பொருந்துமாறு பரப்பி உயிர்கள் மேல் அருள் மழையைப் பொழிகின்ற உமாதேவியாரது கணவனை, வளம் மிக்க கங்கா நதியினையும், சந்திரனையும் சிரசில் தரித்தவன்.இளமையான இடப வாகனத்தில் மேல் எழுந்தருளி வருகின்ற சிவபெருமானை, முருகக் கடவுளின் தந்தையாய், விளங்குகின்ற புகழினை உடைய திருவீழிமிழலைக்கு அரசே, என்று என்னால் முடிந்தவரையில் கூடிய மட்டும் கூவி அழைத்தால், பொன்னிறம் பொருந்திய கற்பகத்தருவைப் போன்ற அவ்வீசன் என்னிடம் வரத்தவறுவானோ நிச்சயம் வருவான் என்றவறாம்.

12. பாடலங் காரப் பரிசில்காசு அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்து எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்கு எவ்விடத் தேனே.

கருத்துரை : பாடுகின்ற அலங்காரத்திற்கு வெகுமதியாக பொற்காசுகளை நாடோறும் அருளிச்செய்து, கனிந்த செந்தமிழ்ப் பாடல்களை கேட்டு மகிழ்பவன். அலங்காரமாய் இருக்கும்படி பாமாலைகளைச் சூட்டிக் கொண்டவன். பெருமை மிக்க அடியார்களின் மனத்தில் நிறைந்து நின்ற சிவபெருமான், அழகிய வேடுவக்கோலம் பூண்ட அமுதம் போன்றவன். திருவீழிமிழலை என்னும் ஊரை ஆளுகின்ற குற்றமற்ற நல்லபுகழை உடைய பொன்மயமான கற்பகத்தருவைப் போன்றவனை நான் அடைவதற்கு எவ்விதத் தகுதி உடையேன் என்றவறாம்.

5. சேந்தனார் அருளிய திருவாவடுதுறை திருவிசைப்பா

திருவாவடுதுறை சோழநாட்டின் காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவத்தலங்களுள் 36-வது தலமாகும் சாத்தனூர், சாந்தை, சாந்தையூர் என வேறுபெயர்களாலும் அழைக்கப்பெறும் கயிலாயத்தில் உமாதேவியார் சிவபெருமானோடு சொக்கட்டான் ஆடி மகிழ்ந்தமையால் பசுவடிவமாக ஆனார். பசுவடிவத்துடன் இத்தலத்தில் வந்து இறைவனை வழிபட்டு பசுவடிவம் நீங்கப் பெற்றதால் திருவாவடுதுறை என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இத்தலம் நரசிங்கன்பேட்டை இரயில்வே நிலையத்திற்குத் தென்கிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. போதியம்பலம் எனப் பெயருக்கு ஏற்பபலவிதமான புராணக் கதைகள் உண்டு.

1. பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
அமுதே என்றுன்னை அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்குஒன்று
அருளாது ஒழிவது மாதிமையே.

கருத்துரை : உண்மைப்பொருளை உணர்ந்தும், நான்கு வேதங்களிலும் திறமைபெற்ற அந்தணர்கள் வசிக்கும் அழியாப் புகழ்பெற்றது, திருவாவடுதுறை. ஆயிரம் அந்தணர், மனஉணர்ச்சியோடு கோயில் காரியங்களைச் செய்வர். சிறப்பு வாய்ந்த காவிரியின் தென்கரையில் வீற்றிருந்தருளும் தலைவனே திருவாவடுதுறையில் எழுந்தருளிய தேவாமிர்தமே என்று அழைத்தால். மைதீட்டப்பெற்ற பெரிய கண்களைஉடைய என் பெண்ணுக்கு ஒரு வார்த்தையும் பேசாமல் இருப்பது உமக்கு அழகாமோ, என செவிலித்தாய் வருந்திக் கூறுவாளாக.

2. மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தை மெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனாம்
அணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி அறிகிலள் பொன்நெடும்
திண்டோள் புணர நினைக்குமே.

கருத்துரை : மாஞ்சோலைகள் மணம் வீச, இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற உப்பரிகைகளைக் கொண்ட மாளிகைகளாலும் வீதிகளாலும் சூழப்பெற்ற ஒளிவீசும் மதில்களை உடைய திருவாவடுதுறையில் உண்மை பேசி, வேதங்களின் கட்டளைப்படி வாழும் அந்தணர்கள் வணங்குகின்ற முதல்வனே தேவர்களுக்கு முன்னோனும், திருவாவடுதுறையில் எழுந்தருளிய நம்பியுமான சிவபெருமானே உனது ஆற்றலை அறியாத என் மகள் ஆற்றல் இல்லாளாகி, அழகான உயர்ந்த உனது வலிய தோளை தழுவ நினையாது வெறுமனே நின்றாள்.

3. நினைக்கும் நிரந்தரனே என்னும்
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நங்கைமீர்
மனக்கின்ப வெள்ளம் மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன்ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே.

கருத்துரை : என் மகள் பலவாறு நினைப்பாள். எக்காலத்தும் நிலைத்து நிற்பவனே நிலவின் அழகினைக் கொண்ட சிவந்த சடை முடி உடையவனே கங்கை நீரால் நனைக்கப் பெற்ற அழகு மிக்க கொன்றை மாலையின் மீது இன்பம் படப்பேசுவாள். நல்ல நெற்றியினை உடைய பெண்களே மனதிற்கு இன்பப் பெருக்கை தருகின்றவனும் உமாதேவிக்கு கணவனான சிறந்தோனும் வளமை நிறைந்த சாத்தனூருக்கு இனியவனுமான சிவபெருமானைத் திருவாவடுதுறையில் உள்ள இளஞ்சந்திரனைத் தரிசித்த திருமுடி உடையவன் என்று என் மகள் சொல்லுவாள்.

4. தருணேந்து சேகரனே எனும்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருள்நேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வம் மல்குபொற் கோயிலுள்
அருள்நேர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே
தெருள்நேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி நிறத்திலே.

கருத்துரை : விசாலமான காவிரி ஆற்றின் தென்கரையில் உள்ள சாத்தனூரில் உண்மைப் பொருளையே பேசும் மனம் உடைய அடியார்கள் வணங்கப் புகழும் செல்வமும் மிக நிரம்பிய கோயிலிலே அருளை வழங்கிக் கொண்டிருக்கும் திருவாவடுதுறையை ஆண்டருளிய சிறந்தோனாகிய இறைவனே. இளஞ்சந்திரனைத் தரித்த திருமுடியுடையவனே பொட்டு இட்ட நெற்றியினை உடைய என் மகள் விஷயத்தில் மட்டும், தெளிந்த அறிவுடன் கூடிய உன்மனம் இரக்கம் காட்டாமல் வலிதாய் இருக்கின்றதே, இதற்கு என்ன காரணமோ?

5. திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க்கு என்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன்று அறிகின்றி லேம்எனும்
அணியும்வெண் ணீறு அஞ் செழுத்தலால்
வலதொன் றிலள் இதற்கு என்செய்கேன்?
வயலந்தண் சாந்தையர் வேந்தனே.

கருத்துரை : அழகிய தன்மை பொருந்திய வயல்களால் சூழப்பெற்ற சாத்தனூரில் உள்ளவர்களுக்கு அரசேஸ பொட்டு அணிந்த நெற்றியை உடைய உமாதேவியர்க்கும் திருவாவடுதுறை ஈசனுக்கும், கூட்டமாகிய அடியார்களுக்கு, என்னை அடிமையாகக்கொண்டு, ஆண்டு கொண்டருளிய குணக்கடலாகிய சிவபெருமானை அல்லாமல் வேறு ஒன்றையும் அறிந்தோம் இல்லை, என்று என் மகள் சொல்லுவாள், வெள்ளிய திருநூற்றை அணிவதும் பஞ்சாட்சரத்தை ஜெபிப்பதும் அல்லாமல் செய்யவல்ல காரியம் வேறொன்றும் இல்லாதவளாக என் மகள் இருக்கிறாள். இதற்கு நான் என்ன செய்ய முடியும்?.

6. வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதல் அயன்சாரதி
சதியருள் என்னும் இத் தையலை
ஆந்தண் திருவா வடுதுறையான்
செய்கை யாரறி கிற்பாரே?

கருத்துரை : சிவபெருமான் ஆகாயத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் மதிலோடு கூடிய அழகிய முப்புரங்கள் நீராகி எரிந்தது. மேருமலையை வில்லாக வளைத்துக் கொண்டு, வேதங்கள் என்னும் குதிரைகள் பூட்டிய தேரையும், பிரமனாகிய சாரதியையும், வாசுகியாகிய வில்லின் கயிற்றையும், சிவந்த கண்களைஉடைய திருமால் ஆகிய கொடிய அம்பையும் உடன் பெற்றார்.

நீர்வளம் பொருந்திய குளிர்ந்த திருவாவடுதுறையில் எழுந்தருளிய இறைவன் செய்கையை யாரே அறிவர். சாத்தனூர் முதல்வனே இந்தப் பெண்ணாகிய மகளுக்கு ஆதரவு அளிப்பாயாக.

7. கிற்போம் எனத்தக்கன் கேள்விபுக்கு
எழுந்தோ டிக்கெட்ட அத்தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள் என்
சொல்லிச் சொல்லும்இத் தூமொழி
கற்போல் மனம்கனி வித்தளங்
கருணால யாவந்திடாய் என்றால்
பெற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசாது ஒழிவதே

கருத்துரை : பரிசுத்தமான மொழியைப் பேசும் இப்பெண்ணாகிய என் மகள், பாவிகளே, செய்து முடிப்போம் என்று எண்ணித்தக்கன் வேள்விக்குச் சென்று அழிந்த அத்தேவர்களுடைய வீரமொழிகளைப் போன்றுள்ளது.

உடலின் பயன் என்ன கண்டீர், எனச் சொல்லுவாள் கல்லைப் போன்ற எமது மனத்தைக் கனியச் செய்த கருணைக்கு இருப்பிடமானவனே பெரிய திருவாவடுதுறையை ஆட்சி புரிபவனே வந்து அருள்வாயாக என்றால் வாய்பேசாமல் சும்மா இருப்பது அழகாமோ, என நற்றாய் மனம் கசிகிறாள்.

8. ஒழிவொன்றி லாவுண்மை வண்ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
ஒழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
ஆணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை எய்தி நின்று
இறுமாக்கும் என்னிள மானனே.

கருத்துரை : சிறிதேனும் அழிதல் இல்லாத, செல்வத் தினைப் பெற்ற சாத்தனூரில் உள்ள அழகிய ஆவடுதுறையில் இன்பத்தில் மூழ்கினவளும், கெடுதல் இல்லாத இளமானை ஒத்த என் மகள்

நீங்குதல் சிறிதும் இல்லாத உண்மைத் தன்மையும், எப்போதும் ஊறிக்கொண்டிருக்கும் பேரின்ப வெள்ளத்தையும், வற்றுதல் இல்லாத காவிரி தண்ணீரையும், எண்ணில்லாத முனிவர்களையும், இறைவன் திருவுருவங்களையும் சிறிதும் குற்றமில்லாமல் தொழுது நின்று அதனால் செருக்குடன் இருக்கின்றாள். ஆகையால் எம் இறைவனே, இவளுக்கு அருள் புரிதல் உமது கடமையே ஆகும்.

9. மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
கொள்ளை கொள்ளவழக்கு உண்டே
தேனே ! அமுதே ! என் சித்தமே !
சிவலோக நாயகச் செல்வமே
ஆனேஅ லம்புனற் பொன்னி
அணியா வடுதுறை அன்பர்தம்
கோனேநின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே !

கருத்துரை : தேனினும் இனியவரேஸ அமுதம்போன்று உயிர்க்கு உறுதியானவரேஸ என் மனமாக இருப்பவரே, தலைமை ஏற்கும் சிவலோக ஞானச் செல்வமேஸ பசுக்கள் குளித்து மகிழும் காவிரி ஆற்றின் கரையில் உள்ள திருவாவடுதுறை உறையும் மெய்யன்பர்களுடைய அரசேஸ உனது மெய்யடியார்களின் மனத்திலுள்ள எண்ணங்களை முடித்து வைக்க வல்ல குன்று போன்றவரேஸ மான்போன்ற என்மகளின் அழகிய ஆடைகளையும், கைவளையல்களையும் கவர்ந்து கொண்டு, மனத்தையும் கொள்ளை கொள்வதில் நியாயம் உண்டோ?

10. குன்றேந்தி கோகன தத்துஅயன்
அறியா நெறிஎன்னைக் கூட்டினாய்
என்றேங்கி ஏங்கி அழைக்கின்றாள்
இளவல்லி எல்லை கடந்தனள்
அன்றே அலம்புபு னற்பொன்னி
அணியா வடுதுறை ஆடினாள்
நன்றே இவள்நம் பரமல்லள்
நவலோக நாயகன் பாலளே.

கருத்துரை : கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்த திருமாலும் தாமரைமலர் மேல் இருக்கும் பிரமனும் தேடிக்காண முடியாத திருவருள் நெற்றியிலே என்னையும் சேர்த்துவிட்டாய் அல்லவா, என்று வருந்துகிறாள். இளங்கொடிபோன்ற என்மகள் உன்னை வருந்தி அழைக்கிறாள். துன்பத்தின் எல்லையில் நின்று புலம்புகிறாள். சலசலத்து ஓடும் காவிரி நதியின் அருகே விளங்கும் ஆவடுதுறையை அடைந்தாள். இவள் எமது செயலுக்கு ஒத்தவள் அல்லாதவள் ஆயினாள். புதிய உலகத்துத் தலைவனாகிய இறைவனைச் சார்ந்தவர் ஆயினாள் இச்செய்கை நமக்கு ஏற்றதா, நன்றாள் உளதா என நற்றாய் புலம்பல்.

11) பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காம்பு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோடு
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே.

கருத்துரை : பாலும், அமுதும், தேனுமாக என் மனத்தினுள் நின்று இன்பத்தைக் கொடுத்து அருள் செய்வபன். என் அருமையான உயிர்க்கு இன்பத்தை விளைவிப்பவன்.யமன் உடலையும், மன்மதன் உடலையும் திரிபுரத்தையும் அழித்தவன். சேல்மீனும், கயல்மீனும் மகிழ்ந்து விளையாடுகின்ற காவிரி நீரை உடைய திருவாவடுதுறை இறைவனோடு விளையாடுவதற்கே என் மகள் முந்துவாள்.இதுவே உண்மை. இந்தப்பெண் அவள் வழியில் உறுதியுடன் இருப்பதை அறிந்தோம்.

6. சேந்தனார் அருளிய திருவிடைக்கழி திருவிசைப்பா

திருவிடைக்கழி சோழநாட்டுக் காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவத்தலங்களுள் 47ஆவது தலமாகவுள்ளதும் திருக்கடவூருக்குத் தென்மேற்கில் 4கல் தொலைவிலும் தில்லையாடிக்கு நேர் மேற்கில் 2 கல் தொலைவிலும் திருவிடைக்கழி என்ற தலம் உள்ளது. இத்தலம் முருகப்பெருமான் முதன்மையாக எழுந்தருளிய தலம். இங்குத் தேவானையம்மையார் இறைவனிடம் திருப்பரங்குன்றம் செல்ல விடை கேட்டதாலும், முருகப் பெருமானுக்கு இரணியாசுரனைக் கொன்ற பழி கழிந்ததாலும் திருவிடைக்கழி என்றாயிற்று முசுகுந்தன், வசிட்டன் முதலியோரும் அருணகிரிநாதர், சேந்தனார் முதலியோரும் இத்தலத்தில் பூசித்து வழிபட்டு நற்பேறு பெற்றனர்.

(முசுகுந்தன் என்னும் சங்ககால சோழமன்னன் குரங்கு முகம் கொண்டவன் என ஏளனப் படுத்தப்படுவதாலும், திட்டக்குடியில் வசிஸ்ட முனிவர் அருந்ததியர் குலத்தில் பெண் எடுத்ததாலும் இவ்விருவரும் பறையர் குலத்தவர் என எண்ணத் தோன்றுகிறது. இக்காரணம் பற்றியே திருவிடைக்கழி சேந்தனாரும் இக்கோயிலில் இறுதிக்காலத்தை கழித்துள்ளார். இக்கோயில் இரண்டாயிரம் வருட வாக்கில் முசுகுந்த சக்கரவர்த்தியால் கட்டப்பட்டவை என கோயில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது).

-நூல் ஆசிரியர்

1. மாலுலா மனம் தந்து என்கையிற் சங்கம்
வவ்வினான், மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே.

கருத்துரை : பார்வதியின் இளைய மகனான முருகப் பெருமான், எனக்குக் காதலால் உண்டான மயக்கம் கொண்ட மனத்தைக் கொடுத்து, என் கையில் உள்ள சங்கு வளையல்களைக் கவர்ந்துக் கொண்டான். விண்ணுலகுவாழ் தேவர்களது குலம் முழுவதையும் ஆளுகின்ற குமரக்கடவுளும், வள்ளியின் கணவனும். சேல்மீன்கள் வாழுகின்ற வயல்களை உடைய திருவிடைக்கழி என்னும் கோயிலில் உள்ள அழகிய குராமரத்தின் நிழல்கள் சூழ. நின்ற கோலத்தில் வேல் ஏந்திய பெரிய கைகளை உடைய முருகப்பெருமான் ஆகிய என் தலைவன் என்று, தனது மெல்லிய தன்மை உடைய தலைவியாகிய இவள் சொல்கின்றாள் எனக் கூறுவோம்.

2. இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான்இளங் காளை
கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
குவளைமா மலர்கண் நங்கையானைக்கும்
குழகன்நல் அழகன்நங் கோவே.

கருத்துரை : இளங்காளை போன்றவனும் சோற்று உருண்டைகளை உண்ணும் பெரிய யானையின் மீது சுற்றிலும் வெண்சாமரை வீசவும், குடையின்கீழே பொன்மலை போல வருகின்ற கள்வனும், வெளிச்சம் பொருந்திய மாளிகைகளால் சூழப்பெற்ற திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய

குராமரத்தின் நிழல்கள் சூழ நின்ற கோலத்தில் எழுந்தருளிய மலர்போன்ற கண்களை உடைய வள்ளியம்மையாருக்கும் தெய்வானை அம்மையாருக்கும் மணவாளனும், அழகை உடையவனும் ஆகிய எமது தலைவன், இந்த என் கச்சு அணிந்த தலைவியின் இளமையையும், மென்மை பொருந்திய இயற்கை அழகினைக் கவர்ந்துக் கொண்டான் எனக் கூறலாம்.

3. கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழிவெல் கொடியோன்
காவல்நற் சேனையென் னக்காப் பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே?
தேவின்நற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூரும்
சுப்பிர மண்ணியன் தானே.

கருத்துரை : இறைத்தன்மை உடைய பவள நிறம் கொண்ட இளமை வாய்ந்த மணக்கோலம் கொண்ட கூட்டங்கள் சூழப்பெற்ற வெற்றி தரும் சேவல் கொடியை உடையவனும், நல்ல சேனையைப் போல் எல்லோரையும் பாதுகாப்பவனும், தேவர்கட்கு நல்ல தலைவனும் ஆகியவன் முருகப்பெருமான். திருவிடைக்கழி என்னும் தலத்தின் அழகிய குராமரநிழல்கள் சூழும் இடத்தில் நின்ற கோலத்தில் எழுந்தருளி சிறிய சிறகுகளையும், அழகிய தோகையினையும் உடைய மயிலின் மீது ஏறிச் செல்லுகின்ற சுப்பிரமணியக் கடவுள் எனது அழகிய பெண்ணின் மேகலை என்னும் நகையைக் கவர்ந்துக் கொள்வானோ, எனக் கூறலாம்.

4. தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்.
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே.

கருத்துரை : தேவர்களின் சேனை அனைத்தும் மடிய சூரபன்மன் மார்பினைப் பிளந்தவனும், மானை ஏந்திய கைகளை உடையவனும் வள்ளலாகிய சிவபெருமானின் புதல்வனும், வேதங்களில் அதிகமாகச் சொல்லப்பெற்ற அறுவகைப் புண்ணியச் செயல்கள் வளரும்படியான தேன் கசியும் பூஞ்சோலைகள் சூழ்ந்த திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமர நிழலின் கீழ் கையில் வேலுடன் நின்ற கோலத்தில் எழுந்தருளிய, சிவபெருமான் விரும்பிய இளைய யானை போன்ற முருகப்பெருமான் என் கொடி போன்ற பெண்ணுக்குத் துன்பத்தை உண்டு பண்ணுவது நல்ல தன்மை ஆகுமோ? என நற்றாய் கூறுகிறாள்.

5. குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளாது அழகோ?
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்று அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக்கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே.

கருத்துரை : பெருமைக்குரிய கூட்டத்தாரான அந்தணர்களும் தேவர்களும் மற்றுமள்ள உலகத்தவர்களும் ஈடேறவும், அடியேன் வாழவும் உறுதியான அழகிய அலங்காரம் உள்ள மாடங்கள் நிறைந்த திருவிடைக்கழி என்னும் தலமாகும். இத்தலத்தில் அழகிய, குராமர நிழல்கள் சூழ நின்றகோலத்துடன் எழுந்தருளியவன் முருகப்பெருமான். மணித்திரள்களைத் தள்ளிக்கொண்டு ஓடும் நீரை உடைய, கங்கா தேவியின் புதல்வனும், கணபதியின் தம்பியாகிய சிறுவனும் ஆகிய முருகப்பெருமான், நற்குணம் வாய்ந்த அழகிய சிறுபெண்ணும், கொவ்வைக்கனிபோலும் இதழ்களை உடையவளுமான என் மகள் படும் துன்பத்தைப் போக்க கவனியாமல் இருப்பது அழகாமோ, என நற்றாயின் கூற்றாகும்.

6. கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடை அரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில் சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
முளையிளங் களிறுஎன் மொய்குழற் சிறுமிக்கு
அருளுங்கொல் முருகவேள் பரிந்தே.

கருத்துரை : அடியார்க்கு உறவினன் ஆன இளங்கு மரனும், கிரவுஞ்ச மலையைப் பிளந்த ஆண்மையிற் சிறந்தவனும், வேற்படையேந்திய ஞானச்செல்வம் உடையவனும், வளைந்த பிறைச் சந்திரனை செஞ்சடையில் தரித்த சிவபெருமானது புதல்வனும், மேகம் போன்ற நிறத்தையுடைய திருமாலின் மருமகனும் ஆவான் முருகப்பெருமான். அழகிய நெருங்கிய இளஞ்சோலைகள் சூழ்ந்த திருவிடைக்கழிதலத்தின் குராமரத்தின் நிழல்கள் சூழ, வெற்றிவேல் கையுடன் நின்ற கோலத்தில் எழுந்தருளிய இளைய யானை போன்றவனும் ஆகிய முருகக் கடவுள் அடர்ந்த கூந்தலை உடைய என் பெண்ணுக்கு மனம் இறங்கி அருள்வானோ, என நற்றாய் கூறுகிறாள்.

7. பரிந்தசெஞ் சுடரோ? பரிதியோ? மின்னோ?
பவளத்தின் குழவியோ? பசும்பொன்
சொரிந்தசிந் தூரமோ? தூமணித் திரளோ?
சுந்தரத்து அரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண்டு ஐயுறும் வகையே.

கருத்துரை : எல்லாம் அறிந்த வேத நெறி சார்ந்த அந்தணர்கள் வாழ்கின்ற திருவிடைக்கழி எனவும் தலத்தில் அழகிய குராமரத்தின் நிழலின் கீழ் நின்ற கோலத்துடன் எழுந்தருளியவன் முருகப்பெருமான். கொடிய வில்லைக் கையில் ஏந்திய வலிமையுடையவனான முருகப்பெருமான் மீது அழகிய சொல்லை உடையவளாகிய என் மகள் மயங்கிக்கிடந்து,

அன்புடன் கூடிய சிவந்த சோதி வடிவமோ, சூரியனோ, மின்னலோ பவளக்கொடியின் கொழுந்தோ, பொன்னை உருக்கி ஊற்றிய செவ்வொளியோ? பரிசுத்தமான மாணிக்கத்தின் தொகுதியோ என சந்தேகம் கொள்ளும் விதமாக அமைந்தவை எனக் கூறலாம்.

8. வகைமிகும் அசுரர் மாளவந்து உழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்.
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்.
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்குஎன்
துடியிடை மடல்தொடங் கினளே.

கருத்துரை : பல்வகைப்பட்ட அசுரர்கள் மடியும்படி, மதிலை வளைத்துக்கொண்டு பெரிய போரினைச் செய்தவனும், புகைமிகுந்த தீயினால் முப்புரத்தைச் சாம்பலாக்கிய மேரு மலையை வில்லாகக் கொண்டசிவபெருமானது புதல்வன் முருகன் எல்லா திசைகளிலும் பரவிய நற்புகழ் மிகுந்த திருவிடைக்கழி என்னும் தலத்தில் அழகிய குராமர நிழல்கள் சூழும் இடத்தில் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளிய எண்ணிக்கை மிகுந்த திருநாமங்களைப் பெற்ற முருக்கடவுளது திருவடிகளைப் பெறுவதற்காக உடுக்கை போன்ற இடையை உடைய என் பெண்ணானவள் பனைமடலால் செய்த குதிரையில் ஏறத் தொடங்கினாள் எனக் கொள்ளலாம்.

9. தொடங்கினள் மடலென்று அணிமுடித் தொங்கல்
புறவிதழ் ஆகிலும் அருளான்.
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்.
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக்கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்து
அறுமுகத்து அமுதினை மருண்டே.

கருத்துரை : வேத நெறிசார்ந்த மன உறுதியைக் கொண்ட வேதியர்கள் வாழ்கின்ற திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமர நிழல் சூழ்கின்ற இடத்தில் நின்ற கோலத்தில் எழுந்தருளிய சிங்கம் போன்றவனும், பன்னிரண்டு கண்களையும், ஆறுமுகங்களையும் கொண்ட தேவார்மிதமான முருகப்பெருமானைக் காதலித்து மயங்கி மடல் ஏறுதலை முற்பட்டாள், என்று அறிந்தும், அழகிய திருமுடியில் அணிந்த மாலையில் உள்ள புற இதழைக் கூட வழங்காதவன் ஆனான். தன் பக்கத்தில் இடங்கொண்டுள்ள அந்தக் குறத்தியாகிய வள்ளியம்மையார் இடத்திலும் முருகக் கடவுள் கோபத்தைத் தெரிவிக்கும்படியான செய்கையையும் சொல்லையும் உடையவனாக இருக்கிறான் என்றவாறு நற்றாய் புலம்புகிறாள்.

10. மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க்கு அருள்செயா விடுமே
விடலையே எவர்க்கும்மெய் யன்பர்
தெருண்டவை திகர்வாழ் திருவிடைக்கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே.

கருத்துரை : இறைவனிடம் பேரன்பு பூண்ட அடியார்களும் வேதத்தில் வல்ல பிராமணர்களும் வாழ்கின்ற திருவிடைக்கழி என்னும் தலத்தில் அழகிய குரா மர நிழல்கள் சூழ் இடத்தின் கீழே வேலுடன் நின்ற நிலையில் எழுந்தருளியவன் முருகப்பெருமான். முன் கொண்டையும், அழகிய மயிரினையும், பிறைச் சந்திரனையும் தரிசித்த சடை முடியினையும், மூன்று கண்களையும், அழகிய வடிவும் கொண்ட சிவபெருமானின் குலக்கொழுந்தான முருகப் பெருமான் விரும்பி உறைகின்ற திருக்கோயிலையும், வளம் நிறைந்த குன்றுகளையும் வளர்த்துள்ள சோலைகளையும் கொண்ட மகிழ்தற்குறிய திருப்பிடவூரில் உள்ள மருண்ட மான் போன்ற விழிகளை உடைய என் மகளுக்கு அருள் செய்யாமல் போவானோ? எல்லோர்க்கும் மேம்பட்ட குரிசில் ஆவான் முருகன் என செவிலி தன்னைத் தேற்றிக் கொள்கிறாள்.

11. கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூய்மொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்பறைச் சேந்தன்
வாய்ந்தசொல் இவைசுவா மியையே
செழுந்திடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும் மாலுலா மனமே.

கருத்துரை : மயங்கவைக்கும் மனமே, தூய்மையான திருச் சொற்களை பேசும் தேவர்களின் தலைவனும் செழுமையான திரண்ட சோதி வடிவினனுமான முருகப்பெருமானைப் பற்றி செப்பறை என்ற ஊரைச் சேர்ந்தவனான சேந்தன் ஆகிய யான், வளம் திரண்ட வாயினை உடைய தலைவியின் நற்றாய் சொன்ன மொழிகளைப் போன்று இயற்றிய இப்பாடல்கள் வளமானவை, செழுமையான பெரும் பொழில்கள் சூழ்ந்த திருவிடைக்கழி என்னும் தலத்தில் அழகிய குராமரநிழல் சூழ நின்ற கோலத்துடன் வேல் ஏந்தி நின்ற, சூரியனைப் போன்ற ஒளி வடிவுடைய முருகப் பெருமானைத் துதிப்போர், துதிப்பதைக் கேட்போர் அனைவருடைய துன்பங்கள் நீங்கி இன்பம் பெருகும்.

சேந்தன் மடம்

மடத்துக்குளம் என்னும் குளத்தின் கரையில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சிதிலமடைந்துள்ள சேந்தனார் மடம்.

தமிழ்த்தினமணி நாளேடு
தமிழ்ச் சமுதாயக் கையேடு

பகுதி - V

தினமணியில் நூலாசிரியர் எழுதிய ஆசிரிய கடிதங்களின் சமூகக் கண்ணோட்டம்

சேந்தனார்

5-ம் நூற்றாண்டின் நந்தனாரை நாயன்மார்களில் சேர்த்துப்பாடிய சேக்கிழார் பெருமானும், நாடகமாகப் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியாரும் 10ம் நூற்றாண்டில் தில்லைத் திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் ஒரு தலித் பக்தரே என்று எழுதி வைத்த நம்பியாண்டார் நம்பிகளும், அதை உறுதிப்படுத்திய தமிழறிஞர் வெள்ளை வாரணம் பிள்ளையும் 13ம் நூற்றாண்டின் கொற்றவன்குடி பெத்தான்சாம்பானை அடையாளம் காட்டிய உமாபதிசிவமும், நாடகமாகப் பாடிய மாயூரம் தியாகராசதேசிகரும் தலித் அல்லாத உயர்குடிச் செம்மல்களே என்பதைத் தலித் சகோதரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தலித்துக்களின் பெருமைக்காக அந்தக்கால கட்டங்களிலும் பெரியோர்கள். ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போதும் பாடுபடுகிறார்கள். சாத்வீகமான நியாயமான முறையில் தலித்துகள் தங்களின் மனக்குறைகளை - குமுறல்களை எழுத்தில் வடிக்கிறார்கள் என்றால் இந்தியச் சமுதாயம் பாராட்டவேண்டும்;. வரவேற்க வேண்டும் தலித் இலக்கியம் என்று எவரும் முத்திரை குத்த வேண்டாம். தமிழ் இலக்கியமாகவே இருந்துவிட்டுப் போகட்டும். இரண்டறக் கலக்கட்டும்.

புரட்சிகரமான விளக்கம்

சித்த மருத்துவம், பத்திரிக்கைத் துறை, மொழியியல் திறமை பொது உடைமைக் கொள்கை, சமூக சீர்திருத்தம் என பல்வேறு முகங்களைக் கொண்ட அயோத்திதாசப் பண்டிதர் பழம்பெருமை வாய்ந்த ஆதி திராவிடர் குலமாகப் பிறந்தாலும் தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்து மக்களுக்குமாய்ப் பணியாற்றிய பாங்கு உயர்வானது - உன்னதமானது. ஆதிதிராவிடர்களின் முன்னோர் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள் என ஆதாரப்பூர்வமாக விளக்கினார். திருக்குறள் மூலத்தின் ஓலைச் சுவடியைப் பண்டிதரின் தாத்தா கந்தப்பன் பாதுகாத்து ஆங்கிலேயரிடம் பதிப்பிக்கக் கொடுத்துள்ளார். இவரின் சில திருக்குறள் விளக்கங்கள் புரட்சிகரமானவை.

பஞ்சமி நிலங்கள்

பஞ்சமர், பழங்குடிகள் வஞ்சகமில்லாமல் உழைப்பவர்கள். தாழ்த்தப்பட்டு அழுந்திக் கிடப்பவர்களை ஓரளவு மேல்நிலைக்குக் கொண்டு வருவதற்கு வெள்ளையர்களால் எடுக்கப்பட்ட முதல் முயற்சியே பஞ்சமி நிலங்கள். இன்று பஞ்சமி நிலங்கள் எதுவும் பஞ்சமர்களிடம் இல்லை. பஞ்சமி நிலங்கள் ஏழைகளிடமிருந்து ஐந்துக்கும், பத்துக்கும் பிடுங்கப்படாமல் இருந்திருப்பின், ஆதிக்குடிகளின் நிலை உயர்வெய்தி இருக்கும் கணக்கற்ற குடிசைகள் தண்ணீரிலும் கண்ணீரிலும் மிதந்திருக்காது, கையகப்படுத்திய கனவான்கள் அந்நிலங்களைப் பஞ்சமர்கட்குத் திருப்பிக் கொடுத்துவிடலாம். மனம் இல்லையேல், அரசு நஷ்ட ஈடு தந்து பஞ்சமி நிலங்களை மீட்டு பஞ்சமர்கட்கே தந்துவிடலாம்.

கற்பித்தலில் புரட்சி

தொடாமல் விலகிச் செல்லச் சொல்வது என் உடலையா, அதனுள் இருக்கும் ஆன்மாவையா எனக் கேட்ட தாழ்த்தப்பட்ட இன காசி விஸ்வநாதன், ஆதிசங்கரர்க்கு வேதங்களின் பொருள் விளக்கம் சொன்னதாக புராண வரலாறு கூறுகிறது. தெய்வமாகிப்போன காசி விஸ்வநாதன் இன்று சிவலிங்க வடிவில் உள்ளார். சுடலைச் சாம்பலை எடுத்து வந்து சிவலிங்கத்தின் தலையில் வைத்து எல்லா மக்களும் தொட்டு அபிஷேகம் செய்கின்றனர். அருள் பெறுகின்றனர். இன்றைய சமூக

வாழ்வில் கிராம மேட்டுக் குடிகளின் படிப்பறிவும் முக்கியத்துவம் பெறுகின்றது. கற்பித்தலில் புரட்சி செய் என்று அனைவர்க்கும் அம்பேத்கர் வேண்டுகோள் விடுத்தார் என்றே படுகிறது.

சமூக சுனாமி

தலித் மக்களின் இட ஒதுக்கீட்டை முழுமையாகச் செயல்படுத்தியிருந்தால் முப்பது கோடி மக்கள் என பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியம் இன்று இருந்திராது. இதில் நாம் அனைவருமே குற்றவாளிகள். சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகியும், கல்வி, வேலைவாய்ப்பில் ஐந்து சதவீதம் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளது. நூற்றுக்கு நூறு இடஒதுக்கீடுகள் நிரப்பப்பட்டிருப்பின் இன்றைய சொல்லொணாத் துயரங்கள் மறைந்து போய் இருக்கும். இன்றைய சமூக சுனாமியின் மேல் - கீழ் தட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளாமல் இருப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து செயல் படுத்துவோம்.

உண்மையான படிப்பு

அடையாறு மருத்துவமனையில் அண்ணா இருந்தபோது காலஞ்சென்ற எல்.இளையபெருமாளிடம் கீழ்வெண்மணி சம்பவம் பற்றி குறிப்பிட்டு நீங்களும் நானும் இந்த நாட்டில் பிறந்தமைக்காக வெட்கப்பட வேண்டும் என்று சொன்னதை, வெளியில் வந்து எங்களிடம் சொன்னார். தீயில் எரிக்கப்பட்ட கொடுமைகள் அன்றும் இன்றும் தொடர்கதையாகவே உள்ளன. நந்தன், சிறுவன் வடிவில் பார்த்துக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? கற்பி என்று அம்பேத்கர் சொன்னது தலித்துகட்கு மட்டுமல்ல, மேட்டுக்குடிகள் நூற்றுக்கு நூறு உண்மையான படித்தவர்கள் ஆகும்போது சாதியையும் தீண்டாமையையும் துறப்பார்கள், மறப்பார்கள்.

நீக்கப்படாத இருள்

சுதந்திரம் அடைந்த மறுகணமே அனைத்துப்பள்ளி விடுதிகளையும் அரிசனப் பிள்ளைகட்கே அர்ப்பணித்துவிட வேண்டும் என்ற அண்ணலின் உயரிய கோட்பாடுகள் எவர் காதிலும்

விழவில்லை. அவ்வாறு நிகழ்ந்திருப்பின் டாக்டர் அம்பேத்கர் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை ஏற்படுத்தி யிருக்கவே மாட்டார். ஊமைப் பழங்குடி, தலித்துகள் ஏமாற்றப்படலாம் என தீர்க்கமாகச் சிந்தித்து இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை அவர்கொண்டுவந்தார், ஆயினும் இட ஒதுக்கீட்டின் மூலம் ரிசர்வ் தொகுதியில் வென்று நிர்வாகம் செய்ய முடியாத நிலைமைகள், குடிசைக்குள் மனித உயிர்கள் எரிக்கப்படும் கொடுமைகள் நிகழ்ந்த வண்ணமாகத்தானே உள்ளன. இன்னும் 90 சதவீத ஒதுக்கீடுகள் மறைக்கப்பட்ட சிதம்பர ரகசியமாகவே இருக்கின்றன. ஒதுக்கீட்டுச் சட்டம் இருந்தும். அடிப்படைக் கல்விச் சட்டமாக்கப்பட்டும், பழங்குடி மக்கள் இன்னும் இருட்டில் தடுமாறிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

தகுதிப் போட்டியில் வெற்றி

பெண்களும், தலித்துக்களும், பலவீனமானவர்கள், வலிமை குறைந்தவர்கள். தூண்டல் செய்து வாய்ப்புகள் ஏற்படுத்தித் தந்தால், இரு பகுதியினருமே சக்தி மிக்கவர்கள். சாதனை புரிபவர்கள். ஒவ்வொரு கட்சியும் பத்து தொகுதிகளில் ஐந்தை பொதுத்தொகுதியாகவும் மீதி ஐந்தில் தலித் பெண்களுக்கு மூன்றும், தலித் ஆண்களுக்கு இரண்டுமாக ஐந்தையும் தலித் இனத்தவருக்கே ஒதுக்கிவிட வேண்டும். செயற்குழு, பொதுக்குழு என்பதிலும் சரிபாதியை தலித் இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்து அரசியல்வாதிகள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். தலித்துகள் கல்வி பயின்று அறிவு - தகுதிப் போட்டியில்வென்று சாதித்துக்காட்ட வேண்டும்.

உயிரினங்கள் உற்பத்தி

அலையாத்திக் காடுகள் அல்லது சதுப்புநிலக் காடுகள் அல்லது சதுப்புநில மாங்குரோவ் காடுகளில் தில்லை மரம், கண்ட மரம், சுரபுன்னை மரங்கள் அடக்கமாகும். மாங்குரோவ் மரங்களின் வேர்களின் இடைவெளியில் நண்டு, இறால், மீன், குஞ்சுகள் உற்பத்தியாகின்றன. இக்காடுகளில் ஆடு மாடுகளும், பறவைகளும் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியாகவும், வாழ்கின்றன. மாங்குரோவ் கன்றுகளை நாமே உற்பத்தி செய்து அரபிக்கடல் ஓரங்களிலும் வங்கக் கடல் ஓரங்களிலும் இடைவெளி இல்லாமல் நட்டு இவைகளைப் பாதுகாத்தால் வருங்கால சுனாமியில்

இருந்து அவை நம்மைப் பாதுகாக்கும். சேந்தனாரும், பெற்றான் சாம்பனாரும் தில்லைக் கோயிலுக்குப் பிச்சாவரம் சதுப்பு நில மாங்குரோவ் காடுகளில் காய்ந்த விறகை மட்டுமே வெட்டி எடுத்து வந்து தந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

மண்ணின் மைந்தர்கள்

அடிபணிய விரும்பாத ஆதிப் பழங்குடி மக்கள் அடர்ந்த காடுகளில் தஞ்சம் புகுந்தார்கள் என்பதுடன் அப்போது நிலவிய மதமாற்றம் காரணமாகவும், தீண்டாமையின் காரணமாகவும் அடித்துத் துன்புறுத்தி விரட்டப்பட்டனர். ஒடுக்கப்பட்டனர். மூத்த உரிமைக்குரிய ஆதி குடிகள் இந்த மண்ணின் மைந்தர்கள். ஆதிசிவனும் ஓர் ஆண்டியெனக் கூறிய கவிமணியின் கூற்றிலும், சிவபெருமானும் ஓர் ஆதிவாசியே என என்னிடம் கூறிய இமயமலைத் துறவியின் கூற்றிலும் பழங்குடிப் பண்புகள் நிறையவே தெரிகின்றன. இன்று எட்டுக்கோடி பழங்குடிகளும் மலையின் மைந்தர்கள் காட்டிலாக்காவின் வனப் பாதுகாப்பு முழுவதையும் ஆதிப் பழங்குடி மக்களிடமே நிர்வாகம் செய்யச் சொல்லலாம்.உண்மையும் செல்வமும் வளமும் பெறும்.

சமஸ்கிருதமும் தமிழும்

சமஸ்கிருதம் அக்காலத்தில் சில திராவிடச் சொற்களை ஏற்றுக்கொண்டிருக்கலாம். அதே வேளையில் சமஸ்கிருதமும் தமிழ் மொழிக்கு அதிகமான சொற்களை வழங்கியுள்ளன என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். நாம் இன்று பேசும் தமிழ் மொழி வடமொழி கலந்த தமிழேயாகும். ஒப்பிலக்கணம் ஆராய்ந்தறிந்த அறிஞர் கால்டுவெல் நூற்றுக்கு நாற்பது சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் கலந்துள்ளன என்றார். திராவிட - தமிழில் மெய்வர்க்க ஒலிகள் மட்டுமன்று தேவையற்ற எழுத்துக்கள், உடனே புரிந்துகொள்ள முடியாத இலக்கணக் குறைபாடுகளும் உண்டு. ஆங்கிலத்தையும் ஹிந்தியையும் படிப்பது நல்ல தமிழனான இந்தியனுக்கு நன்மையே ஆகும்.

அங்கீகாரத்துக்கு அடிப்படை

பூமாதேவியாகிய உலகில், நதிகள் அனைத்துக்குமே பெண்களின் பெயரைச் சூட்டிப் பெருமைப்படுபவர்கள் இந்தியர்களாகிய நாம், விவசாயம் மற்றும் கூலி வேலைகளிலும்

ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் தரப்படவேண்டும், நாடாளுமன்றம், சட்டமன்றங்களிலும் ஐம்பது சதம் பெண்களாகவே இருக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியின் பொதுக்குழு, செயற்குழுவிலும் சரிபாதி பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பெண்கள் சமமாக இருக்கும் கட்சிக்கே தேர்தல் கமிஷன் அங்கீகாரம் தர வேண்டும். பெண்சிசுக்கொலை என்பது சகிக்க முடியாதது. மனிதகுல அவலம், அவமானம்.

விளையாட்டாகக் கல்வி

தெவிட்டுதல் இல்லாமல் குழந்தைகட்குச் சத்துணவு தரப்பட வேண்டும். ஜூன் மாதம் பள்ளிக் கூடம் திறக்கும் அன்றே ஆண் - பெண் என பேதம் இல்லாமல் ஜீன்ஸ் சட்டைகள் நான்கு ஜோடிகளும், இரண்டு ஜோடி கேன்வாஸ் ஷூக்களும் பேனா மற்றும், எழுது பொருள்களும் எவர்சில்வர் தட்டும் டம்ளரும், தோல்பை ஒன்றும் குழந்தை கட்குத் தரப்பட வேண்டும். சத்துணவுப் பொறுப்பாளர்கள், தட்டு, டம்ளர் களைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் சிறிய கம்யூட்டர் ஒன்று, இருக்க வேண்டும். கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு மிதமிஞ்சிய அளவில் மறுபயிற்சிதரப்பட வேண்டும். விளையாட்டும், இசையும் தியானமும், பள்ளியில் நடைமுறைப் படுத்தப் படவேண்டும். கல்வியை விளையாட்டாகத் தர வேண்டும். உதவி, ஒத்தாசைக்கு பெரும் தனியார், நிறுவனங்களின் ஒத்துழைப்பைக் கோரிப் பெறலாம்.

பெருமைப்படலாம்

தமிழ், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் இலக்கிய - இலக்கணம் பயின்று துறைபோகிய மகா பண்டிதர் அயோத்திதாசர். இவர் எழுதிய பல நூல்களில் இருந்தே தனக்கு வேண்டிய கருத்துக்களைத் தனது பல நூல்களில் எடுத்தாண்டதாக டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். திராவிடன், தமிழ். தமிழன் பகுத்தறிவு போன்ற சொற்களின் பூர்வத் தமிழன் அல்லது முதல் தமிழன் அயோத்தி தாசர். பல்வேறு சமூகச் சிந்தனைகளை தொட்டு அவர் எழுதி சுட்டிக்காட்டாத துறைகளே இல்லையெனலாம். திருக்குறள் மூலத்தை ஓலைச்சுவடியில் பாதுகாத்து வந்த பூர்வத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த கல்விமான். இவர் பெயரில்

பல்கலைக்கழகமோ, மருத்துவமனைகளோ மணிமண்டபமோ, சிலைகளோ அமைப்பதில் தமிழ்ச் சமுதாயம் பெருமைப்படலாம்.

பள்ளிகளில் தொடங்குவோம்

ஒரு தலித் பத்தாண்டுகள் பிரதமராகவோ, தமிழக முதலமைச்சராகவோ அல்லது உயர்நீதிமன்ற உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாகவோ வந்து நிர்வாகம் செய்து அதன் கட்டுப்பாட்டில் வாழ்ந்திருப்பின் பட்டிகளில் எல்லாம் இந்த பாமரத்தனம் குறைந்திருக்கலாம், இதற்கான வழிவகைகள் அனைத்தும் அடைக்கப்பட்டிருக்கின்றன. மனிதக்கழிவைத் தலையில் சுமப்பதும் இரட்டைக் குவளைச் சிக்கல்களும் சாத்வீகமாகக்கூட மறைந்த பாடில்லையே, இதைவிட பாப்பாப் பட்டி - கீரிப்பட்டிச் செயல்கள் ஒன்றும் பெரிதல்லவே.

ஒன்று செய்யலாம்: நான்கு கிராமங்களின் தொடக்கப் பள்ளிகளைத் தத்தெடுத்து, உயிரிய கல்வி வசதிகளைச் செய்து முன்னேற்றுவோம், வருங்காலச் சமுதாயமாவது ஒளி பெறட்டும்.

மகாத்மாவின் பொன்மொழி

காந்தியடிகளை ரயிலில் இருந்து கீழே தள்ளியதும், டாக்டர் அம்பேத்கரை வண்டியில் இருந்து கீழே தள்ளியதும் தீண்டாமை அல்லது சாதியின் தாக்கமே என்பதை மகாத்மா அறிந்தே செயல்பட்டுள்ளார். தலித்துகள் அழுத்தப் பட்டவர்கள், அமுக்கப்பட்டவர்கள்; துப்புரவுத் தொழிலாளர்கள், எல்லா அழுக்குகளையும் நீக்கிச் சீர்திருத்தபவர்; எல்லாவற்றையும் அழகுப்படுத்துபவர்கள், அவர்களில் இருந்தே பெண் குடியரசுத்தலைவராகவும் வரவேண்டும் என அறிவியல் பொன்மொழியாக வெளியிட்டுள்ளாரே.

சாதி ஒழிப்பில் மட்டும் காந்தியடிகளுக்கு ஒரு தேக்கம் இருந்ததுண்டு. கலப்புத் திருமணம் போன்றவற்றால் சாத்வீகமாகவே சாதியை வென்றுவிடவேண்டும் என்ற ஆதங்கம் அவருள் இருந்தது உண்மை. காந்தி பிறக்கவில்லையெனில் இந்தியச் சுதந்திரமும் தலித் முன்னேற்றமும் பல பத்தாண்டுகள் பின்னோக்கிப் போய் இருக்கலாம்.

அம்பேத்கரின் தீர்க்கதரிசனம்

மாமேதை அம்பேத்கர் எவராலும் எவற்றாலும் தட்டிக்கழிக்க முடியாத மலைபோன்ற ஒரு தீர்க்கதரிசி. அவர் கூறியதுபோல் கட்சிகள் தத்தம் மலிவான கோட்பாடுகளால் மனத்தளவிலும், உடலளவிலும் நம்மை அழுத்தத்திற்கு உள்ளாக்கிக்கொண்டிருக்கின்றன. எதிர்கட்சி அரசியல் புள்ளிகள் சட்டசபையில் வன்முறையைத் தூண்டும் ஆட்காட்டி விரலைக் காட்டி உங்களை ஒழித்துக்கட்டிவிடுவோம் என்கின்றனர். அரசில் உள்ளவர்களும் ஆட்காட்டி விரலை கொஞ்சம் கூடுதலாகத் தூக்கிக்காட்டி உங்களை கூண்டோடு தொலைத்துவிடுவோம் என்கின்றனர். முடிவில் மைக்குகளையும் நாற்காலிகளையும் ஆயுதமாக்கிக் கொள்கின்றனர். காந்தியடிகள் பிறந்த இப் பொன்னாட்டில் இதுபோன்ற அவலங்கள் தேவைதானா? அம்பேத்கர் சொன்னபடி கட்சியின் கோட்பாடுகளை நாட்டின மேல் சுமத்துகின்றனர் என்பதைத் தவிர வேறென்ன?

கட்டாயத் தேர்தல்

கூட்டுறவு என்பது ஒருவர் எல்லோருக்காவும் எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும் பாடுபட்டு பலன் அடைவது என்ற பண்பு நிறைந்த வாக்கியமாகும்.

கூட்டுறவு தோற்றுவிட்டது, ஆனால், அது வெற்றி பெற வேண்டும் என்ற சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கத்தைத் தூக்கிப்பிடித்து தாங்கி நிற்க வைத்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

வேளாண்மைக் கடன்களில் தனியாரிடம் வாங்குவதைவிட வட்டி மிகவும் குறைவு. எனவே வாங்கிய கடன்களைத் திருப்பி கட்டும் மனப்பான்மை நம் ஒவ்வொருவருக்கும் வந்திருக்க வேண்டும்.

ஒவ்வோர் ஐந்தாண்டு முடிவிலும் தேர்தல் கமிஷன் கட்டாயமாகக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தினாலே ஊழல் தொலைந்து கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றி பெற்றுவிடும்.

பெருந்துணை

சமூகத்தில் நிலவும் பெண் அடிமைத் தனம் நீங்க வேண்டும். பெண்ணே நாட்டின் கண்கள் என்றெல்லாம் சொல்வதுடன் நின்றுவிடக்கூடாது.

பெருமை வாய்ந்த பெண் இனத்தின் பெருமையைத் தக்க வைத்துக் கொண்டோமா எனில் இல்லவே இல்லை. பெண் இல்லற அடிமை இல்லை. பெண் இல்லறத்தின் பெருந்துணை, மனசுக்கு ஒரு மின்அதிர்வு. இருபாலருக்கும் பொதுவானதாகவும் பொருத்தமாகவும் தெரிகின்றன.

சமூகப் புரட்சி

சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த ரவி தாஸி என்னும் தாழ்த்தப்பட்ட மக்களின் உயரிய தலைவர் கான்சிராம். பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த வட இந்திய குரு ரவிதாஸின் பெயரிலேயே இச்சமூகம் ரவிதாஸி என அழைக்கப்படுவதாக உள்ளது. ரவி தாஸ் அருட்பாடல்கள் சீக்கிய மத நூலான கிரந்தத்தில் சேர்க்கப்பட்டு பெருமையுடன் ஓதப்படுகிறது.

எனவே, இயற்கையிலேயே சமூகப் புரட்சியும் ஆர்வமும் கான்சிராமின் குருதியிலேயே கலந்துள்ளதில் வியப்பில்லை, பணியமறு, அடங்கமறு, குனியமறு என்னும் தாரக மந்திரங்களின் வடிவில், கான்சிராமை நினைவில் வைத்து, தலித் இந்தியத் தேரை முன்னோக்கிச் செலுத்தச் செய்வோம்.

நன்றி தினமணி

சேந்தன் வாய்க்கால்

சேந்தமங்கலத்தில் இருந்து திருவிடைக்கழி வழியாக வங்கக்கடலில் கலக்கும் அருளடியார் சேந்தனார் சீர்செய்த வாய்க்கால்

பிற்சேர்க்கை

எனது கருத்துரைகூட்டு அறிஞர் பெரு மக்களின் ஆணித்தரமான ஆதாரமான கருத்துக் குவியல்கள்

❖ வர்ணம் ஜாதியல்ல

'குறளுக்கு என்ன குறை' என்ற தலைப்பில் சென்னை வாசகர் த.ராசு எழுதிய கடிதத்தில் (18.10.06) 'ஸம்ஸ்கிருதத்தை மற்றவர்கள் கற்றுக் கொள்ளக்கூடாது என்பது அல்லவா இதுவரை வேதப் பெரியோர்களின் சாதகமாக இருந்து வந்தது' என்று கூறியுள்ளார். வேதங்களிலும், உபநிஷதங்களிலும் எங்கேயும் பிற இனத்தவர்கள், மற்றவர்கள் ஸம்ஸ்கிருதம் படிக்கக் கூடாது என்றும் வேதங்களைப் படிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்படவே இல்லை. சென்ற ஆண்டு வானமாமாலை ஜீயர் என்ற வைணவ மடத் தலைவர் ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு அளித்த பேட்டியில் 'ஹரிஜனங்கள் உள்பட அனைத்து ஜாதியார்களும், யார் வேண்டுமானாலும் வேதங்களைப் படிக்கலாம், பாராயணம், செய்யலாம்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். வேத, உபநிஷதங்கள் எந்தெந்த ரிஷி முனிவர்கள் மூலமாக மனித இனத்துக்கு இறைவனால் அருளப்பட்டனவோ அந்த ரிஷி முனிவர்களில் பலர் பிறப்பால் பிராமணர்களே இல்லை என்பது உண்மை. வேதகாலத்தில் ஜாதிகள் இருந்ததில்லை. வர்ணங்கள், ஜாதிகள் இல்லை. ஒரு குடும்பத்திலேயே நான்கு வர்ணங்களைச் சேர்ந்த குமாரர்கள் இருப்பது சாத்தியம்.

குணங்களைப் பொருத்த வர்ணனையே வர்ணம் எனப்படுவது. ரிஷிகளில் மாதங்க முனிவர், இப்போது நாம்

தாழ்த்தப்பட்ட இனம் என்று சொல்லிக் கொள்கிறோமே அந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் ஸம்ஸ்கிருத மொழியில் ஆதி காவியமெனப்படும் முதல் காவியமாகிய ராமாயணத்தை எழுதிய வால்மீகி, வேடுவர் இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் (புலையர் என்றும் சொல்வர்), ஸம்ஸ்கிருத மொழிக்கு இலக்கணத்தை வகுத்த பாணினி என்ற மேதை தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்தவர் என்பதும், உலகினுக்கு காயத்ரி மந்திரத்தை உபதேசித்த விசுவாமித்திரர் பிறப்பால் பிராமணர் இல்லை என்பதும் உணரத்தக்கது.

பகுத்தறிவுக்காரர்களின் தவறான பிரசாரம் காரணமாகவே, வேதங்கள், உபநிஷதங்கள், ஸம்ஸ்கிருதம் பற்றி தவறான எண்ணம் தமிழ்நாட்டில் மட்டுமே வேரூன்றிவிட்டது. ஆனால் புதிதாக ஸம்ஸ்கிருதம் கற்பதில் தமிழ் நாடு இந்தியாவிலேயே முதன்மை இடம் வகிக்கிறது. இந்தியா முழுவதும் ஒரு கோடிப் பேர்களுக்கு ஸம்ஸ்கிருதம் பேசக் கற்றுக்கொடுத்துள்ளது. 1984-ல் தொடங்கப்பட்ட ஸம்ஸ்கிருத பாரதி (தொலைபேசி எண் 28472632). குறளை யாரும் குறை கூறவில்லை. குறள் மட்டுமே போதும் என்பது அவரவர் விருப்பம்.

ஸ்ரீராம் அ.பராசரன், சென்னை - 40

2. ஹரிசனங்களே! உங்களுக்கு நமஸ்காரம். நாங்கள் தலைமுறை தலைமுறையாகச் செய்த பாவங்களுக்குப் பச்சாதாபப்பட்டு பிராயச்சித்தம் செய்துகொள்ள விரும்புகிறோம் என வாக்குறுதி செய்து, இவ்வேத நூலை உங்கள் பாதக்கமலங்களில் சமர்ப்பிக்கிறேன். நீங்கள்தான் இவ்வேதங்களைப் படித்து பாரதநாடு மாத்திரமல்ல பூலோகமுழுவதும் பிரச்சாரம் செய்து மறுபடியும் தர்ம ஸ்தாபனம் செய்ய வேண்டும். இந்நாடு பூலோகம் முழுவதும் புனிதவேதம் விரிந்து தலையோங்க நீங்களே அதற்கேற்ற கங்கையைக் கொண்டுவர முடியுமென இதை நான் உங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன். வேதங்களின் மொழிபெயர்ப்பை ஹரிசனப் பெருமக்களுக்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறேன்.

திரு ஜம்புநாதன் சென்னை

3. முதலாவதாகத் தோன்றிய வேதம் எனப்படும் ரிக்வேதத்தைப் படித்தால் அதன் முதல் பகுதி சுத்தமான சமஸ்கிருத மொழியில்

இல்லை. ஆதிகால மக்கள் பேசிய கொச்சை மொழியில் உள்ள சுலோகங்களை அங்குக் காணலாம். வழக்கில் இருந்த மொழிகளில் இருந்தே அதன் சொற்களைக் கொண்டே சமஸ்கிருதத்தை சிருஷ்டித்தனர். சமஸ்கிருதம் என்றாலே நன்கு அமைக்கப்பட்டது.

மார்க்சிஸ்ட் தலைவர் திரு பி.ராமமூர்த்தி

4. சிவன் (ருத்ரன்) சிவனை ருத்ரன் என்பார். ருத்ரன் என்பது சூத்ரன் என்பதே. ருத்ரன் என்பவன் தங்களுடைய யாகத்தை அழித்தவன். ருத்ரன் கொடிய ஆயுதங்களைத் தாங்கியவன். வேதங்களை அழித்தவன். ருத்ரன் வேதங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறைவன் அல்லன். ஆரியர் அல்லாத மக்களால் வணங்கப்பட்டவன் ருத்ரன். ருத்ரனைத் தாழ்ந்தவனாகவே வேதங்கள் வர்ணிக்கின்றன. பின்னர் வேதங்களும், பிராம்மணங்களும் ருத்ரனை முழு முதல் கடவுளாக ஏற்றுக் கொண்டன. லிங்கத்தில் இருந்து தோன்றியவன் சிவன்.

டாக்டர் ஆ.பத்மாவதி
எழுத்தாளர்

5. "இந்தியத் திருநாட்டில் அனேக முக்கியமான ஆலயங்கள் ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்த பெரியோர்கள் தகனமான இடத்தில் கட்டப்பட்டனவென பறையன், என்ற பத்திரிகையிலும் சமீபகாலத்தில் துண்டுப் பத்திரிகையிலும் பிரஸ்தாபித்திருக் கின்றேன்.

தாத்தா ரெட்டமலை சீனிவாசன்
பழங்குடி பெருந்தலைவர்

6. ஆதி மனிதன் விளங்கிக்கொள்ள முடியாமல் தவித்த மின்னல், மழை, வெள்ளம் போன்றவற்றை உருவாக்கும் ஏதோ ஒரு பெரும் சக்தி இருப்பதாக நம்புவதிலிருந்தே மதத்தின் மையக் கருத்து தொடங்குகிறது.

உலகப்பேரறிஞர்
டாக்டர் அம்பேத்கர்

❖ இன்றைய தமிழ்க் குழந்தைகளின் பெயர் மாற்றங்களின் மூலம் இந்தியப் பண்பாட்டையும், இந்துமதக் கலாச்சாரத்தையும் ஆன்மீகத்தையும் கூட மேன்மைப் படுத்தலாம், மெருகேற்றலாம்; புதுமைப்படுத்தலாம்; பொற்காலம் ஆக்கலாம்.

செழியன்சேந்தன், அன்புச்சேந்தன், ஆழிச்சேந்தன், இளஞ்சேந்தன், இன்பச்சேந்தன், எழில்சேந்தன், ஸ்ரீசேந்தன், சேந்தஸ்ரீ, அறிவுச்சேந்தன், தமிழ்ச்சேந்தன், சிவன்சேந்தன், பெருமாள்சேந்தன், திருச்சேந்தன், தில்லைச்சேந்தன், தம்பிச்சேந்தன், சேந்தன்ராஜ் சேந்தன்ராஜா, குமார்சேந்தன், கோயில்சேந்தன், மலர்ச்சேந்தன், மக்கட்சேந்தன், சங்கரச்சேந்தன், தங்கச்சேந்தன், தரணிச்சேந்தன், தார்ச்சேந்தன், தேர்ச்சேந்தன், முருகசேந்தன், முத்தமிழ்ச்சேந்தன், இசைச்சேந்தன், சேந்தஉஷா, சேந்தபானு, பாபுச்சேந்தன், பன்னீர்ச்சேந்தன், அழகுச்சேந்தன், ஆதவச்சேந்தன், உதயச்சேந்தன், உலகச்சேந்தன், கயிலைச்சேந்தன், கார்மேகச்சேந்தன், சேந்தமதி, சேந்தச்செல்வி, சேந்தன்சேரன், சேந்தன்சோழன், சேந்தன்பாண்டியன், பட்டினச்சேந்தன், மறைச்சேந்தன், திருக்குலச்சேந்தன் தென்தமிழ்ச்சேந்தன் தென்பாண்டிச்சேந்தன், ராஜேந்திரசேந்தன், ராஜராஜச்சேந்தன், கந்தச்சேந்தன், கருணைச்சேந்தன், கண்ணன்சேந்தன், கவிச்சேந்தன், கவிதைச்சேந்தன், கண்மணிச்சேந்தன், இசைத்தமிழ்ச்சேந்தன், தமிழிசைச்சேந்தன், வள்ளல்சேந்தன், வள்ளுவச்சேந்தன், கூத்தன்சேந்தன், சேந்தன்கூத்தன், கலைச்சேந்தன், மணிச்சேந்தன், மாதவச்சேந்தன், வேதச்சேந்தன், வித்தகச்சேந்தன், புரட்சிச்சேந்தன், புன்னகைச்சேந்தன், காளிச்சேந்தன், களப்பிரச்சேந்தன், மாரிச்சேந்தன், கங்கைச்சேந்தன், காவிரிச்சேந்தன், இமயச்சேந்தன், பொதிகைச்சேந்தன், பூம்புகார்ச்சேந்தன், சிந்துச்சேந்தன் பொற்கைச்சேந்தன், விடுதலைச்சேந்தன், வேழச்சேந்தன்,

சிறுத்தைச்சேந்தன், செந்தமிழ்ச்சேந்தன், சீர்வளர்சேந்தன், காணிச்சேந்தன், கழனிச்சேந்தன், கழனிகாத்தசேந்தன், ஆனையேறிச்சேந்தன், முத்துச்சேந்தன், மும்மாரிச்சேந்தன், குமரிச்சேந்தன், காஞ்சிச்சேந்தன், அருள்சேந்தன், இன்தமிழ்ச்சேந்தன், இயற்றமிழ்ச்சேந்தன், எழுச்சிச்சேந்தன், சிந்தனைச்சேந்தன், செல்வச்சேந்தன், தொல்காப்பியச்சேந்தன், நாரணச்சேந்தன், சேந்தன்நாராயண், பாணன்சேந்தன், பாரதிசேந்தன், சேந்தன் சிதம்பரம்.

❖ தில்லையின் ஆடல் வல்லானும், திருப்பல்லாண்டு பாடல் வல்லானும்

(கட்டுரையாளர் நூலாசிரியர்)

(சிதம்பரத்தில் 25-3-2009 புதன்கிழமை நடந்த இந்து ஆலய பாதுகாப்புக்குழு மாபெரும் பொதுக்கூட்டத்தில் இக்கட்டுரை வெளியிடப்பட்டன)

சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னால் தில்லைச் சிதம்பரத்தின் மார்கழி மாதத் திருவாதிரைத் தேர்விழா வைபவம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. கடும் மழைப்பொழிவினால் தேர்ச்சக்கரங்கள் மண்ணில் அழுந்தி தேர் நகராமல் நின்றுவிடுகிறது. அங்கே முதலில் பதறித்துடித்து மனம் வெதும்பியவர்கள் தீட்சிதப்பெருமக்களேயாவார். அங்கே ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் ஆதிதிராவிட பழங்குடி மக்களும் தில்லைக் கூத்தப்பெருமானை வணங்கி நிற்கின்றனர். அப்போது ஓர் ஆச்சரியம் நிகழ்கிறது. தேரில் இருந்து "சேந்தா தில்லை திருப்பல்லாண்டு பாடு, தேர் தானே எழுந்து ஓடும்" என ஓர் அசரீரி கேட்கிறது. தில்லைக் கூத்தன் அடி எடுத்துக்கொடுக்காமலே

கட்டளை இடுகிறார். ஆங்கே பக்திப் பரவசத்துடன் நின்றிருந்த ஆதிதிராவிட இனத்தில்தோன்றிய அருளடியார் சேந்தனார், "மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள்" என்னும் முதல்பாடலுடன் தில்லைத் திருப்பல்லாண்டு பாடல்கள் பதிமூன்று திருப்பாடல்களையும் ஆடல்வல்லான் உத்தரவுக்கிணங்க ஆதிதிராவிட பாடல்வல்லான் திருவீதியில் நின்றவாறே பாடிமுடிக்கிறாார். தேர்தானே எழுந்து நான்கு வீதிகளையும் சுற்றிவந்து நிலையில் நிற்கிறது. தில்லை வாழ் பக்திமான்களும், தீட்சிதர்களும் தேர் ஓடிய மகிழ்ச்சிப்பெருக்கில் திளைக்கின்றனர். தில்லைத்தலவரலாற்றில் இது ஓர் அற்புதமான நிகழ்ச்சியாகும். இது புராணம் அல்ல, வரலாறு.

தீண்டத்தகாத பாடல்வல்லான் சேந்தன் பாடிய பாடல்கள் என்பதற்காக மறைத்து வைக்காமல் தீட்சிதப்பெருமக்கள் சேந்தன்பாடிய திருப்பல்லாண்டு பாடல்களையும் சேந்தனார் உருவத்தையும் கோவிலின் உள்ளே எழுதிவைத்து இன்றும் பக்தியையும் ஆன்மீகத்தையும் வளர்த்துப் போற்றி வருகின்றனர். தினப்பூசைகளின்போது தேவாரத் திருவாசகப்பாடல்களையும் மறக்காமல் - மறைக்காமல் பாடிவரும் தீட்சிதத் தமிழர்கள் ஆழித்தேர்போல என்றும் கம்பீரத்திற்கு உரியவர்களாகவே இருந்து வரட்டும்.

ஆனித்திருமஞ்சனம், திருவாதிரைத் தேர்விழாக்கள் நடக்கும் அன்று அடியார்களுடன் தேருக்கு முன்னால் தீட்சதர்களும் குழுவாக நின்று திருப்பல்லாண்டு பாடல்களைப் பாடிக்கொண்டு வருவது இன்றும் தொடர்கிறது. இதன் மூலம் தமிழர்களின் கலாச்சாரமும் ஆன்மீகமும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. மற்றொருநாள் பின்னிரவில் தில்லைக் கூத்தனே சிவனடியாராகச் சென்று சேந்தன் குடிசையில் களி உணவு உண்டுவந்த நிகழ்ச்சியையும் மறக்காமல் திருவாதிரைக் களி உணவு சமைத்து அடியார்களின் பசிபோக்கி வருகின்றனர். சமபந்தி போஜனத்தை தில்லைக் கூத்தன் அன்றே தொடங்கி வைத்துள்ளார். இந்த இரண்டு அற்புத நிகழ்ச்சிகளையும் இன்றைய நமது தமிழகத்தில் எந்த தமிழனாவது செயலளவில்

- மனத்தளவில் நினைவு கூறுகின்றனரா- பாராட்டுகின்றனரா? சைவ வைணவ நெறிநின்று சாத்வீகமாக வாழ்வதும், போற்றுவதும் சேந்தனின் திருப்பல்லாண்டு பதிகங்களைப் பக்திப்பரவசத்துடன் நெஞ்சம் நெக்குறுகி தீட்சிதத் தமிழ் மக்களே பாடிவருவது தீட்சிதர்களின் வாழ்வியலாகவே இருந்து வருகிறது.

இன்றைய தமிழ்ச்சமூக வாழ்வியலில் தீட்சிதர் இல்லங்களில் எல்லாம் தாய்மொழியாகிய தமிழ் மொழியே பிரதானமாக பேசப்படுகிறது; எழுதப்படுகிறது. பூசையில் மட்டுமே வடமொழியில் மந்திரங்கள் ஓதப்படுகின்றன. எனவே. இன்றைய தமிழகத்தில் வாழும் தீட்சிதர்கள் அனைவரும் தமிழ் மக்களேயாவார். நாலு பரம்பரையைத் தூக்கிப் பார்த்தால் நாவிதனும் தனக்குப் பங்காளியாவான் என்னும் தமிழ்ப் பழமொழி காட்டும் உண்மையை உணர்வோம். தில்லையைச் சுற்றிய பகுதிகளில் அல்லது தமிழகப் பிறபகுதிகளில் மரபணு சோதனைக்கு மனிதர்களை உட்படுத்தினால் தமிழர்களும் தீட்சிதர்களும் ஒரே மரபணுவில் இருப்பது நன்கு புலனாகிவிடும். இன்றைய தீட்சிதர்கள் தமிழ் இனம் சார்ந்த சகோதரார்களேயாவார். சாத்வீகமான தீட்சிதர்கள் சைவத்தையும் வைஷ்ணவத்தையும் சைவ சமயத்தையும் தூக்கிப்பிடித்து தாங்கி நிற்கிறார்கள். நமக்காக கோயில் பராமரிப்பில் சுத்தம் சுகாதாரம் காத்து ஆன்மீகத்தையும் கலாச்சாரத்தையும் புனிதமாகவும் பொலிவுள்ளதாகவும் ஆக்குபவர்கள் தீட்சிதர்களே. வெளிப்படையாகச் சொன்னால் தீட்சிதமக்கள் தீண்டாமைக் கொடுமைகட்கு எல்லாம் அப்பாற்பட்ட சாத்வீக மனிதர்களாக வாழ்கிறார்கள். நமக்காகவும் நம் குடும்ப நலத்திற்காகவும் ஆறுகால பூசை புனஸ்காரங்களையும் செய்து கடவுளின் பெயரால் நம்மை ஆசிர்வதிக்கிறார்கள். வறுமையிலும். துன்பத்திலும் தீட்சிதர்களின் வாழ்க்கை முறை இருப்பின் நல்ல முறையில் ஆன்மீக விஞ்ஞானத்தை வளர்க்க முடியுமா? கோயிலையும், கோயில்சார்ந்த சொத்துக்களையும் அவர்கள் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள், வைத்திருக்க வேண்டும்; வைத்திருப்பார்கள். பக்தர்களின் காணிக்கைகளையும்

நன்கொடைகளையும் ஊதியமாகப் பெற்று தீட்சிதர்கள் ஆண்டு அனுபவித்துப்போகட்டும். இன்றும் கிராமகோயில் பூசாரிகளும் ஆதிதிராவிட திருவள்ளுவர் குல பண்டாரங்களும் கோயிலின் காணிக்கைகளையும் நிலபுலன்களையும் ஆண்டு அனுபவிப்பதில்லையா? அதுபோல்தானே தில்லைக் கோயிலும். கோயில் சொத்துக்களை விற்பனை செய்து சுவிஸ் வங்கியில் போட்டு வைத்திருக்கும் தீட்சிதர்கள் யாராவது உண்டா? தீட்சதர் அல்லாதவர்களே சுவிஸ் வங்கியில் திருட்டு கணக்கு வைத்திருக்கின்றனர். இத்தாலியின் வாட்டிகனின் போப்பாண்டவர் போல நாட்டுக்குள் தனிநாடாகவா, நிர்வாகம் செய்கிறார்கள்? நம்மைப்போலவே அரசின் கட்டுப்பாட்டுக்கும். சட்டதிட்டங்கட்கும் உட்பட்டவர்களாகத்தானே தீட்சிதர் வாழ்கிறார்கள். தில்லைக் கோயிலை அரசு எடுத்துக்கொண்டதால் நாடு பொது உடைமை அரசு ஆகிவிடுமா? பொருளாதாரவளர்ச்சி நூறு சதவிகிதம் ஏற்பட்டுவிடுமா? அல்லது தீண்டாமை கொடுமைகள் எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிடுமா?

தமிழ் மன்னர்கள் இக்கட்டான நிலையில் இருந்த போதெல்லாம் ஆலோசனை வழங்கி, ஆதரவு நல்கி கைகொடுத்தவர்கள் தீட்சிதர்கள். மொகலாயர் படையெடுப்பின்போது சோமநாதபுரம் ஆலயம் போல் கொள்ளை போகாமல் தில்லைகூத்தனின் பாதரச - பஞ்சலோக தங்கச் சிலையைத் தெற்கே எடுத்துக்கொண்டு போய் அம்பலப் புளியமரப் பொந்தில் மறைத்து வைத்திருந்து பலகாலம் சென்றபின் பாதுகாப்பாகக் கொண்டுவந்து வைத்தவர்கள் இந்தத் தீட்சிதர்கள்தானே. ஆங்கிலேயர்களிடமிருந்தும் தில்லை திருக்கோயில் தங்க சிலைகளை உயிரைக் கொடுத்து காப்பாற்றியவர்கள் இந்த தீட்சிதப்பெருமக்கள் என்னும் வரலாறெல்லாம் உண்டுதானே.

நாத்திக வாதம் மேலோங்க வேண்டுமென்ற கணக்கில் அரசு கோயிலை அறநிலையத்துறையின் கீழ் கையகப்படுத்தி யிருப்பின், இன்றில்லாவிட்டாலும், என்றாவதொருநாள் கெட்ட நோக்கமாக வரலாறு காட்டிவிடும். புத்தர் முதல் இங்கர்சால்

வரையில் அல்லது அயோத்திதாசர் பண்டிதர் முதல் தந்தை பெரியார் வரையில் கடவுள், மதம் மறுப்பின்மூலம் நாத்திகம் பேசியவர்கள். சமூக நீதிக்கு மட்டுமே பச்சைக்கொடியைக் காட்டி வழிகாணத் துடித்தவர்கள். இன்றைய பிரபஞ்சத்தின் பிரம்மாண்டத்தை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இன்றைய நிலையில்அவர்கள் உயிரோடு இருப்பின் கடவுளும், மதமும் மனிதவாழ்வுக்கு அவசியமான ஆதாரம் என, கடவுள் வேண்டும் என்ற கொள்கையில் தீவிரம் காட்டியிருப்பார்கள். கடவுள் என்பது பிரபஞ்சத்தை சூழ்ந்திருக்கும் சக்திப் பெருக்குகள்தானே. தீபஒளிஆராதனைகள்சடங்குகள்செய்வதன் மூலமாக ஒளியையும் வெப்பத்தையும் விஞ்ஞானமாக்கியவர்கள் தீட்சிதர்கள். விஞ்ஞானமாகப் பார்ப்பவர்கள் இன்றைய தீட்சிதத் தமிழனே. இன்றைய விஞ்ஞான உலகில் நம் நாடு மதிக்கப்படுகிறதென்றால் ஆன்மீகப் பக்தியின் மூலம் முதன் முதலில் விஞ்ஞானத்தை உலகிற்குப் போதித்தவர்கள் நாம். கடவுள்களும். மதஆச்சாரங்களும்அனுஷ்டானங்களும்உலகிற்குப் போதித்தவர்கள் நாம். கடவுள்களும், மத ஆச்சாரங்களும் அனுஷ்டானங்களும் வருங்காலத்தில் மிக மிகப் பிரபலமாகவே இருக்கும். இவை இல்லாமல் வருங்காலங்கள் நற்காலமாகவே இருப்பதற்கு வாய்ப்பில்லை. நாமும் நம் குடும்பமும் மனநிம்மதி வேண்டியும் வாழ்வின் வளத்திற்காகவும் கோயிலுக்குச் சென்று மனம் தெளிந்து மனம் குளிர்ந்து மகிழ்ச்சியுடன் மனைவி மக்களுடன் வெளிவருகிறோம். நமக்கு நிம்மதியைத் தரும் தீட்சிதர்களும், கோயில் பணிமூலம் நிம்மதியைப் பெறட்டும், வாழ்வாதாரங்களையும் பெறட்டும்.

இருதயஸ்தலமான ஆடல்வல்லான் தில்லைக் கூத்தனின் இருப்பிடத்தை அரசு எடுத்து நிர்வாகம் செய்வதை சற்றே நின்று நிதானிக்கலாம். இருதயம் கோளாறு இல்லாமல் செயல்படும்போது அறுவை சிகிச்சை தேவையில்லைதானே. இதில் நாம் நிதானம் தவறினால் இன்றைய சாரசரித்தமிழன் போல் வருங்காலத்தில் தீட்சிதத்தமிழனும் கள்ளநோட்டு அடிப்பவராகவும் கொடும்தொழிலைச் செய்யும்

தீவிரவாதிகளாகவும் மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் ஏற்படலாம். இந்திய தமிழக நாகரீக ஆன்மீகக் கலாச்சாரங்கள் தீட்சிதத் தமிழனால் காக்கப்படுவதை நாம் நிர்மூலம் ஆக்கவேண்டாம்.

ஆயிரம் ஆண்டளவில் புத்தமதத்தாக்கத்தில் இருந்த தமிழ் மன்னர்களின் கோயிலை இந்துமத வளர்ச்சிவேண்டி, தீட்சிதர்கள் அன்று கையகப்படுத்தியிருக்கலாம். பதிலுக்கு இன்று நாம் தீட்சிதர்களிடம் இருந்து இன்றைய அரசு தில்லைக்கோயிலைக் கையகப் படுத்துதல் சரியான தீர்வாகாது. அன்று தீட்சிதர்கள் கோயிலைக் கைப்பற்றி யிருக்கவில்லையெனில் இன்று ஏதாவது சொத்துக்கள் மிஞ்சியிருக்குமா? தியாகி வாஞ்சிநாதன், தியாகி மதுரை வைத்தியநாதன் பரம்பரைக்கு நிம்மதியைத்தருவோம். நிம்மதியைப் பெறுவோம். ஆடல் வல்லானின் மனம் குளிர தில்லை வாழ்பெருமக்கள் நீதிநெறியைக் காக்கட்டும். பாடல்வல்லான் அருளடியார் சேந்தனாரின் தில்லை திருப்பல்லாண்டு பாடல்கள் காலாவதியாகிவிடாமல் காலம் காலமாக நின்று நிலவட்டும். தீட்சித தமிழனின் தில்லைத் தேரோட்டம் என்றென்றும் உலாவரட்டும். தில்லைக்கூத்தனுக்கு ஆயிரம் ஆண்டளவில் திருப்பிடவூரிலும் இந்து மதத்தின் சார்பில் ஓர் அழுத்தத்தைத் தந்த அருளடியார் சேந்தனார் பெயரில் திருவிடைக்கழியிலும் மடமும், நினைவுச் சின்னமும், கல்வி நிறுவனங்களும் அமைந்திட பிரபஞ்சத்தில் கடவுள் சக்தியாக நம்மைக் காத்துவரும் இறைச்சக்தியைப் பிரார்த்தனை செய்வோம்.

கட்டுரையாளர் கவிஞர் **நாரணமணிவண்ணன்,** M.A.,
(கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி கலை
இலக்கிய பேரவை உறுப்பினர்)
சிதம்பரம்.

❖ திருமுறைவாணர்களுக்கும் அரசுக்கும் பொதுமக்களுக்கும் வேண்டுகோள்

ஆதிதிராவிட அருளடியார் சேந்தனாரை அறுபத்து மூன்று நாயன்மார்களில் சேர்த்து வைத்து எண்ணத்தக்கவர் என்ற கருத்து பழங்காலத் தமிழ் மக்களிடம் இருந்துள்ளது. இன்றைய இந்து மத ஆச்சாரியார்கள், ஆதீனங்கள், மடாதிபதிகள், அறிஞர் பெருமக்கள், புலவர் பெருமக்கள் எல்லாம் ஒன்று கூடி தீர்க்க ஆராய்ந்தறிந்து அருளடியார் சேந்தனாரையும் திருமறைகளில் சேர்த்து, ஆறுபத்து நான்கு நாயன்மார்களாக - பெருமைக்குரிய வராகச் செய்யலாமா, என யோசிக்கலாம். வருங்கால இந்து மத வளர்ச்சிக்காக இக்கருத்தை மனமுவந்து செய்வது இறைத் தொண்டுக்குச் சமமானது என வருங்கல இந்தியத் தமிழ்ச் சமுதாயம் பெருமையும் படலாம். பிராயச் சித்தம் செய்து கொள்வதாகவும் அமையலாம் மாறுதலுக்குட்பட்டதே அனைத்தும்.

அருளடியார் பிறந்த திருப்பிடவூரில் ஒரு நினைவுச் சின்னமும் தில்லைச் சிதம்பரத்தில் ஒரு திருமடமும் அமைத்து சேந்தனாரின் அருளாசியைப் பெறலாம். திருவிடைக் கழியில் சேந்தன் வாய்க்கால் ஒன்றும் திருக்குளம் ஒன்றும் புதர் மண்டிக்கிடக்கிறது. வாய்க்காலையும், திருக்குளத்தையும் தூர்வாரி,

கரைகளை வலுப்படுத்தி, அழகுபடுத்தி பொது மக்கள் பயன்பெறச் செய்யலாம். குளத்தின் வட கரையில் சிதிலமடைந்துக் கிடக்கும் சேந்தனார் திருடமத்தையும், புதுப்பித்துக் கட்டிக்காத்து திருமறைகள் ஓதச் செய்யலாம்.

இன்றைய திருவிடைக்கழி கிராமம் பழங்காலத்தை நினைவு படுத்துகின்றன. இன்றைய அளவில் திருவிடைக்கழியில் சேந்தனார் பெயரில் தொடக்கப் பள்ளியும். உயர்நிலைப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளியும் செயல்படச் செய்து மக்கள் மனம் மகிழச் செய்யலாம். சேந்தன் கல்லரையின் கீற்றுக் கொட்டகைக் கூரையையும் நவீனகாலக் கூரையாக புதுப்பிக்கலாம்.

அறிஞர் பெருமக்களில் ஆராய்ந்த முடிவான கருத்துக்களின்படி லிங்கமும், லிங்க வழிபாடுகளும் பழங்குடி மக்களின் தாக்கமாகவும், நினைவுச் சின்னமாகவும் தெரிகின்றன.

காசிவிஸ்வநாதரைச் சுடலைச் சாம்பலால் பக்தர்கள் அர்ச்சனை செய்வதும், திருக்கடையூர் அபிராமிக்கு சுடலையில் வெட்டிய ஊற்று நீரில் இருந்தே அர்ச்சனை செய்வதும். பள்ளிப்படை கடலையில் அமைந்த தில்லைக்காளிக்கு பழங்குடி பாமரனே மணமகனாக சித்தரிப்பதும், தமிழ் நாட்டில் பல ஊர்களில் சிவன் கோயில்களில் பழங்குடிகளே அர்ச்சகராகச் செயல்பட்டு அருளாசி வழங்கி வருவதும் இன்றைய தமிழர் வாழ்வியலாகவே இருந்து வருகின்றன.

இந்தியத் திருநாட்டின் அனைத்துப் பகுதியிலும் சிவனும் சக்தியுமாக பழங்குடி முன்னோர்களே தெய்வமாக இருந்து அருள் பாலிக்கின்றனர், என்ற அறிஞர்களின் கருத்துக்கள் எவ்வளவு பெரிய உண்மைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

பழங்குடிகளின் தென் இந்திய தமிழும் வடஇந்திய சமஸ்கிருதமும் பழங்குடியைச் சேர்ந்த ரிஷிகளும் முனிவர்களும் பேசி வளர்த்த மொழியே ஆகும். எனவே தென்னிந்திய மொழிகளும் வட இந்திய சமஸ்கிருதம், இந்தி மொழிகளாகவும் இன்றைய அளவில்

படிப்படியாக வளர்ச்சி அடைந்த மொழிகளாக இருந்து வருகின்றன. தமிழும் சமஸ்கிருதமும் சமமாகக் கலந்த மொழிகளையே மக்கள் இன்று பேச்சு வழக்கில் பேசுகின்றனர்.

அன்று இடி, மின்னலாக இயற்கையை வணங்கிய பழங்குடிகள் இன்றளவும் இயற்கைச் சக்திக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்து வருகின்றனர். எனவே, இந்து மத ஸ்தாபகர்கள் என்பவர்கள் பழங்குடி மக்களே என்பதை இந்தியச் சமுதாயம் போற்றிக் கொண்டாடுவதும் பின்பற்றி வாழ்வதும் இன்றைய இந்தியத் தமிழர் வாழ்வியல் கண்ணோட்டமாகவே இருந்து வருகின்றன.

ஏழு செங்கற்களை நட்டுவைத்து சக்தியை வழிபடும் பழங்குடி தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னொரு செங்கல்லையும் நட்டுவைத்து இதுதான் சிவன் இதுதான் சிவலிங்கம் என, இந்து மத வழிபாட்டை மேன்மையுறச் செய்வதே பழங்குடி சமுதாயத்தின் தலையாய கடமையாகும். பழங்குடி மக்கள் இனிமேலும் கோயிலைத் திறந்து விடுங்கள். எங்களைக் கோயிலின் உள்ளே வழிபாடு செய்ய அனுதியுங்கள் என போராடுவதையும் கெஞ்சுவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஆயிரம் ஆண்டுகட்கு முன் பழங்குடி மக்களின் சார்பில் சேந்தனார் சாத்வீகமாகவும், பிறருக்குத் தொண்டு செய்து வாழ்வதைக்கடமையாகவும் நமக்காக விட்டுச் சென்றுள்ளார், கற்றுத்தந்துள்ளார் என்பதை தலித் பழங்குடிகள் மனதிற்கொள்ள வேண்டும்.



இந்திய அளவில் அருளடியார் சேர்ந்தனாருக்கு ஆதிநாவிடர்களின் சார்பில் நடத்தப்பட்ட முதல் குருபூஜைவிழாவின் செய்திகளை வெளியிட்ட தினகரன், தினமலர் நாளிதழ்கட்கு நன்றி.

சேந்தனார்

❖ குருபூஜை விழா

அண்ணாமலை நகர், பிப். 16, அருளடியார் சேந்தனாரின் குருபூஜை விழாவை முன்னிட்டு சிதம்பரம் மாலைகட்டித்தெரு ஆறுமுக நாவலர் நிலையத்தில் அருளடியார் சேந்தனார் வாழ்க்கை வரலாற்று வரிவுரைகள், சொற்பொழிவுகள் நடந்தது.

பேராசிரியர் சீனுவாசன் தலைமை தாங்கினார். புலவர் நாகப்பன் வரவேற்றார். புலவர் பொன்னம்பலம் முன்னிலை வகித்தார். செந்தமிழ் மக்கள் இசைக்குழு ஓதுவார் தில்லை பன்னீர் திருப்பல்லாண்டு பாடல்களைப் பாடினார். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை இலக்கிய பேரவை கவிஞர்கள் மூர்த்தி, சாரதிதாசன் ஆகியோர் கவிதை வாசித்தனர்.

ஆசிரியர் ஜெயராமன், நாரண.மணிவண்ணன் ஆகியோர் பேசினர். சேவாதள காங்கிரஸ் கூடுதல் அமைப்பாளர் சரவணகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

செல்லத்துரை நன்றி கூறினார்

நன்றி தினகரன்
16.2.2009

சேந்தனார்

❖ குருபூஜை விழா

சிதம்பரம் பிப்.15 சிதம்பரம் ஆறுமுக நாவலர் நிலையத்தில் அருளடியார் பக்த சேந்தனார் குருபூஜை விழா நடந்தது.

பேராசிரியர் டாக்டர் சீனிவாசன் தலைமை தாங்கினார். சிவநெறிச் செல்வர் பொன்னம்பலம் முன்னிலை வகித்தார்.

புலவர் நாகப்பன் வரவேற்றார், சரவணகுமார், S.K.மூர்த்தி, நாரண.மணிவண்ணன், சாரதிதாசன், ஜெயராமன் உட்பட பலர் பேசினர்.

நன்றி தினமலர்
15.02.2009

❖ நன்றி உரைகள்

ஆசிரியர் பயிற்சியில் சேரும்பொழுதே எழுத்தாளராகச் சேர்ந்தவன் நான். பயிற்சி முடிந்து வெளிவரும்பொழுது வாழ்லி த்துரைவழங்கி ஆசிர்வதித்து அனுப்பிய பெருமைக்குறிய, தலைமை ஆசிரியர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கட்கு நெஞ்சு நிறைந்த நன்றியை வாரி வழங்குகிறேன்.

இன்றும் சமுதாயப் பணியை கண்ணும்கருத்துமாக ஆற்றிவரும், சிறந்த அறிஞரும் உயர்ந்த கவிஞரும், பெரும் படிப்பாளியும், நேர்மையான நிர்வாகியும் ஆகிய எனது வேண்டுகோளுக்கு ஏற்ப சேந்தனார் வரலாற்றை பல்வேறு ஊடகங்களில் இழையோடவிட்ட டாக்டர் ஆ.பத்மநாபன் I.A.S. அவர்கட்கும் என்னுடைய அன்பான நன்றிகள் பல.

ஐம்பது ஆண்டுகள் நட்புடன் பழகி, குருவாக இருந்து என்னை ஓர் எழுத்தாளராக்கி, எழுத்துப்பட்டறையாக இருந்து நான்காண்டுகள் பத்திரிகைத் துறையிலும் எழுத்துப் பயிற்சி தந்த வரகூர் கலைமாமணி ஆ.க.முத்துக்குமாரசாமி அவர்கட்கு என் மனம் கசிந்த நன்றிகள் பல.

மேன்மையான தலித் எழுத்தாளரும், மு.கா.தோட்டம் மங்கை பதிப்பக உரிமையாளரும், பல்வேறு தலித் நூல்களின் ஆசிரியரும் ஆகிய பேராசிரியர் பெருந்தகை டாக்டர் ப.சீனிவாசன் அவர்கட்கும் அன்பு நன்றிகள் பற்பல.

சேந்தனார் வரலாற்றையும், நாடகத்தையும் சேந்தனார் கட்டுரைகளையும் தனது நன்னீர் குளம் மாத இதழ் மூலமாக வெளியிட்டு பெருமைப் படுத்தி வரலாற்றை வெளிக்கொணர்ந்து அணிந்துரை வழங்கி பதிவு செய்து - உற்சாகமூட்டிய உளுந்தூர்பேட்டை அன்பு நண்பர் டாக்டர் உ.சுப்பிரமணியன் அவர்கட்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆசிரியர் கடிதங்களின் மூலம் எனது சமுதாயக் கருத்துக்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியும், முதன் முதலில் சேந்தனார் வரலாற்றைச் சுருக்கமாகப் பதிவு செய்தும், உறுதிப்படுத்தியும் ஆதரவு வழங்கிய தினமணி நாளிதழுக்கும், அதன் ஆசிரியருக்கும் அன்பான நன்றிகள் பல.

சிறந்த முறையில் கம்ப்யூட்டரில் பதிப்பித்து தந்த M/s வீரா கம்யூட்லிடர்ஸ் நிறுவனர் நடராஜ் அவர்கட்கும் அவர்தம் சகோதரார்கட்கும் நன்றிகள் பல.

என்னுடன் சேந்தனார் குருபூசை விழாக்களில் பங்குகொண்டு சிறப்புச் செய்தும், இந்நூலில் வரும் திருவிடைக்கழி ஆலய புகைப்படங்களை கலைநேர்த்தியுடன் எடுத்துத்தந்து பதிவு செய்து ஆதரவு நல்கிய சிதம்பரம் வஉ.சி.கலை இலக்கியப் பேரவை தலைவர் கவிஞர் S.K.மூர்த்தி அவர்கட்கும், கவிஞர் சாரதிதாசன், இசைக்கலைஞர் தில்லை பன்னீர், புலவர் நாகப்பன் P.செல்லத்துரை தோழர் இளம்பாரதி ஆகியோருக்கும் எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சேந்தனார் வரலாற்று நூலை கம்பீரமான தோற்றத்தடன் அச்சிட்ட, சிறந்த முற்போக்கு சிந்தனையுடன், தொழில் அதிபராகவும், அறிஞராகவும், உழைப்பாளியாகவும், சிதம்பரம் ரோட்டரி சங்க தலைவராகவும், இன்று சமுதாயப் பணியும், கல்விப்பணியும் ஆற்றிவரும் மணிபாரதி அச்சக உரிமையாளர் உயர்திரு ச.மணிவண்ணன் அவர்கட்கும் அவருடைய அன்பான ஊழியர் குழுவிற்கும் அன்பு நன்றிகள் உரித்தாகுக.

ஆனந்தச் சேந்தன்

தில்லைதிருப் பல்லாண்டு
தேரோடப்பாடியவன்
திருக்குலத்துச் சேந்தன் என்பேன்.
தில்லைவாழ்ச் சான்றோர்கள்
தினம் போற்றிப் பாடுகின்ற
திருக்களிற்றுச் சேந்தன் என்பேன்.
அல்லல்கள் சூழ்ந்தாலும்
தில்லையைச் சேவிப்பான்
ஆன்மீகச் சேந்தன் என்பேன்.
அடியாரைத் தினம் பார்த்து
விடியும்வரை காத்திருப்பான்
ஆனந்தச் சேந்தன் என்பேன்.
நல்லடியார் பட்டினத்தார்
சேவகனாய் வாழ்ந்தவனின்
நாவன்மைப் பாடு மனமே!
நடமாடும் கூத்தன்பசி
தீர்த்தவனின் அற்புதத்தை
நலமாகத் தேடு மனமே!

– கவிஞர் நாரண.மணிவண்ணன், M.A.,

தேசிய விஞ்ஞான பப்ளிகேஷன்ஸ்